ஓம்

"ஒன்றுபட்டா லுண்டு வாழ்வே — நம்மில், ஒற்றுமை நீங்கில் அனைவர்க்குந் தாழ்வே."

# ஈழகேசரி

சிறந்த தேசியத் தமிழ் வார வெளியீடு.

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவருவது)

"நன்மை கடைப்பிடி"     "நயனொடு நன்றி புரிந்த பயனுடையார், பண்பு பாராட்டு முலகு"     "நாடோப்பன செய்"

வாழ்க அந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக, ஆழ்க தீயதெல் லாமர னாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

தொகுதி—சு. } யாழ்ப்பாணம், சுன்னாகம்: யுவஹூ பங்குனிமீ உசவ (5-4-36) ஞாயிற்றுக்கிழமை { பகுதி—நஅ.


### தோத்திரம்

பன்மாலைத் திரளிருக்கத் தமை யுணர்ந்தோர் பாமாலைக் கேநீதான் பக்ஷ மென்று
நன்மாலை யாவெடுத்துச் சொன்னார் நல்லோர் நலமறிந்து கல்லாத நானுஞ் சொன்னேன்
சொன்மாலை மாலையாக் கண்ணீர் சோரத் தொண்டனேன் எந்நாளுந் துதித்து நிற்பேன்
என்மாலை யறிந்திங்கே வாவா என்றே எனைக்கலப்பாய் திருக்கருணை யெம்பி ரானே. —தாயுமானசுவாமிகள்

## நெஞ்சொடு கிளத்தல்

(1927-ல் சென்னையில் நடந்த காங்கிரஸில் திரு. எஸ். சீனிவாசய்யங்கார் அவர்களால் தங்கப்பதக்கம் பரிசுபெற்ற தேசியப்பாட்டுகள்.)

அறுசீர் விருத்தம்

1. நாட்டை மறந்தனை மனமே
 நாளுமிங் கெளியவர் வருந்தும்
பாட்டை நினைந்திலை சிறிதும்
 படித்தனை யதன்பயன் இதுவோ
பூட்டிய விலங்குடன் புலம்பும்
 பெற்றபொன் னாட்டினைப் போற்றாய்
ஏட்டிற் படித்தனை வேதம்
 ஏதும்உன் செய்கையில் இல்லை!

2. வேதம்வே தாந்தங்கள் வளர்ந்து
 வேண்டிய வளம்முற்றும் பொருந்திப்
பூதங்கள் விபத்துக்கள் குறைந்து
 பூமியில் இணையற்ற நாட்டில்
சாதமும் வயிற்றிற்கில் லாமல்
 சாகாதும் பிணமெனத் தளர்ந்தோம்
ஏததன் காரணம் என்றே
 எண்ணவும் மாட்டனை நெஞ்சே!

3. தன்னுயிர் போற்பிற உயிரைத்
 தாங்கிய பெரியவர் வாழ்ந்து
பொன்னெளி பேசிய நாட்டின்
 புகழறம் நீபிறந் தழித்தாய்
அன்னியர்க் குளவுகள் சொல்லி
 அவர்தந்த எச்சிலை அருந்தி
உன்னுடன் பிறந்தவர் வருந்த
 உடல்சுகித் திருந்தனை மனமே!

4. மாற்றவர்க் கிடங்கொடுத் தேழை
 மக்களைப் பிழிந்துடல் வளர்த்தாய்
கூற்றுவன் கணக்கிடும் நாளில்
 கூறுவை பதிலென்ன மனமே!
வீற்றிருந் தாண்டஉன் அரசை
 விற்றுடல் சோம்பினை யினிமேல்
ஆற்றுவை இப்பழி அகற்ற
 அன்னையின் விடுதலைக் கறமே.

5. சொந்த சுதந்திரம் மறந்தாய்
 சோற்றினுக் குடல்சுமந் திருந்தாய்
பந்தம கன்றிட நினையாய்
 பாரதத் தாயினைப் பாடாய்
அந்த மிலாதவன் செல்வம்
 அன்னியர்க் கிழந்தனை குடிகள்
கந்தையும் கஞ்சியும் அற்றார்
 காரணம் நீயெனக் கருதாய்.

6. அடிமையிற் பழகினை பொழுதும்
 ஆண்மையை மறந்தனை முழுதும்
குடிமுறை குறைந்தனை சிறிதும்
 குலமுறை நினைந்திலை பெரிதும்
மிடிமையிற் கிடந்ததுன் நாடு
 மேன்மையை இழந்ததுன் வீடு
மடமையில் மயங்கியிப் பிறப்பின்
 மகிமையை மறந்தனை மனமே!

7. கொண்டவள் குலக்கொடி வாடக்
 கூத்தியர் மையலிற் குழையும்
வண்டர்கள் எனவல்ல முன்னோர்
 வழக்க ஒழுக்கத்தை மறந்து
கண்டவர் சிரித்திடக் களித்துக்
 கற்றவர் மொழிகளைப் பழித்து
அண்டிய அயலவர் மயக்கால்
 அழித்தனை மனையறம் அறிவோ...

8. ஜாதியை மதத்தினைப் பழித்துச்
 சண்டையில் உவந்தனை மனமே
வாதுகள் மிகுந்தன நாட்டில்
 வறியவர் வரிகளால் வருந்த
ஏதினி விடுதலை எனவே
 யாவரும் ஏங்கினர் நல்லோர்
ஓதிய ஒற்றுமைக் குழைத்து
 ஒப்புற ஒழுகுவை உயர்வாய்.

9. தேனுள்ள தாமரை மேலே
 தினமுள்ள தவளையைப் போல
நானுள்ள இப்பெரும் நாட்டின்
 ஞானமெல் லாந்திரண் டாற்போல்
ஊனுள்ள தேகத்தி னோடும்
 உன்முன்னே காந்தியொன் றுற்றும்
ஏனென்ன என்றலை மனமே
 இருந்தென்ன போயென்ன நீயே.

10. ஆண்டவன் உனக்கென்ற நாட்டில்
 அன்னியர்க் கரசளித் தடிமை
பூண்டுடல் வளர்த்தனை நெஞ்சே
 புண்ணியம் உனக்கிலை நரகே
மீண்டுமுன் நாட்டினை மீட்க
 மெய்ப்பொருள் ஆவியும் ஈந்து
ஆண்டொழில் புரிகுவை யாயின்
 ஆன்ம சுதந்திரம் அடைவாய்.

எதிர்பாருங்கள்! எதிர்பாருங்கள்!!

# "ஈழகேசரி ஆண்டுமலர்"

## தாதுவஹ சித்திரைத்திங்கள் க-ம் (13-4-36) நாளின்முன் வெளிவரும்

சிறந்த காகிதத்தில் 100 பக்கங்களுக்குமேலுள்ளதாயும் இலங்கை, இந்தியாவிலுள்ள சிறந்தபேரறிஞர்களின் அரியபெரிய கட்டுரைகளுடனும் நிழலுருவப்படங்களுடனும் இவ்வாண்டுமலர் வெளிவரும்

பிரதிகள் பெற்றுக்கொள்ள விரும்புவோர்
முற்பணமனுப்பித் தங்கள் பெயரைப் பதிவுசெய்துகொள்ளுதல்வேண்டும்

பிரதி ஒன்றின் விலை சதம் 50. அணா 8. மலாய்நாட்டுக்கு காசு 50.
தபாற்செலவு சதம் 16. அணா 3. காசு 20.

'ஈழகேசரி' அதிபர், சுன்னுகம்.

விளம்பரம் செய்வதற்கு விசேட வசதி!

## ஜெயில் காட்டுக்குத் திருக்கைவாலடி

### சங்கீதக் கருவி காரணமாம்

(நமது நிருபர்)

யாழ்ப்பாணம் 30வ

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் செயில் காட்டாகவிருக்கும் துரையப்பா மாரிமுத்து என்பவரைத் திருக்கைவாலினுலும் பொல்லினுலும் அடித்துக் காயமுண்டாக்கியதாக (1) கோவிந்தசாமி, (2) கனகசுந்தரம், (3) கிருஷ்ணசாமி, (4) பண்டா முதலியவர்களுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கு இன்று மீண்டும் விசாரணைக் [illegible] பட்டது.

இன்றையதினம் காயமடைந்தவராகிய மாரிமுத்து கூறிய வாக்குமூலத்தின் சாராம்சம் வருமாறு:—

"அன்றையதினம் 1-ம் எதிரி வந்து 'அடே மாரிமுத்து' எனக் கூப்பிட நான் படலையடிக்குச் சென்றேன். அப்போது 1-ம், 2-ம் எதிரிகள் திருக்கைவாலினுலும் 3-ம் எதிரி பொல்லினுலும் அடித்தார்கள். 4-ம் எதிரியை 3-ம் எதிரி கூப்பிட்ட சப்தம் கேள்விப்பட்டதேயன்றிக் காணவில்லை. எனக்கு அனேக காயங்களுண்டாகியன. அடிகள் விழ்ந்ததும் அறிவுமயங்கிக் கீழே விழ்ந்துவிட்டேன். எனது தகப்பனுராகிய துரையப்பா சங்கீதக் கருவியொன்றைக் களவாடியதாக 1-ம் எதிரியின் தகப்பனுராகிய இராசகோபால் மீது ஓர் வழக்குத்தொடர்ந்திருக்கிறுர். அதுவே இதற்குக் காரணம் என நினைக்கிறேன்.

நீதிபதி வழக்கைத் தவணையிட்டார்.

## வங்கி மனேஜருக்கு அடி

யாழ்ப்பாணம் 30வ

இன்றையதினம் சீதாரிவாசியாகிய எஸ். ஐயாத்துரை என்பவர்க்கு எதிராக யாழ்ப்பாணம் கொய்லன் வங்கி மானேஜரான V. C. ஓமன் என்பவர் தன்னை அடித்ததாக ஓர் முறையீட்டைத் தாக்கல் செய்தார்.

### முறையீட்டின் சாராம்சம்.

கடந்த 27-ந் திகதியன்று நியாயதுரந்தரர் சாம். வ. சபாபதி அவர்களது வீட்டிற்குப் பக்கமாக வரும்போது யாரோ பிற்பக்கமாக நின்று அடித்தார். அவ்வடி எனது தோளில் வீழ்ந்ததும் திரும்பிபார்த்து எதிரியைக் கண்டு பிடிக்கமுயல அவன் ஓடிவிட்டான். எனதுவங்கியிலும் மாமாத் தம்பியினது குதிரை வண்டியிலும் இவனைக் கண்டிருக்கிறேன்.

நீதிபதி எதிரியைப் பிணையில் விடுத்து வழக்கை 28-ந் திகதிக்கெனத் தவணை யிட்டார்.

## வர்க்குச் சீட்டுப்போடும் ஸ்தானமாக மாறிய மரக்கலம்

ஜெர்மன் பொதுத்தெரிவில் வாக்குச்சீட்டுப் போடுவதற்கு ஓர் மரக்கலம் ஸ்தானமாக உபயோகிக்கப்பட்டது. அநேக ஜெர்மனியர் எகிப்திலிருந்ததால் அவர்கள் தங்கள் வாக்களிப்பதற்காகவே மரக்கலத்தை உபயோகித்தார்கள். மரக்கல உத்தியோகத்தர்கள் தேர்தல் முடிந்ததும் வாக்குச் சீட்டுகளை எண்ணி கம்பியில்லாத் தந்திமூலம் ஜெர்மனிக்கு அறிவித்தார்களாம்.

யாழ்ப்பாணம் சுப்பிரீங்கோடு

## 300 ரூபாவில் 3 வருட நன்னடத்தை

(நமது நிருபர்)

யாழ்ப்பாணம் 30

யாழ்ப்பாணம் சுப்பிறீம்கோட்டில் நீதியரசர் திரு. M. T. அக்பார் அவர்களதும் ஆங்கிலம் பேசும் ஜூரிக் கனவான்களதும் முன்பாக சென்ற ஆவணி மாதம் 20ந் திகதி யளவில் சுதுமலை வாசியாகிய கறுவல் சின்னவன் என்பவனை அடித்து அவனது மரணத்தை உண்டாக்கியதாக அவ்வூர் 1. நாகன் செல்லன், 2. சின்னவன் தம்பன், 3 சின்னவன் வேலன் 4. சின்னவன் காத்தி முதலியவர்கள் மீது தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

### வழக்கின்சாரம்.

வழக்காளி சார்பாக முடிக்குரிய நியாயவாதி F. C. லூயிம், எதிரிகள் சார்பாக நியாயதுரந்தரர் C. செல்வரத்தினத்தின் அநுசரணையின்பேரில் நியாயவாதிகள் S. D. தம்புவும், C. சண்முகமும் விவாதித்தார்கள்.

சம்பவம் நடைபெற்ற இரவில் எதிரிகள் யாவரும் காலகதியடைந்தவனுகிய சின்னவன் வீட்டிற்குக் கற்களாலெறிய சின்னவன் தனதுவீட்டுப் படலைக்குப் போனுன். அவனைத்தொடர்ந்து அவனது மனைவியாகிய தெய்வானையும் 1ம் எதிரியினது மனைவியாகிய கண்ணகையும் போனுர்கள். சின்னவனை எதிரிகள் கண்டதும் 1ம் எதிரி அவனது தலையில் ஓர் பொல்லினுல் அடிக்க 2ம்எதிரியும் அடித்தான். 3ம் 4ம் எதிரிகளும் அவனை இழுத்து அடித்தார்கள். காயமடைந்தவன் அடியினுல் மயங்கிக் கீழேவிட எதிரிகள் ஓட்டமெடுத்தனர். பின்னர் இதுசம்பவத்தைப் பொலிஸ் விதானைக்கு அறிவிக்கப்பட அவர் அவனை ஆஸ்பத்திரிக்கு ஏற்றிச்சென்றுர். அங்கு அவன் 26ந் திகதியன்று காலமானுன். 1ம் எதிரியினது மனைவியாகிய கண்ணகை யென்பவள் 2ம், 3ம், 4ம் எதிரிகளின் சகோதரன் சண்முகத்தானது மகளாவள். இவனும் இறந்தவனும் அக்காள் தங்கையை விவாகஞ் செய்தவர்கள். கண்ணகையென்பவள் தனது கணவனைப் பிரிந்து அவன்மீது ஜீவனும்ச வழக்குத் தொடர, காலகதியடைந்தவனுகிய சின்னவன் கண்ணகைக்கு உதவிபுரிந்தான். இது சம்பவம் நடைபெற்றவன்றும் 1ம் எதிரி தாபரிப்புப்பணம் கட்டத்தவறினதால் பொலிஸ் நீதிபதி அவனுக்கு 6 மாசச் சிறைத்தண்டனை விதிக்க, எதிரி சிறிது தொகையான பணத்தைக் கோட்டில் கட்டிவிட்டு வீட்டிற்குச் சென்று இச்சம்பவத்தை உண்டாக்கியதாக நம்பப்படுகிறது.

டாக்டர் K. இராசா. சின்னவன் பெண் தெய்வானை முதலியோர்களை விசாரணை செய்யப்பட்டதின் மேல் ஜூரிமார்களது அபிப்பிராயப்படி எதிரிகள் நால்வரையும் தனித்தனி 300 ரூபா பிணையில் 3 வருடகாலத்திற்கு இருத்தல் வேண்டுமென நீதியரசர் கூறினுர்.

கூற்றங் குதித்தலுங் கைகூடு நோற்றலி, ஞற்ற றலைப்பட்ட வர்க்கு.

பத்திரக்கிரயம்
இலங்கை, இந்தியா, பர்மா ரூபா 4.
மலாய்நாட்டுக்கு வெள்ளி 4.
சீவியசந்தா ரூபா 40.
தனிப்பிரதி சதம் 5.
இந்தியாவுக்கு ,, அண 1.
மலாய்நாட்டுக்கு ,, காசு 7.

# ஈழகேசரி

விளம்பரவிகிதம்
முதன்முறைக்கு
ஒருகலம் ரூபா 7-00
,, அரைக்கலம் ,, 4-00
,, கா்கலம் ,, 2-50
அரசியல்சம்பந்தமான விளம்பரங்களுக்குச் சலார் வேறு.

தொகுதி—கூ. } யாழ்ப்பாணம், சுன்னுகம்: யுவஹூ பங்குனிமீ உசவ (5-4-36) ஞாயிற்றுக்கிழமை. { பகுதி—நஅ

## நாகர்.

[“விவேகானந்தசபை” இயற்றமிழாசிரியர்
சிவங். கருணலயபாண்டியப் புலவர் அவர்கள்.]

(பதிப்புரிமை ஆக்கியோர்க்கேயுரித்து.)

(முற்றொடர்.)

அன்றியும் நாகரென்னும் உயர்திணை ஆணொருமையீறும் நாகர் என்னும் அத்திணைப் பன்மையீறும் வடமொழிக்கிலவாம். இனி, நாகவென்னும் அகரவீற்று வடசொல் ஒருமைச் சொல்லாதலின் அது நாகரென்னும் பன்மைப்பொருளும் உணர்த்துமென்றல் தந்நூலொடு மாறுகொளக் கூறலும் மரபு வழூவுமாய்ப் பொருட்பேறின்றாகும். இனி நாகா வென்னும் அகரவீற்று வடசொற் பன்மை சிதைந்து நாகரெனத் தமிழாயிற்றெனின், நாகர் என்னுந் தமிழ்ச்சொல் உண்டாதற்கு முன்னர் நாகா வென்னும் வடசொல் அந்நாட்டினரது வழக்காற்றி லுளதாதல் வேண்டும். அங்ஙனமின்றிக் கி. மு. ஆறும் நூற்றுண்டின் முன்னர் வடமொழியொன்றுண்டென்பதே யறியாதாரிடத்து நாகரென்னும் வாய்பாட்டுப் பெயரே வழங்கிற்றெனத் தெரியப்படுதலின், அது பொருந்தாது. அதனுனன்றே கிரீட நாகரெனவும் வழங்கப்படாது முடிநாகரென்னுந் தமிழொன்றுமே வழங்கப்படுகின்றது. முடிநாகராயர் என்புழி ராஜ என்னு மாரியச் சொற் சிதைந்து ராய ரென வந்த வடமொழிப்பெயர் வழங்கப்பட்டதாதலின் நாகரென்னுஞ் சொல்லும்வடமொழியேயாம். கி. மு. ஆறும் நூற்றுண்டின் முன்னரும் வடமொழி வழங்கப்பட்டிருத்தல் வேண்டுமெனின் ராயரென்பது வருமொழியாயினன்றே அஃங்ஙனமாவது. அதுவன்றி இஃது ஆயரென்பதாதலின் அக்கொள்கைபொருந்தாது. என்னை? முரஞ்சியூர் முடிநாகராயர் இருவர் இருந்தனராக இப்பொழுதுஉணரப்படுகின்றனர். அவருள் முன்னோராவார் இறையனுர், முருகவேள், முனிவர், அகத்தியனுர் முதலியோரோடொப்பத் தலைத் தமிழ்க் கழகத்துப் புலவராய் வீற்றிருந்தார் எனக் களவியலுரையிற் கூறப்பட்டவராவர். ஏனைப் பின்னோர் வெண்டேர்ச் செழியன் முதல் முடத்திருமாறன் ஈறுகப் பாண்டியர் ஐம்பத்தொன்பதின்மரின் வாயிலூரின் (கபாடபுரம்) இரீஇ மூவாயிரத்தெழுநாற்றியாண்டு கிகழ்ந்த இடைக்கழகத் திறுதியைச் சார வீற்றிருந்தார். இவர் தாம் சேரமான் பெருஞ் சோற்றுதியஞ் சேரலாதனைப் பாடியவர். எனவே உதியஞ்சேரல் பாண்டவர் படைக்குப் போர்க்களத்தின்கண் அறப் பெருஞ்சோறு நல்கினுதலிற் பாண்டவர் காலமும் முதியஞ்சேரல் காலமும் இரண்டாம் முடிநாகராயர் காலமும் ஒன்றென்பது பலரு முணர்ந்ததேயாம். அக்காலம் இற்றைக்கு ஏறக்குறைய மூவாயிரத்தெண்ணூறியாண்டிருக்குமென்க. எனவே கி. மு. பத்தொன்பதாம் நூற்றுண்டின் தொடக்கமெனக் கொள்க. கடவுளரொடொப்ப வீற்றிருக்கும் அத்துணைக் கடவுட் புலமைவாய்ந்த முதலாம் முடிநாகராயர் சேரமானை முன்னிலையிற் பாடுதல் பொருத்தமின்மையானும் அவர் வேறென்பது பெறும். பெயரொற்றுமையானும் முரஞ்சியூரெனும் அடையொற்றுமையானும் இருவரும் ஒருவரேயென மயக்கங்கொண்டு முதற் கழகம் பாண்டவர் காலத்ததெனக் கூறுவாருமுளர். அக்கூற்று முற்பட்டசான்றோர்வழக்கொடு முரணுமாதலிற் சான்றில்லாக் கூற்றுமென்க. என்னை? வாயிலூர்க்கண் இரீஇய இடைக்கழகம் பாண்டவர் காலத்துக்கு முந்திய இராமர் காலத்ததென்பது பலரும் ஒப்ப முடிந்ததாதலின் அதற்கு முந்திய முதற்கழகம் இராமர்காலத்துக்கு முற்பட்ட காலத்தின் கண்ணதெனப் பெறப்படுதலானும் முதற்கழகத்தார் நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு வீற்றிருந்தாரெனவும், இடைக் கழகத்தார் மூவாயிரத்தெழுநூற்றியாண்டு வீற்றிருந்தாரெனவும் கடைக்கழகத்தார் ஆயிரத்தெண்ணூற்றைம்பதிற்றியாண்டுவீற்றிருந்தாரெனவும்கூறுதலெல்லாம் பொய்யாமொழியாதலானும் அங்ஙனமாயின் முரஞ்சியூர் முடிநாகராயரெனப்படும் ஒருநல்லிசைப்புலவரேஇல்லையென்றலும்பொருந்துமாதலானுமாம். நல்லிசைப் புலமை யொப்புமையானும் ஒரு குடியும் ஒருரு முடைமையானும் அச்சிறப்புப்பற்றி இரண்டாமவரும் முதலாமவரைப்போல நன் மக்களான் நன்கு மதிக்கப்பட்டமையான் முரஞ்சியூர் முடிநாகரெனவே வழங்கப்பட்டனர். முதலாம் இரண்டாமென்றாற்போல அடையடுத்தல் அக்கால வழக்கன்மையான் அங்ஙனஞ் சொல்லப்பட்டிலர். அங்ஙனமன்றாயினும் தந்தை பெயர் முதலிய விதப்பு மொழிகளான் வழங்கப்பட்டிருத்தல் வேண்டுமாலெனின், வேண்டினும் அங்ஙன மிவர்பெயர்க்கு அடையடுத்து வருதல் அத்துணைச் சிறப்பின்றென்பது கருதி வழங்கப்படாதிருத்தலும் கூடும் அன்றேல் அக்காலத்து வழங்கப்பட்டுப் பின்னர் ஐயுற்று மறக்கப்பட்டு வழக்காறொழிந் திறந்ததுபோலும். ஔவையெனப் பெயர் கூறப்படும் நல்லிசைப்புலமை மெல்லியலாரும் இருவராயினும் வேறுபடுக்கும் அடை வழங்கப்படாமையுங் காண்க. பாரதம் பாடிய பெருந்தேவனுர் இருவர் உளராயினும் அடைமொழிகளான் வேறுபடுத்து வழங்கப்பட்டிலர். அதனுன் அவர்போல்வார் செய்யுட்களுட் சிலவும மயங்கிக்கொள்ளப்படுகின்றன. அதுபோல முடிநாகராயர் வரலாறுகளும் மயங்கிக் கோள்ளப்படுதலின்கண் வியப்பொன்றுமின்று. பெருந்தலைச் சாத்தனுராற் பாடப்பெற்ற பல்குன்றக்கோட்டத்துச் செங்கண்மா நன்னனும் அவன் மகன் இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனுராற் பாடப்பெற்ற நன்னனும் அடைபடாது ஒரு பெயருடையதாதல் காண்க. ஆயினும் இவர் பிற்காலத்தினராகலின் வேற்றுமைதெரிந்த உலகம் முறையே பெண்கொலை செய்த நன்னனெனவும் நன்னன் மகன் நன்னனெனவும் வழங்கும். எனவே வேறு வேறெனத் துணியப்பட்ட இரு முரஞ்சியூர் முடிநாகராயர் காலத்தின்கண்ணும் செந்தமிழ் மொழியினைச் செப்பஞ்செய்யும் நூலாவன முறையே அகத்தியமும் தொல்காப்பியமும் முதலியன வென்பவாதலின் அந்நூல்களுள் மொழிக்கு முதலாகாதென விலக்கப்பட்ட ரகரம் முதலா மாறும் குறித்துவரு கிளவியாய்ப் புணர்ச்சி பெறுமாறும் தழுவப்படாவாகலின் ராயரென்பதன்று ஆயரென்பதேயாம் அச்சொல் எனக் கொள்க. அங்ஙனங் கொள்ளாதொழியின் அவ்விருவரும் நல்லிசைப் புலமைத் தொல்லியற் சான்றோராகாரெனவும் மறுக்க. ஆய் எயினன் ஆய்வேள் என்றாற்போல ஆயனென்பதூஉம் அக்காலத்து வழங்கியதோ ரியற்பெயரேபோலும். ஆகவே நாகராயரென்னுந் தொடர் பொதுப் பெயரும் சிறப்புப் பெயருமொட்டிநின்ற இருபெயரொட்டுப் பண்புத்தொகை நிலைத்தொடராம். அதூஉம் நாகனுயனுர் என வரற்பாலதன்றி நாகராயர் என வருதல் வழூஉவாமென்க. அவ்வழூ பிற்காலத்து வழூவமைக்கப்பட்டதன்றி முன்னைக்காலத்ததன்றுதலான்.

இனி, நாகனுயனுர் என வழங்குவதற்கு யாதொரு மேற்கோளுமின்றாலெனின் அங்ஙனமுய்த்துணர்ந்து கோடல் பலர்க்கு முடன்பாடன்றாயின், முடிநாகனுரென்றே வழங்கப்பட் டிருந்திருத்தல் வேண்டும். பின்னுள்ளோர் தாந் திரியக்கொண்ட கருத்துவகையான் ராயரென்பது புணர்த்து வழக்கொழித்து மரீஇயிற்றாகக்கொண்டு அச்சொல் வருவித்துப் புணர்த்து முடிநாகாராயர் என்று முடித்துப் புதுவழக்கம் காட்டினுரெனக் கோடல் மறுக்கப்படாதாகும். அஃதாமாறு காட்டுதும்:

“உயிரீறாகிய உயர்திணைப்பெயரும்
புள்ளியிறுதி யுயர்திணைப் பெயரு
மெல்லாவழியு மியல்பென மொழிப”

என்னுந் தொகை மரபினுலான் (சூத்திரத்தான்—153) நாகரென்னு முயர்திணைப் பெயர் இயல்பாகாது ரகாரங் குன்றி முடியு முடிபு விலக்குண்ணும். இனி, நாகரென்னுஞ் சொற்றானும் பலரைக் கூறும் பன்மைக் கிளவியாவதன்றி ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியாகவரூஉம் வழக்கினுகிய உயர்சொற் கிளவியாவது என்னை? வழக்கினுகிய உயர்சொற் கிளவியாவது இறையனுர், அகத்தியனுர், தொல்காப்பியனுர், வள்ளுவனுர், நாகனுர் என்றாற்போலத் தன்னொருமையீறு கெடாது நிற்ப ஆரைக் கிளவிபெற்றுத் திரியாது முடிதலேமரபன்றி இறையர், அகத்தியர், தொல்காப்பியர், வள்ளுவர், நாகர் என்றாற்போல ஒருமைஈறு கெட்டு அர் என்னும் ஈறுபெற்று வேறுபட முடிதல் பொருந்தாதென மறுக்க, அச் சொற்களெல்லாம் ஒருமையுணர்த்தாது அவ்வப் பலரையே யுணர்த்துமாதலின். இதுவே வழக்கினுகிய உயர்சொற் கிளவியாகிய ஒருவரைக் கூறும் பன்மைக் கிழவிக்கும் ஏனைப் பலரைக்கூறும் பன்மைக் கிழவிக்கும் வேற்றுமையாமெனக் கொள்க. நாயனுர் எனவரூஉம் ஆரென்னுஞ் சொல் இடைச்சொல்லோத்துள் எடுத்தோதிய ஆளக் கிளவியாகிய இடைச்சொற் கிளவியாமாறும் நாகரென வரூஉம் ‘அர்’ என்பது அன்னதன்றுமாதலின் பெயர்ச்சொல்லோத்தினுள் ‘அவர், இவர், உவர் எனவரூஉம் பெயரும்’ என வாய்பாட்டான் எடுத்தோதிய பாலுணர்த்தும் ஈற்றெழுத்தாமாறும் கண்டுகொள்க. நாகரென்னுஞ் சொல் மயங்காது வழங்கிற்குமாற்றை யுணராது பின்னுள்ளோர் ஒருவரோ பலரோவென ஐயுற்றுச் செலுவான் குறிப்பின் ஒருமைப்பொருளுணருமாறு அகத்தியர், தொல்காப்பியர் என்றாற்போல வடமொழி வழக்குப்பற்றி ஆளுவாராயினர். அவ்வாட்சிகண்டு உரையாசிரியர்களும் எதிரதுபோற்றி மிகையானுதல் உரையிற் கோடானுதல் எடுத்துக்காட்டி வழூவுரைப்பாராயினர். ஆதலின் அவற்றை எடுத்துக்காட்டாகக் கொண்டு நாகர் எனவும் நாகராயர் எனவும் வரூஉம் பலர்பாற்சொல்லை ஒருவர் மேல் வழங்கின் அஃது ஆசிரியர் தொல்காப்பியனுர் காலத்துச் செந்தமிழ் வழக்கன்றென மறுக்க. அதனுன் அக்காலத்து நாகராயரென வழங்கப்பட்டிருத்தல் கூடாமையான் முடிநாயனுர் என்றே வழங்கப்பட்டிருத்தல் வேண்டுமென உய்த்துணர்ந்து கூறினும். களவியலுரை வரைந்த முசிறியாசிரியர் நீலகண்டனுருடைய மாணக்கர் முதலிய பின்னுள்ளோர் முடியென்னு மடைமொழிப் பொருளின் உண்மை து[illegible]ணியமாட்டாமை[illegible] [illegible]டினவே கொண்டாராதலானும் வடமொழியினும் கடவுளர் பதினெண் குழுவினருள் ஒருசாரார் தலைவரையுணர்த்தும் நாகராஜா என்னுஞ் சொல் அடிப்பட்ட பெருவழக்காதல்கண்டு இவரும் அவரோடியைபுடையராய் நாகராஜாவென்றிருந்திருத்தல் வேண்டுமெனக் கருதினுராகலானும் ஆசிரியர் சாமிநாதையர் எடுத்துக்காட்டிய பாண்டியர் கழக வரலாறுரைக்கும் ஓரகவற்பாவிடத்து முடிநாகனென வழங்கப்பட்ட அதனையே நாகராயரெனப் புதுவதாய முடிபாற் புணர்த்து வழங்கிப் போந்தாராகக்கொள்க. அவர் தாம் பாண்டியராயர், சோழராயர், சேரராயர் என வழங்காமைக்குக் காரணம் என்னேவென உசா[illegible]வியும் இஃதே கருத்தாதல் துணிந்துகொள்க. அல்லதூஉம் அரசராயின் முரஞ்சியூர் மன்னன் என்றாற் போல வருதல் வேண்டும். அன்றியும் தம்மோடொத்த சேரமன்னனை யானை முதலிய நால்வகைப் படையும் குடையும் முடியும் முதலிய குறிகளின்றித் தனித்துச் சென்று

(தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க)

# ஸ்ரீமான் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் வாழ்க்கை வரலாறும் வண்டமிழ் வளர்ச்சியும்.

(கொழும்பு "ஆகாயவசனி" நிலையத்தில், வெள்ளவத்தை, திரு. சபாநாதன் அவர்கள், இம்மாதம் 26-ந் தேதியன்று நிகழ்த்திய சொற்பொழிவு.)

(முற்றொடர்.)

தமிழ் நூல்களையச்சிடும் நோக்கத்தோடு மிக ஊக்கமாயுழைத்து, சிந்தாமணி முதலிய சமண நூல்களிற் சிந்தை செல்லாவண்ணம் கச்சியப்ப முனிவரால்இயற்றப்பட்ட தணிகைப் புராணத்தை 1883ம் ஆண்டு அச்சிட்டார். இவ்வருடத்திற்றானே மதுரை ஆலவாயிலவிர்சடைக்கடவுளாற் செய்யப்பட்டு குமாரசுவாமியாற் கேட்கப்பட்டதெனும் பெருமை வாய்ந்த இறையனார் அகப்பொருள் நக்கீரருரையுடன் பிள்ளையவர்களின் குன்றா முயற்சியால் அச்சுவாகனமேறிற்று. இந்நூலுரை தனித்தமிழ்ப்பற்றுடையார் நன்கு பயிலவேண்டிய தொன்றாகும். இந்நூலையச்சிட்டமையான் இலக்கணக்கிரீடத்தில் மிளிர்ந்த பிறிதோர் இரத்தினத்தைமீட்ட பெருமையினைப் பிள்ளையவர்கள் பெற்றார்கள்.

1885-ம் ஆண்டில் பிள்ளையவர்கள் திருக்குடந்தைக்கேகி கறுப்பூரின்கண் சிலகாலம் வசித்தார்கள். இவ்விடத்தில் நியாயதுரந்தரராகவும் கடமைபுரிந்துவந்தார். ஏனைய நூல்களை யச்சிட்டாரேனினும் தொல்காப்பியமே இவருக்கு கனவிலும் நனவிலும் கருத்து: தொல்காப்பியத்தை முற்றாக அச்சிட வேண்டுமென்றே உழைத்து வந்தார். இக்காலத்திற்றானே அதாவது 1855.இல், பொருளதிகாரத்தை நன்கு பரிசோதித்து அச்சுவாகனமேற்றினார். இதனையச்சிட முயன்ற காரணத்தையும் பிள்ளையவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்களாதலின், அதனை உங்கட்குச் சொல்கின்றேன்.

"இவ்வாறு பன்னீராயிர வருஷகாலத்தின் மேற்பட நிலைபெற்றோங்கித் தமிழுக்கோர் தனிச்சுடர்போலப் பிரகாசித்துவந்த தொல்காப்பியமுந் தற்காலத்து இலக்கணங் கற்போர் அனைவரும் அதன்வழித் தோன்றிய சிற்றிலக்கணங்களையே கற்று அம்மட்டோடு நிறுத்திவிடுதலால், எழுதுவாரும் படிப்பாருமின்றிப் பிரதிகளெல்லாம் பாணவாய்ப்பட்டுஞ் செல்லுக்கிரையாகியுஞ் சிதைவுபட்டுப்போக, யாவராயினும் ஒருவர் வாசிக்க விரும்பிய வழியுங் கிடைப்பது அருமையாய்விட்டது. தமிழ்நாடனைத்திலும் உள்ள தொல்காப்பியப் பிரதிகள் இப்போது இருபது இருபத்தைந்திற்கு மேற்படா. அவையும் மிக்க ஈனஸ்திதி அடைந்திருப்பதால் இன்னுஞ் சில வருஷத்துள் இறந்துவிடுமென்று அஞ்சியே அதனை உலோகோபகாரமாக அச்சிடலானேன்" இந்நூல் பிற்றைக்காலத்து மட்டும் அரிதாயதொன்றன்று. கடைச்சங்ககாலத்திற்றானே தொல்காப்பியப் பொருளதிகாரம் மறைந்த நூலாகக் கருதப்பட்டமையின் இதன் பழமையும் வட்டுப்பிரதி தேடியெடுத்தலின் அருமையும் ஒருவாறு புலப்படும். இதனைப் பிள்ளையவர்களும் தமது பதிப்புரையிற் காட்டியிருக்கின்றார்கள்.

"பொருளிலக்கண வாராய்ச்சி குறைவுபட்டது தற்காலத்து மாத்திரமன்று. கடைச்சங்கத்தார் காலத்திலேயே உக்கிரப்பெருவழுதி," நூல் வல்லாரைக் கொணர்க வென்று எல்லாப் பக்கமும் போக்க, எழுத்ததிகாரமுஞ் சொல்லதிகாரமும் யாப்பதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து, பொருளதிகாரம் வல்லாரை எங்குந் தலைப்பட்டிலேமென்று வந்தார். வர, அரசனும் புடைபடக்கவன்று, என்னை? எழுத்துஞ் சொல்லும் யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே!! பொருளதிகாரம் பெறேமேயெனின் இவை பெற்றும் பெற்றிலேம் எனச்சொல்லி வருந்தினான்! என்றும் மதுரை! ஆலவாயெம்பெருமான் இறைவனார் அகப்பொருட்சூத்திரம் அறுபதும் அருளியவழியும் அவற்றின் பொருள் காண்பாரின்றி வருந்திக் கடவுளையே தன் சங்கத்தாரோடு சென்றிரந்து பொருள் காண வல்லானொருவனைப் பெற்றானென்றுஞ் சங்கப்புலவர் சிகாமணியாகிய நக்கீரர் வாயாற் கூறப்பட்டுக் கிடக்கின்றதே. பின்னை இக்காலத்து அதன் அருமை ஆச்சரியமா?"

பிள்ளையவர்கள் பொருளதிகாரம் முற்றும் நச்சினார்க்கினியருரையெனக் கொண்டே பதிப்பித்துள்ளார்கள். பிற்றைஞான்று சேது சமஸ்தான மகா வித்வான் பாஷாகவி சேகரம் ஸ்ரீமத் ரா. ராகவையங்காரவர்கள் "செந்தமிழ்" எனுந்திங்கள் வெளியீட்டில் பொருளதிகாரப் பிற்பகுதிக்கு (மெய்ப்பாட்டியல் உவமவியல், செய்யுளியல் மரபியல்) உரை கண்டவர் பேராசிரியர் என்பதைத் தகுந்த காரணங்கள் காட்டி நாட்டியுள்ளார்கள். பின்னர்த் தேடியெடுக்கப்பட்ட பிரதிகளிலும் பிற்பகுதியுரை பேராசிரியருடையதெனவே காணப்பட்டமையான் யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு இக்காலத்தில் பேராசிரியமெனவே யச்சிடப்படலாயிற்று.

இனி, ஆறுமுகநாவலர் அவர்களின் கலித்தொகைப்பிரதி பிள்ளையவர்கள் கைக்கெட்டினமையான் அதனையும் அச்சிடவேண்டுமென்ற விருப்பான் வேறுபிரதிகளையும் முயன்று பெற்றுப் பரிசோதித்து வந்தார். இந்நூலைச் செவ்வனே அச்சிடுதற்கு வேறுபிரதிகள் வேண்டுமெனத் திருவாவடுதுறை மடாதிபதியவர்கட்கு எழுதியபொழுது அவர்கள் தங்கள் பிரதியுடன் வேறும்பிரதிகள் வரவழைத்துக் கொடுத்தமைகண்டு, அவர்கள் செய்தநன்றிக்குத்தாம் செய்யுங் கைம்மாறுதான் என்னையோ வென வருந்தித்தாம் செய்வதற்குவிரும்பிய இரண்டுசெயல்களைச் செய்யுள்மூலம் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதனையும் படித்துக்காட்டுகின்றேன்.

விண்ணுடைகலை வழித்தேசிகர் வெவ்வினைக்கு நெற்றிக், கண்ணனசுப்ரமண்யசுவாமிகள் கான்மலரை, நண்ணுத் தலையினசை தீரத்தாங்க நர்கோகழிவாய், மண்ணுய்ப் பிறந்திலனே ஐயகோ! இந்த வையகத்தே.

சிரமாலையாகவுஞ் சென்முடியாகவுஞ் செய்யகண்ட, சரமாலையாகவும் யானடியேனினையேன் றருவாய், பரமார்கயிலைப் பரம்பரைக் கோகழிச் சுப்ரமண்யா, மராமாய் நின்பாதகுறடாய் வருதற்கொருவரமே.

இங்ஙனம் கலித்தொகையினையாராய்ந்து வருங்காலத்து பிள்ளையவர்கள் புதுக்கோட்டை சமஸ்தானமகாமன்றத்து நீதிபதிகளி லொருவராக நியமனம் பெற்றார். பெற்றும் நூற்பரிசோதனையைக் கைவிட்டிலர். நூலைப்பரிசோதித்து வந்தபொழுது ஒருவட்டைப்பிரதியிலும் ஏனைய ஏடுகள் யாவும் முல்லைக்கலியுடன் முற்றுப்பெற்றமையால் என்னசெய்வதெனத் தெரியாதேங்கிய பிள்ளையவர்கட்கு இறைவனருளால் பழைய நினைவொன்று தோற்றிற்று. சிலவருடங்கட்குமுன் புதுச்சேரியில் வாழ்ந்த சொக்கலிங்கம்பிள்ளை யென்றோர் தமிழ்ப்பண்டிதரிடம் கலித்தொகையேடு இருந்தமை கண்ட ஞாபகம்வரவே ஆண்டுச்சென்று விசாரித்தபொழுது அந்தவம்சத்தில் இருந்தஏடு நெய்தற்கலியாயிருந்ததுகண்டு பிள்ளையவர்கள் அடைந்த ஆனந்தத்திற்களவில்லை. இன்னும் வேறுசில பிரதிகளையும் சேகரித்து புதுக்கோட்டை மகாராசாவின் மந்திரியும் பிரதிகாவலருமாகிய கௌரவ. அ. சேஷையசாஸ்திரிகள் அவர்களின் பணஉதவிகொண்டு பிள்ளையவர்கள் கலித்தொகையினைப் பிடித்தகலியையோட்டிப் பலசிறப்புகளுடனும் கி. பி. 1887ம் ஆண்டில் அச்சுவாகனமேற்றினர். பிள்ளையவர்கள் இந்நூலில் 'அல்குல்' எனவருமிடங்களை மாற்றியது அவ்வளவு பொருத்தமாகத்தெரியவில்லை. ஏட்டுப்பிரதியிற் கண்டவாறே சொற்களைப்பதிப்பித்தல்நன்று. அன்றியும் மகளிரின் சிறப்பவயவத்தின் இடக்கர்ப்பெயருமாகிய 'கூறேடார்ந்த அன்மொழி' யெனப்பிள்ளையவர்கள் கண்டகருத்தும் இக்காலவறிஞரால் மறுக்கப்படுவதொன்றாம். மகளிரின் சிறப்பவயவத்திற்கு மேலும் அரைக்குக் கீழுமுள்ள இடத்திற்கே இப்பெயர் சாலும் என்பது இக்காலவறிஞர் பலரின்மதம். இங்ஙனம் மாற்றியதன் காரணம் இந்நூல் துரைத்தனவித்தியாசாலைகளிலும் பிறகல்லூரிகளிலும் பாடசாலைகளிலும் பயிலவேண்டுமென்னும் அவாவெனவே பிள்ளையவர்கள் குறிப்பிட்டிருத்தலாற் றெரிகின்றது. இங்ஙனம் மாற்றியது குற்றமென்பதை ஓராற்றான் உடன்பட்டாரெனக் கோடற்கு, 'இவ்வாறு மாற்றியது குற்றமாயின் அதனை உலகம் மன்னிக்கும்படி பலமுறையும் பிரார்த்திக்கின்றேன்' எனும் அவரது வாக்கியமே துணைபுரிதல்காண்க.


இதன்பின்னர் இலக்கணவிளக்கத்தை யச்சிடுமுயற்சியிலீடுபட்டார். இது பஞ்சலக்கணமும் நிறைந்ததோர் நூலாதலின் அச்சிடவேண்டுமென்னும் பெருவிருப்பொடு பரிசோதித்துவந்தார். இந்நூல் பிற்றைக்காலத்துப்பயிற்சி குன்றியமைக்கும் நன்னூல் தலையெடுத்தமைக்கு முரிய காரணத்தைப் பிள்ளையவர்களே தமது முகவுரையிற் கூறியிருத்தலின் அதனையே யாமும் உங்கட்குவாசித்துக் காட்டுகின்றாம்.

(தொடரும்)


M. M. L. Mohamed Abdul Cader Hadjiar & Bro.
GENERAL HARDWARE STORE
Grand Bazaar, JAFFNA.

THE BEST IN THE MARKET

KEY BRAND GERMAN CEMENT




துறப்பு மார்க் ஜெர்மன் சீமெந்து

MADE IN GERMANY

இந்த துறப்பு மார்க் ஜெர்மன் சீமெந்து மற்ற எல்லாவித சீமேந்துகட்கும் மேலானதும், அளவு கூடியதும், நல்ல பசையுள்ளதும், நற்சாட்சிப்பத்திரம் பெற்று உலக முழுவதும் அதிக விருப்பத்துடன் வாங்கிப் பாவிப்பதுமான சீமேந்தும் இதுவே. இந்த துறப்பு மார்க்கு சீமேந்தையே உங்கள் தேவைகளுக்கு வாங்கிப் பாவியுங்கள். ஒருமுறை பரீட்சித்துப் பார்த்தால் உண்மை விளங்கும்.
(95) 8-3-36.



நீங்கள்
யோசிக்கவேண்டியதில்லை!
ஓர்முறை பரீட்சியுங்கள்
உண்மையை அறிவீர்கள்

உங்கள் லில்லிபுளூட், ஆர்மோனியங்கள் பழுதடைந்துவிட்டதா? அப்படியானல் அவை எவ்வித பழுதடைந்தவை யாயினும் புதிது போற் திருத்திக் கொடுப்போம். வேலைகள் திருப்தியில்லாவிடின் கூலி இல்லை! ஷை கருவிகள் புதிதாயும் உண்டாக்கப் பெறும். குளோக், உவாக்ஷ், தையல் மெஷீன்களும், போன், பிடில், ஓர்ஹென், டைப்மெஷீன் முதலியனவும் விசேடமாய் திருத்தப்பெறும். ஷை கருவிகட்குத் தேவையான புதிய பாகங்கள் விற்பனைக்கிருக்கின்றன.

ஜீ. எம். பொன்னுத்துரை அன் பிறதர்
32, ஆஸ்பத்திரிரேட், யாழ்ப்பாணம்
(95) 15-3-36—4

சிறுகதை

# டிறெக்றர் ஒவ் எட்டுகேசன்

("சுயா" எழுதுவது)

உம்மைச் சிலோன் டிறெக்றர் ஒவ் எட்டுகேசனுகத் தெரிந்திருக்கின்ரும். மாதம் முதற்றேதியோடு வேலையை ஒப்புக்கொள்ளவும் என்று எனக்கு ஒரு தந்திகிடைத்தது. சோவியத் ருஷியாவோ என்று திடுக்கிட்டேன். சும்மா மண்ணைக் கிண்டிக்கொண்டிருக்கும் எனக்கும் இவ்வேலை கிடைக்குமா? மூச்சின்றி முதற்றேதியோடு வேலையை ஒப்புக்கொண்டேன். ஆபீஸ் குமஸ்தாக்களெல்லோரும் ஒரு வரவேற்பு வைத்தனர் வரவேற்புகளும், தேநீர்க் கச்சேரிகளும் ஏக தடபுடல். இருவாரம் சூரியனே அஸ்தமிக்க வில்லைப்போற் தோன்றிற்று. இரண்டாம்வாரம் உத்தியோகத்தைத் தொடங்கினேன். பியூன்! கெட் கிளாக் பரிபூரணத்தை ஆசராகச்செய் என்றதும் மிஸ்ரர் பரிபூரணம் முன்னின்ருர்.

மிஸ்ரர் பூரணம் "நான் ஒருமுறை சிலோன் முழுவதும் எடுகேசன் விஷயமாய்ச் சுற்றுப்பிரயாணம் செய்யப்போகின்றேன். எவரும் நான்போகுமிடங்களிலெல்லாம் வந்து எடுகேசனைப்பற்றித் தங்கள் அபிப்பிராயத்தைச்சொல்லலாம்" என்று ஒரு சுற்றுநிருபம் விடும். 'போம், சீக்கிரம் ஆகட்டும்: நீரும் கூடவே வரவேண்டும். முதன்முதல் யாழ்ப்பாணம் இரண்டுவாரம்.

சுற்றுப்பிரயாணம் தொடங்கிற்று. யாழ்ப்பாணம்வந்து சேர்ந்தோம். முதன்முதல் ஆண்களும் பெண்களுமாகச்சேர்ந்து முன்னூற்றுக்கு மேற்பட்ட வாலிபர் எங்களைத் தரிசித்தார்கள். கையிலே ஒவ்வொருவரும் ஒவ்வொரு கொப்பியையும் கொண்டு வந்திருந்தார்கள. "நீங்கள் யார்? பத்திரிகைப் பிரதிநிதிகளோ" என்று கேட்டேன்.

இல்லை ஐயா! படித்து செக்கன்ட் கிளாசும் பாசுபண்ணி வேலையில்லாமல் திரியும் தமிழ் உபாத்தியாயர்கள் நாங்கள். இவை நீங்கள் தந்த சேட்டிபிக்கட்டுகள். ஏதேனும் வழி காட்ட வேணுமையா!" என்று இரந்தார்கள். என்வயிறு பகீர் என்றது. பரிபூரணத்தைப் பார்த்தேன். அவர் முகட்டைப் பார்த்தார். "சரி நீங்கள் போங்கள் மூன்றுவருஷத்துள் உங்கட்கெல்லாம் வேலைகிடைக்கச் செய்கின்றேன்" என்றதும், அன்றே உத்தியோகமும் சம்பளஉயர்ச்சியும் பெற்றவர்கள்போல ஆனந்தமாய்ச் சென்றனர்.

மிஸ்ரர் பூரணம் இவ்வருஷத்தோடு றேயினிங் ஸ்கூல்களெல்லாம் மூடப்படவேண்டும் என்று குறித்துக்கொள்ளும்.

அடுத்தாற்போல் ஐந்நூற்றுக்கு மேற்பட்ட தொகையினர். இவர்களும் இளம்வயதினர்; மிக்சராய்த்தான் வந்திருந்தார்கள். "ரோக்கிஸ் பார்க்கவோ" என்றேன்.

"ஐயா! பாழும் தமிழைச் சிறுவயது தொடங்கிக் கற்று வந்தோம். S. S. C. யும் படித்தோம். ஆசிரிய கலாசாலைகளில் படையெடுத்தோம். கதவைச்சாத்தித் தாளிட்டுக்கொண்டு உங்கட்கெல்லாம் இங்கே இடமில்லை; சீனியர் படித்தவர்கள் இருக்கின்ருர்கள் என்று சொல்லிக் கையைவிரித்து விட்டார்கள். என்செய்வோம் ஐயா!" என்று இரந்தார்கள். "பயப்படாதேயுங்கள்; இனி அவர்களின் தமாசுகள் எல்லாம் ஆடாது. இவ்வருஷம் உங்களையும் எடுக்கச்செய்கின்றேன். சந்தோஷமாய்ப் போய்ப் படியுங்கள்" என்று தட்டிக் கொடுத்து அனுப்பினேன்.

அடுத்தகாட்காலை கண்ணைத் துடைத்துக்கொண்டு எழும்பினதும் பெரிய பெரிய புஸ்தகக்கட்டுகளுடன் நூற்றுக்கு மேற்பட்ட கொஞ்சம் வயதுசென்ற மனிதர்கள் மிகுந்த ஆத்திரத்துடன் உள்நுழைந்து, "ஐயா! இப்புஸ்தகங்கள் யாவையும் உங்கள் முன்னிலையில் அக்கினிபகவானுக்குப் பரிசளிக்கப் போகின்ரேம்; என்ன சொல்கின்றீர்கள்" என்று படபடத்தார்கள். எனக்கு விஷயமொன்றுமே புரியவில்லை. கொஞ்சம் பொறுங்கள். அவைகள் என்ன புஸ்தகங்கள் என்று விநயமாய்க் கேட்டேன்.

நன்னூல், தொல்காப்பியம். நேமிநாதம், யாப்பருங்கலம், தண்டி, என்று ஒரே கூச்சல் கிளம்பிற்று, "நல்லவிலைக்கு விற்கலாமே. ஏன் அவைகளை நெருப்பிற் போடுகிறீர்கள்" என்றேன். "அப்படியாயின் எடுத்துக்கொண்டு பணத்தைத் தாருங்கள். யார் இவைகளை வாங்கப்போகின்ருர்கள். நீங்கள்தானே இலக்கணப் பாடத்தைத் தள்ளிவிட்டீர்கள். நாங்கள் எல்லாம் பண்டிதர்கள் என்று இருந்து என்ன பிரயோசனம். யார் இலக்கணம் கற்கப்போகின்ருர்கள். எங்களைக் கண்டதும் பள்ளிக்கூடப் பசங்களெல்லாம் பண்டிதர்! பூனை எத்தனை குட்டி ஈனும். வண்ணாத்திப்பூச்சிக்கு எத்தனை கால். பாம்புக்கு எத்தனை வாய் என்று பிராணனை வாங்குகிருர்கள். என்ன ஐயா உங்கள் கொடுமை!" என்று கடுகடுத்தார்கள்.

மிஸ்டர் பூரணம் "பாடசாலைகளிலெல்லாம் இலக்கணம் கட்டாய பாடமாய்க் கற்பிக்கப்படவேண்டுமென்று குறித்துக்கொள்ளும்" என்றேன். பண்டிதர்களை ஏன் பேசுவான். ஒவ்வொரு புஸ்தகம் எனக்கு இனமாகத் தருவார்கள்போற் காணப்பட்டது.

இவர்களை அனுப்பியதும் ஒரு கூட்டம் சனம் கையில் சிதைந்த செடி, கொடி, இலை, குழை, பூ, காய், பழங்களோடு விறு விறு என்று உள்ளே நுழைந்தார்கள். அவர்கள் ஆத்திரத்தைக்கண்ட பூரணம் உயிரை எங்கோ அனுப்பிவிட்டவர் போலிருந்தார். வந்தவர்கள் என்னை அலட்சியமாய்ப் பார்த்தபடி "இதுதானே உங்கள் பள்ளிக்கூடப் படிப்பு. பொடியங்களைப் கூப்பிட்டுச் சட்டம்பிமார் எல்லாரும் தோட்டத்திலே நடுகிற கண்டுகாலிகளையெல்லாம் பிடுங்கச்சொல்லி விடுகிருர்கள்போ லிருக்கிறது. கண்டுகளைப்பிடுங்கி வேர் அப்பிடி, பூ இப்பிடி என்று அழித்துப்போடுருங்கள் பையன்கள்" என்று சீறினுர்கள். நாட்டு ஜீவன சாஸ்திரப் படிப்புச்செய்யும் அழிவைக் கண்டுகொண்டேன். அவர்களை ஒருவகையாகச் சாந்தப்படுத்தி அனுப்பினேன்.

கடைசி நாள் கொஞ்சம் நாணய உடையணிந்த எட்டுப் பத்துப் பேர் வரையில் வந்தார்கள். கொட்டாப்புளி போலநின்ற ஒருவர் "வி ஆர் திடிறேயினிங்" என்று தொடங்கவும் "சட்" நிறுத்தும், ஆங்கிலத்தை. நல்லல செந்தமிழிற் பேசும்" என்றதும், "நாங்கள் ஆசிரிய கலாசாலைகளின் அதிபர்கள்" என்ருர்கள். ஓகோ நல்லதும் உங்களைக் காணவில்லையே என்றிருந்தேன். ஒருபடி வந்துவிட்டீர்கள். நீங்கள் தமிழ்க் கல்விக்குப் பெரிதும் கொடுமை செய்கிறீர்கள். தமிழ் படித்த மாணவர்கள் எத்தனை பேர் தெருவிற் திரிகிருர்கள். பண்டிதர்களை நீங்கள் முற்ருகப் புறக்கணிக்கிறீர்கள். விவாகம் செய்யாத ஆண்களைப் பெண்பிள்ளைகளைக் கற்பிக்கும்படி விடுகின்றீர்கள். சம்பளத்திற்காக நீங்கள் மாரடிக்கிறீர்களேயல்லாமல் தமிழுக்காக நீங்கள் உழைக்கவில்லை. வருகிற கவுன்சிலுக்கு உங்களில் எத்தனைபேர் போக விரும்புகிறீர்கள். நான்போய்ப் புதிதாக உங்கட்கு ஒரு "சேக்குளர்" அனுப்புவேன். போய்வாருங்கள் என்று அவர்களின் ஒருவார்த்தையையும் எதிர்பாராது அனுப்பிவிட்டேன். எனது சுற்றுப்பிரயாணத்தை முடித்துக்கொண்டு ஆபீசில் வேலை தொடங்கியதும் ஒரு சுற்றுநிருபம் பாடசாலைகட்கு அனுப்பினேன்.

பின்வரும் விஷயங்களை நீங்கள் எதிர்பார்த்தே யிருப்பீர்கள் என்று எனக்குத் தெரியும்.

1. ஆசிரிய கலாசாலைகளெல்லாம் இன்னும் ஒருவருஷத்திற்குள் மூடப்படல் வேண்டும்.
2. தனித் தமிழ் கற்றவர்கட்கு விசேஷ மரியாதை காட்டப்படல் வேண்டும்.
3. நாட்டுச் ஜீவன சாஸ்திரக் கல்வி நீக்கப்படல் வேண்டும்.
4. பெண்பாடசாலைகளில் ஆண்களும் (கல்யாணம்பண்ணுதவர்கள் கட்டாயமாக) ஆண்பாடசாலைகளில் பெண்களும் கற்பிக்கக்கூடாது.
5. பயிற்சிமாலை, சரித்திர வினவிடை முதலிய மாணவரின் விரிந்த அறிவைக் குறுக்கும் புஸ்தகங்கள் நீக்கப்படல்வேணடும்.
6. சுதேசிகளைப் பிறதேசத்தவர் படிப்பிக்கக்கூடாது.
7. ஆங்கிலம் கற்றவர்களுக்குத் தமிழ்ப்பாடசாலைகளில் இடங் கொடுக்காது அவர்களைத் தெருவில் அலைய விடவேண்டும்.

இச் சுற்றுநிருபத்தைக் கண்டதும் அநேகர் என்ன பாடு பட்டிருப்பார்கள் என்று எண்ணுகின்றீர்கள். மாதம் முடிந்ததும் ஈராயிரம் ரூபாவுக்கு என் சம்பளத்திற்காக ஒரு செக் வந்தது. கையொப்பம் வைத்து மாற்றுவதற்காகப் "பியூன் பியூன்" என்றேன். "நேரம்போய்விட்டது; மணி மூன்ருகி விட்டது; புகையிலைக் கன்றுக்குத் தண்ணீர் வார்க்கப் பியூனையா கூப்பிடுகின்றீர்கள்" என்று கடுகடுத்துக்கொண்டு என்மனைவி என்னை எழுப்பினுள். மத்தியான நித்திரையின் வேகத்தைப் பாருங்கள்.

## கஞ்சா வைத்திருந்தவருக்கு 6 மாதக் கடூழியம்

யாழ்ப்பாணம் 30வ

கள்ளத்தனமாகக் கஞ்சா வைத்திருந்ததாகப் போலீஸ் சார்ஜண்ட் T. N. அம்சா எனபவரால் சீதாரிவாகியாகிய எஸ். தம்பிராசா என்பவர்மீது தொடரப் பட்ட வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

எதிரி தன்து குற்றத்தை ஒப்புக்கொள்ளவே நீதிபதி 6 மாதக்கடூழியச் சிறைத்தண்டனை விதித்தார்.

## சாராயம் வடித்தற்கு 200 ரூபா

யாழ்ப்பாணம் 31வ

உரும்பராய் வாசியாகிய சரவணமுத்து பெண் சின்னம்மா என்பவள் மீது சட்ட விரோதமாகச் சாராயம் வடித்ததாகத் தொடரப்பட்ட வழக்கு விசாரணை செய்யப்பட்டு எதிரியைக் குற்றவாளியாகக்கண்டு நீதிபதி 200 ரூபா அபராதம் விதித்தார். ந. நி.


## விளம்பரம்

கதிரமலையி லுறைகின்ற கதிர்வேலே! நினது திருவடி அடையவருமன்ற பக்தகோடிகளுக்குத்தொண்டுபுரிவதற்காக விடையளித்தாய். 1927–ம் ஞூ மாணிக்ககங்கையி லிருந்து கதிரமலைசிகரம்வரை றேட்டைத் திறக்க கதிர் வேலே! நீ நல்லோர்மனதில் நடனம் புரிந்து பணம்கொடுப்பித்த கருணையால் முற்றுப்பெற நெருங்கிவிட்டது. அன்றுட்தொடக்கம் நின்னைப்பின்பற்றி வரும் பக்தகோடிகள் தாகசாந்தி செய்தற் பொருட்டு கதிரமலைச் சிகரத்தே தண்ணீர்ப்பந்தலை அமைப்பித்தாய். பின்பு ஆங்கோர் திருக்குள மமைக்கும் பொருட்டும் விடைதந்தாய். அத்திருக்குளத திருப்பணியை நடப்பிக்க யாழ்ப்பாணவாசிகளிற் சிலர் ஊக்கத்தைத் தருவித்து கார்த்திகை மாசம் துவக்கம இதுவரையில் வேலை நடப்பித்து, பணவசதிக் குறைவினுலும் ஒருவரும் பணந்தராதபடியாலும் வேலையை நிறுத்த உத்தேசித்திருக்கிறேன். பொருட்பாக்கிய முள்ள தனவந்தர்களாகிலும கதிர்வேலே ஈகின்றுரில்லை. ஈந்தால் இவ்வருஷ முடிவிற்குள் நிறைவேற்றத் திடமுண்டு.

இதற்குப் பணமனுப்பும் விலாசம்:

ரமணசங்குசாது,!
திசைமாறு போஸ்ட்.

(8) 9-2-36–12-4–36



# எல்லோரும்

நட்க்ஷேத்திர (ஸ்ட்டார்) அடையாளமுள்ள உருக்கினுற் தயாரிக்கப்பெற்ற





(ரிஜிஸ்டர் செய்யப்பட்டது)

பாத்திரங்களையே

## வாங்குகிருர்கள்!

இதனை வாங்குவது:

இதன் பெயருக்கும் மதிப்புக்குமன்று. ஆனுல்,

**இதன் நெடுங்காலப் பாவிப்புக்கும் உயர்தரமான வேலைப்பாட்டிற்குமே !!**

**இலங்கையில் எவ்விடங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.**

எல்லா விதமான இரும்பு, பித்தளைச்சாமான்களும் ஜர்மன் உள்ளூர் கைவாளிகளும், கேத்தல், தோசைக்கல் முதலிய மற்றும் இதர சாமான்களும் கிடைக்கும். விலை சகாயம்.

இறக்குமதி தனி ஆட்களும் வியாபாரிகளும்

அ. மு. சீ. சீனிமுகம்மது தம்பி அன் பிறதர்ஸ்
122, மூன்ரும் குறுக்குத்தெரு,
கொழும்பு.

# இந்தியச் செய்திகள்

## புதிய இராசப்பிரதிநிதியும் காந்தியடிகளும்

இந்தியாவின் இராசப்பிரதிநிதியாகவரும் லின்லித்கௌ பிரபு அவர்கள் காந்தியடிகளுடன் கலந்துபேசி இந்திய அரசியல் விஷயமாக ஒரு முடிவுக்கு வருவாரெனப் புதினங்கள் கிடைத்தன. இப்புதினங்கட்குச் சிறிதும் ஆதாரமில்லையென இந்திய அரசினர் மறுக்கின்றனர். இவ்விஷயமாகத் தாம் இதுவரையும் ஏதாவது நிருபமும் பெறவில்லையென்றும் காந்தியடிகள் கூறுகின்றார். முன் இராசப்பிரதிநிதியாகவிருந்த இர்வின் பிரபு இவ்விஷயமாக மகாத்மாவுக்குக் கடிதமெழுதியதாகவும், மேலும் அவர் தானே லண்டனின் புதிய இராசப் பிரதிநிதியுடன் கலந்து பேசியதாககவும் புதினங்கள் வெளியாயின. இவைகள் யாவுக்கும் ஆதாரங் கிடையாதென இப்போது அறிவிக்கப்படுகிறது.

## வரவும் போக்கும்

இம்மாதம் 17-ந் திகதி இராசப் பிரதிநிதி லினலித்கௌ அவர்கள் பம்பாய்வந்து சேருவார். அதற்கு முதல் நாள் அதாவது 16-ந் திகதி விலிங்டன் பிரபுவும் டெல்லியிலிருந்து பம்பாய் வந்து சேருவார். இருவரும் பம்பாய்த் தேசாதிபதியின் விருந்தினராக இருப்பார்கள். 17-ந் திகதி காலை இரு இராசப்பிரதிநிதிகளும் சந்தித்துப் பேசுவார்கள். பின் அன்றுதானே விலிங்டன்பிரபு கப்பலேறி இங்கிலாந்து செல்வர். 10-ந் திகதி டெல்கியில் அரசாங்கமண்டபத்தில் இராசப் பிரதிநிதியாகப் பாஞ்சாலநாட்டு முதல் நீதிபதிக்குமுன் சத்தியம் செய்து கடமையை ஏற்பார்.

இராசப் பிரதிநிதிகள் ஒருவரையொருவர் சந்திப்பது வழக்கமில்லை. சென்றமுறையும் அதாவது 1931ம் வருடம் இர்வின்பிரபுவும் விலிங்டன் பிரபுவும் பம்பாயில் சந்தித்துச் சிறிதுநேரம் பேசினர். இரண்டாவது முறையாக இம்முறையும் இருவரும் கலந்துபேசுவார்கள். முன்னிருந்த இராசப்பிரதிநிதிகள் அப்படிச்செய்வது வழக்கமில்லை. ஒருவர் ஒருவழியால் உள்ளேற மற்றவர் வேறுவழியால் வெளியேறிவிடுவர்.

## ஆந்திரசர்வகலாசாலைப் பரிபாலகர்

இது வரையும் ஆந்திரசர்வகலாலையின பரிபாலகராக (Vice Chancellor) விருந்த சேர். S. இராதகிருஷ்ணனவர்கள் ஒக்ஸ்போட் சர்வகலாசாலையில் கீழைத்தேச சமயசன்மார்க்க போதகராகச் செல்கின்றதைக் குறித்து இவருக்கு சர்வகலாசாலையினர் மிக்க பெரிய ஒரு பிரியாவிடைக் கூட்டம் வைதது மரியாதை செய்தனர். அப்போது சேர். C. V. இராமன் முதலிய பெரிய கலைஞானிகள் சமுகமளித்து மேற்படி போதகாசிரியரின அருமை பெருமைகளை எடுததுக் கூறினர். சமயவிஷயத்தில் இவர்க்குள்ள ஞானமும் அவைகளை யெடுத்துரைப்பதில் இவர்க்குள்ள ஆற்றலும மிகவும் பாராட்டப்பட வேண்டுமென்று கூறினர். சென்னையில் இவர்க்கு ஒரு உபசரணைக் கூட்டம் நடத்தப்பட்டது. அப்போது ஸ்ரீமான் ஸ்ரீநிவாச சாஸ்திரியார் முதலியோர் இவர்க்கேற்பட்ட உயர் பதவி ஏற்றதேயென வியந்து கூறினர்.

இவர் பதவிக்கு காங்கிரஸ்தலைவராகும். ஸ்ரீமான் C. R. ரெட்டி சர்வகலாசாலை யதிபராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவரும் கல்வி கேள்விகளில் மேம்பட்டவரே.

## இருகட்சியாளரும் ஒற்றுமையடைவாரா?

காங்கிரஸ் தேசியக் கட்சியென்ற ஒரு கட்சியுண்டு. அதற்குத் தலைவர் பண்டிதர் மாளவியா அவர்களே. இக்கட்சியினர்க்கும் காங்கிரஸ் கட்சியினர்க்கும் சிறிது வித்தியாசம் உண்டு. முதன்மந்திரியார் வகுப்புவாதவிஷயமாகச்செய்த தீர்ப்பினை எதிர்த்து அது மாற்றப்படும் வரையும் திடமாக நிற்கவேண்டுமென்பது இவர்கள் கொள்கை. காங்கிரஸ் சபையினர் இத்தீர்ப்பை ஏற்றவரல்லர். ஆனல் அதை எதிர்க்காது விட்டனர். புதிய அரசியற்றிட்டம் ஏற்காதாகவே இத்திட்டத்தை நோக்கியும் ஒரு பயனுமின்றென்பர். இப்போது பண்டிதர்கள் மாளவியாவும், நேருவும் கலந்து பேசியதின் பயனக இருகட்சியினரும் ஒற்றுமையடைவார்போல் காணப்படுகிறது. ஆனல் இது இலகுவில் ஏற்படுவது கஷ்டமென்பது பலர் அபிப்பிராயம்.

## மகாத்மாகாந்தி

இவர் தேகாரோக்கியம் குணப்பட்டிருக் கின்றமையால் லக்குமணபுரிக்குச்சென்று காங்கிரஸ் மகாசபையில் சமுகமளிப் பாரெனச் சொல்லப்படுகிறது. இப்போது லக்குமணபுரிக்குச் சென்று கதர்முதலிய சுதேசியப்பொருட்கள் வைத்திருக்கும் சாட்சிச் சாலையைத் திறந்து வைத்துவிட்டு அலகபாத் வந்து அங்கே பண்டிதர்நேருவின் இல்லத்தில் வசிக்கின்றனர். அலகபாத் சர்வகலாசாலையினர் இவர்க்கு ஓர் உபசாரப் பத்திரம் வாசித்துக்கொடுக்க அனுமதி கேட்டனர். தாம்வசிக்கும் சுயராஜ்யபவான் கட்டிடத்தில் வாசித்துக் கொடுப்பின் ஏற்பதாகக் கூறியுள்ளார். சர்வகலாசாலையார் அப்படிச் செய்ய உடன்படாராயினும் சர்வகலாசாலைக் கட்டடத்திலேயே உபசாரக்கொண்டாட்டம் நடத்தவேண்டுமென எண்ணுகின்றனர். மகாத்மாவின் விருப்பமே மேற்கொள்ளப்படும்.

பண்டிதர் தாம் நிகழ்த்தவிருக்கும் காங்கிரஸ் மகாசபை அக்கிராசனப்பிரசங்கத்தை எழுதி அச்சிடமுன் மகாத்மாவுக்குக் காட்டுவாராம். காங்கிரஸ் பிரசங்கம் மூன்றுபாஷையில் அதாவது ஆங்கிலம், ஹிந்து, உருது என்னும் பாஷைகளில் அச்சிட்டுவழங்கப்படுமாம்.

மேலும் காங்கிரஸ் மாகசபையின் பெரிய நிர்வாகசபை அலகபாத்தில்தானே ஏப்பிறில் 7ம், 8ம் திகதிகளில் நடைபெறுமென்றும் சொல்லப்படுகிறது.

## ஒற்றேவா உடன் படிக்கை

இற்றைக்குச் சிலவருடங்கட்கு முன் பிறிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலுள்ள பிரதமநாடுகள் யாவும் ஒருங்குசேர்ந்து சில உடன்படிக்கைகள் செய்துகொண்டது யாவர் ஞாபகத்திலும் இருக்கும். அதாவது பிறிட்டிஷ் ஏகாதிபத்திய நாடுகளிலிருந்து வரும் பொருட்களையே பெரிதும் ஆதரிக்கவேண்டுமென்பது அதன்கருத்து. அதன்பொருட்டு ஏகாதிபத்திய நாடுகளிலிருந்து வரும் பொருட்களுக்கு குறைந்ததீர்வை வரியும் அந்நியநாடுகளிலிருந்துவரும் பொருட்களுக்குக் கூடிய வரியுமாக விதிக்கப்பட்டது. இந்த உடன்படிக்கை பொறுப்பாட்சி பெருத இந்தியா இலங்கைமுதலிய நாடுகட்குப் பெரும் நட்டத்தினை வருவிப்பதாயிற்று. தொழில் அபிவிருத்தி அடையாத இந்தியர் மலிவான யப்பான் பொருட்களைவிட்டு விலையுயர்ந்த பிறிட்டிஷ் பொருட்களை வாங்க வேண்டியவராயினர். இப்போது இந்தியச் சட்டசபையில் இவ்வுடன் படிக்கையைக் குறித்து ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி இவ்வுடன்படிக்கை முற்றுக நிராகரிக்கப்பட வேண்டுமென்றே கேட்கப்படுகிறது. இத்தீர்மானத்தை 70 அங்கத்தவர் ஆதரித்தனர். 65 பேர் எதிர்த்தனர். இத்தீர்மானத்தைக் கொண்டுவந்து தீரமாகப் பேசியவர் மகமதிய தலைவராகும் M. A. ஜின்னு என்பவரே.

## வெளிப்படையான முடிவு

காங்கிரஸ் சபையின்பேரால் புதிதாக அமைக்கப்படும் சட்டசபைகட்கு அபேட்சகராக நிற்கலாமென முன்னரே காங்கிரஸ்சபையினர் முடிவுசெய்தனர். இப்போது உத்தியோகபதவிகளும் ஏற்பதற்குக் காங்கிரஸ்சபையினர் முடிவுசெய்ய வேண்டுமெனச் சில காங்கிரஸ் வாதிகள் கேட்கின்றனர். ஆனல் இவ்விஷயம் பின்னரே முடிவுசெய்யப்படலாமென்பது காங்கிரஸ் நிர்வாக சபையினர் கருத்து. ஆனல் உத்தியோக பதவியைக்குறித்து வெளிப்படையாகக் காங்கிரஸ் சபையினர் இப்போதே முடிவுசெய்யவேண்டுமென ஸ்ரீமான் பூலுபாய் தேசாய், சத்தியமூர்த்தி என்போர் கேட்கின்றனர். ஆனல் சமீபத்தில் டெல்லியில்கூடிய காங்கிரஸ் காரிய நிர்வாகசபையினர் இவ்விஷயம் இப்போது அவசியம் முடிவுசெய்யப்படவேண்டியதில்லையென்று கூறிவிட்டனர். இதை, உத்தியோகபதவியை இலக்காகக்கொண்ட காங்கிரஸ்வாதிகள் ஏற்கின்றாரில்லை. லக்குமணபுரிக் காங்கிரஸ்சபையே முடிவுசெய்யவேண்டுமென்கின்றனர். அப்போதுதான் தேர்தல் மிகவும் உக்கிரமாகவும், ஆர்வத்துடனும் காங்கிரஸ் கட்சியினரால் நடத்தப்படுமாம்.


## கப்பல் சாமான்கள்

எங்கே சகாயம்?

வல்வெட்டித்துறையில் ஸ்தாபித்திருக்கும் இரும்புக்கடையில் கப்பல்கள், தோணிகள், வத்தைகளுக்குரிய கித்தான், செனுதூர், கம்பிக்கயிறுகள், செம்புத் தகடுகள் மை வகைகள், நங்கூரங்கள், நங்கூரப்படங்களுக்காகிய இரும்புத் தகடுகளும், மற்றும் எவ்வகையான இரும்புச் சாமான்களும், தண்ணீர் பம்புகளும் அதற்குரிய குழாய்களும் கைவசமிருக்கின்றன.

CEYLON HARDWARE STORES
VALVETTITURAI

Head Office:— "Jubilee Buildings"
Old Moor Street, COLOMBO.

(63) 15-3-36


கடிதம்

## சர்வஜன சம்மதம்!

### அதன் தீமைகளை நிவர்த்திக்கலாமா?

"ஈழகேசரி" ஆசிரியர் அவர்கட்கு:—
ஐயா,

டொனமூர்க் குழுவினரின் கிருபையால் இலங்கை மக்களுக்குச் "சர்வஜன சம்மதம்" கிடைத்தது. அது விசேஷமாக, இலங்கை மக்கள் எவ்வளவு அரசியல் முன்னேற்றத்தைப் பெற்றிருக் கின்றனரென்று நிரூபித்து விட்டது; சர்வஜன சம்மதத்தின் பலன் கல்லெறி, கத்திக்குத்து, துப்பாக்கிச்சூடு, கொலை முதலானவைக ளென்பதைச் சமீபத்தில் நடந்த அரசாங்க சபைத்தெரிவுகள் தக்கபடி காட்டி விட்டன.

சர்வஜன சம்மதம் உண்மையான நன்மையளிப்பதற்குப் பொதுசனங்கள் அரசியல் உணர்ச்சி மிகுந்தவர்களாக வேண்டும். இராசாங்க காரியங்களைப் பற்றிச் சிறிதேனும் அறிவு பெற்றிராதவர்கள், இருபத்தொரு வயதுக்கு மேற்பட்டவர் களென்ற ஒரு காரணத்துக்காக, அரசியலில் பங்குபற்றும் உரிமை பெற்றிருப்பது பலபல தீமைகளுக்குக்காரணம் என்பதை விளக்கிக்காட்ட வேண்டியதில்லை.

சர்வஜன சம்மதத்தின் பெருன தீமைகளை, பொதுஜனங்கள் அரசுரிமை உடையவர்களா யிருக்கவும், நிவர்த்திப்பதற்கு எனது யோசனைக்கு இரண்டு வழிகள் தோன்றுகின்றன. தங்களுடைய வாசகர்களின் அபிப்பிராயத்தை அறிய விரும்பி அவற்றைக் கீழே தருகின்றேன்:

1. பொது ஜனங்களுக்கு அரசியல் அறிவை வளர்ப்பதற்கான சங்கங்களைக் கிராமங்கள் தோறும் நிறுவுதல்.
2. கிராமச் சங்கங்களை அதிகார சபைகளாக மாற்றி அமைத்தல்.

இதில் முதலாவதானவழி நல்ல பலனளிக்குமெனினும், தேர்தல்காலங்களில் மக்களிடை உண்டாகும் சமாதான வீனத்தை முற்றுக நீக்கிவிடாது என்று எண்ண நியாயங்களுண்டு. ஆனல் இம்முறை கைக்கொள்ளக் கூடிய வொன்று என்பதற்கு ஆட்சேபனையில்லை.

இரண்டாவதான வழி தேர்தல் திட்டத்தில் பல மாற்றங்களுக்கு இடமானது; அன்றியும், இது அரசினருடைய அங்கீகாரத்தையும் பெற மாட்டாது.

தற்போது கிராமங்களை வட்டாரங்களாகப் பிரித்து அங்கத்தினரைத் தெரிவு செய்கின்றனர். அங்கத்தவர் தெரிவு சர்வஜன சம்மதத்தினல் (21 வயதுக்குமேற்பட்ட ஆண், பெண்களால்) செய்யப்பெற வேண்டும். அவ்வாறு தெரியப் பெற்ற அங்கத்தினர் தம்முள் ஒருவரை (தம்முடைய கிராமத்தின் பிரதிநிதியாக) தெரிவு செய்ய வேண்டும். அந்தப் பிரதிநிதியும் அவர்களுடைய கிராமச் சங்கத்தின் தலைவரும், அந்தப் பிரிவிலுள்ள எல்லாக் கிராமச்சங்கங்களையும் கொண்ட ஒரு (பெரிய) சங்கத்துக்கு (அதற்கு என்ன பெயரையானுலும் சூட்டலாம்) அங்கத்தினராவர். அந்தப் (பெரிய) பிரிவுச்சங்கத்தின் அங்கத்தினர்கள் இரகசியச் சீட்டு மூலமாகத்தங்களுடைய பிரிவின் அரசாங்க சபைப் பிரதிநிதியைத் தெரிவு செய்வார்கள்.

இம்முறையை அனுட்டித்தால் சண்டை சள்ளுக் குறையும். கைலஞ்சம் குடிவகை நீங்கும். அரசினருக்கும், அரசாங்க சபை அபேட்சகர்களுக்கும் அதிகமான பணச்செலவு இல்லாதொழியும்.

அன்பான ஆசிரியரே! தங்களுடைய அபிப்பிராயத்தையும் கூறும்படி கோருகிறேன்.

"மங்களகிரி" உரும்பராய் 1-4-36
இங்ஙனம்,
ச. இராஜதுரை.

# அரசாங்கசபைக்கு நெடுந் தவணை.

## ‘டீ. பீ.—டீ. எஸ்.’ மீது துவேஷமாரி

### சிங்களப்பிரதிநிதிகளுள் பாம்பும் கீரியும்

### வடமாகாணப் பிரதிநிதிகளின் மௌனம்

### சேர். ஜெயத்திலகாவின் துணிகரமான கூற்று

### மந்திரியாரின் ‘கறையான் அரித்த மனம்’

### திரு. பண்டாரநாயக்கா அமர்ந்தார்

(நமது அரசியல் நிருபர்)

கொழும்பு, 3

- அரசாங்கசபை சென்ற செவ்வாய்க்கிழமை கூடி நிர்ணயங்களுக்கு அறிவித்தல் கொடுத்ததன்பின் மே மீ 12ந் தேதிவரைக்கும் தவணைபெற்றது. சனசமூகக்கட்சியார் சேர். ஜெயத்திலக்காவுக்குத் தங்கள் உள்ளக்கிடக்கையைத் தகுந்தமுறையில் விளக்கிவைக்க முயன்றார்கள். 5-ம் ஜோர்ச்சு மன்னரின் பிரிவைக்குறித்தும் ஓர் துக்கநிர்ணயம் நிறைவேற்றப்பெற்றது. திரு. குணசிங்கா கமத்தொழில், நிலப்பகுதி மந்திரி திரு. D. S. சேனநாயக்காமீது ஓர் கண்டனஞ் சுமத்தினர். வடமாகாணப் பிரதிநிதிகள் மௌனஞ்சாதித்துக் கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.
- யாழ்ப்பாண நகரசபையை முனிசிப்பால்றியாக்க வேண்டுமென சுயாட்சி ஸ்தாபன நிர்வாகசபை தீர்மானித்து யாழ்ப்பாணத்திலுள்ள மூவரின் அபிப்பிராயம் கேட்டிருக்கிறது.
- நடந்தேறிய தேர்தல் முறையைப்பற்றி தேசாதிபதியின் கூற்றுக்கும் சேர். D. B. ஜெயத்திலக்காவுக்கும் வித்தியாச மேற்பட்டிருக்கிறது.
- அரசாங்கசபைக்குத் தெரிவு பெற்றவர்களில் அநேகர் அரசாட்சியாருடன் ஒப்பந்தத்திலீடுபட்டும் அரசினரின் சம்பளம் பெற்றுமிருத்தலால் இவர்களின் தெரிவுமுறையாகாது. இவ்வித நியாயங்களைக் கொண்டு ஆக மூன்று தேர்தல் பெட்டீசங்கள் மாத்திரம் அணைக்கப்பெற்றிருக்கிறதாயினும் பலர் இவ்வித குற்றத்தினால் தம் ஸ்தானங்களை இழக்கநேரலாம். பிரதானமாக தற்போதிருக்கும் மந்திரிமாரில் மூவர் தேர்தற் காலத்திலும் மந்திரிமாராகவிருந்து அரசினரிடம் சம்பளம் பெற்றிருக்கிறார்கள். இவர்கள் சேர் D. B. ஜெயத்திலகா, திரு. D. S. சேனநாயகா, திரு. C. W. W. கன்னங்கரா என்பவர்கள். அனேக அங்கத்தவர்கள் அரசாட்சியருக்கு தங்கள் கட்டிடங்கள் வாடகைக்குக் கொடுத்திருக்கிறார்கள். இருவர் பட்டாளத்தில் சேர்ந்து சம்பளம் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அரசினருடன் இவ்வித ஒப்பந்தத்திலீடுபட்டு சம்பளம்பெறும் அங்கத்தவர்களின் தெரிவை முறையென எடுத்துக்கொள்வதன் பொருட்டு, திட்டத்தை அவசியந் திருத்தி அனுப்பும்படி தேசாதிபதி குடியேற்ற நாட்டு மந்திரியாருக்குத் தந்தி கொடுத்திருப்பதாகத் தெரிகின்றது.

அரசாங்கசபை சென்ற செவ்வாய்க்கிழமை 2-30 மணியளவில் கூடியது. பிரதம அங்கத்தவராகும் சேர் D. B. ஜெயத்திலக்கா அவர்கள் ஐந்தாம் ஜோர்ச் மன்னர் காலகதியடைந்ததுபற்றிச் சபையின் துக்கசாகரத்தை நமது எட்டாம் எட்வேட் மன்னருக்கும் மற்றும் இராசகுடும்பத்தாருக்கும் அறிவித்தற்பொருட்டு ஓர் நிர்ணயங் கொண்டுவந்து சபையின் அங்கீகாரம் பெற்றார். பின்னர் வேறு சில நிர்ணயங்களுக்கு அங்கத்தவர்கள் அறிவித்தல் கொடுத்ததும் சேர் D. B. ஜெயத்திலக்கா மே மாதம் 12-ந் திகதிவரைக்கும் சபைக்கூட்டங்களைப் பின்போடவேண்டுமென ஓர் நிர்ணயங் கொண்டுவந்தார். அதுவும் ஏகமனதாக நிறைவேறியது. நமது அரசாங்கசபை முதல்முறை கூடித் தலைவரையும் மந்திரிமாரையும் நிர்வாகசபைகளையும் தெரிவுசெய்தது. இரண்டாம்முறைகூடி நிர்ணயங்களுக்கு அறிவித்தல் கொடுத்தது. அவ்வளவில் 42 நாட்களுக்கு நெடுந் தவணை பெற்றுவிட்டது. ஆனால் பங்குனிமாசம் தொடக்கம் சபையிலுள்ளவர்கள் எல்லாருக்கும் அவரவர் பதவிக்கேற்ற சம்பளம் தப்பாமல் வழங்கப்படுமென்பதும் குறிப்பிடத்தக்கது.

சனசமூகக் கட்சியார் எனப்படும் ருவான்வலைப் பிரதிநிதி டக்டர் N. M. பெரேராவும், அவிசாவலைப் பிரதிநிதி திரு. பிலிப் குணவர்த்தனவும் ‘டீ.பீ.-டீ எஸ்’ கட்சியாருடன் போராடுவதற்குக் கங்கணங் கட்டிக்கொண்டு நிற்பது சபையில் குறிப்பிடத்தக்க ஓர் காட்சியாகும். இவர்களுக்கிடையிலிருக்கும் நட்பு பாம்புக்கும் கீரிக்குமிடையிருக்கும் நட்பை ஒக்கும். ‘டீ.பீ.-டீ எஸ்’ தேர்தல் நடந்தகாலத்திலும் இவர்களுக்கு மாறாகவே பிரயத்தனங்கள் செய்தார்களாம். அன்று ஓர் நிர்ணயத்துக்கு அறிவித்தல் கொடுக்க எழுந்த அவிசாவலைப் பிரதிநிதி சேர் ஜெயத்திலக்காவின்மீது துவேஷமாரி பொழியத்தொடங்கினர். உள்நாட்டு மந்திரியின் “கறையான் அரித்த மனம்” மோட்டோர் சாரதிகள் அனுபவித்து வரும் கஷ்டங்களை உணரமுடியாது போனதென்றும், அவர் இரட்டை மாட்டு வண்டியென்றே மோட்டோர் காரையும் எண்ணிவிட்டார் என்றும் கூறினர். எல்லாவற்றையும் அமைதியாகக் காதில் விழுத்திக்கொண்டிருந்த சேர் ஜெயத்திலக்கா “கறையான் அரித்த மனம்” என்ற சொற்கள் கேட்டதும் நீண்டதோர் புன்னகை புரிந்தார். இவ்வளவில் இவரை விடவில்லை. சொற்பநேரத்துள் ருவான்வலைப் பிரதிநிதி தனது நிர்ணயத்தைப் பிரேரிப்பதற்காக எழுந்தார். எழுந்து தமது சிநேகனுக்கும் அவிசாவலைப் பிரதிநிதிகொழுத்திய பந்தத்தைத் தான் வேண்டி சேர். ஜெயத்திலக்கா மீது சுழற்றத் தொடங்கினர். உள்நாட்டு மந்திரியார் ஒருகாலம் சனங்களுக்காகப் பெரிதும் கஷ்டப்பட்டு உழைத்துவந்தாரெனவும் அந்தக்காலம் மறைந்துவிட்டதெனவும், தற்போது அவர் பெரிய நிலையையடைந்து பொதுசனங்களின் நன்மை தீமைகளைப் பற்றிக் கவனிப்பதில்லையெனவும் குற்றங்கூறி முடித்தார். இவர்தான் கவர்னரின் பேச்சுக்குக் கொண்டுவரவிருந்த கண்டன நிர்ணயத்தையும் கைவிட்டார்.

இவர்களிருவரும் ‘டீ. பீ.’க்கு மங்களமாரி பொழிந்தால் நமது தொழிற்கட்சித் தலைவர் குணசிங்கா ‘டீ. எஸ்’சுக்குப்பொழியத்தொடங்கினர். ஏழைகள் வசித்துவந்த நிலத்தைக் “கிறிக்கெட்” விளையாடுவதற்காக உபயோகிக்கக் கமத்தொழில் மந்திரியார் தீர்மானித்து ஏழைகளை அவ்விடத்தைவிட் டகலும்படி கட்டளையிட்டு விட்டாராம். திரு. குணசிங்கா தனது பேச்சுமுடிவில் “இப்படியான பைத்தியக்குணத்தை” மந்திரியார் விட்டுவிட வேண்டுமெனக் கூறிவிட்டு அமர்ந்தார்.

சென்ற அரசாங்க சபையில் கொர்ச்சிக்கும்சிங்கம்போலிருந்த நமது திரு. S. W. R. D. பண்டாரநாயக்காவைத் தற்போது மந்திரிமார்கூட்டத்தில் முன்வரிசையில் காண பெரும் பரிதாபமாகவிருக்கிறது. ஆயினும் கடந்த சபையில் கொண்ட பழக்கங் காரணமாகத் தன்னையறியாது மந்திரிசபைமீது துவேஷம் பாராட்ட எழுவாரோ எனவும் எண்ணவேண்டியிருந்தது. தலைவர் அங்கத்தவர்களுக்குத் தகுந்த விடைகளளித்துத் தனது கடமையை நன்கு புரிந்துவருதலை யாவரும் போற்றிவருகிறார்கள். வடமாகாணப் பிரதிநிதிகள் பூகம்ப அதிர்ச்சியின்பின் உயிர்தப்பிய மனிதர்கள்போல் மௌனமே அழகாகவிருந்தார்கள். திரு. G. G. பொன்னம்பலத்தின் மௌனத்தின் நியாயம் ஒருவாறு மற்றவர்களுக்குப் புலப்படும். மற்றவர்கள் பெரும் பணச்செலவுக்குள்ளாகிச் சபையையடைந்தபோதிலும் சடுதியாகச் சபை நெடுந்தவணை பெற்றுவிட்டதேயெனத் துக்கங்கொண்டிருக்கலாம்.

யாழ்ப்பாண நகரசபையைக் கூடிய சீக்கிரத்தில் முனிசிப்பால்றியாக்க வேண்டுமெனச் சுயாட்சி ஸ்தாபன நிர்வாகசபை தீர்மானஞ்செய்துவிட்டது. முனிசிப்பால்றியாக்குவதற்கு வடமாகாணத் தலைவரினதும் யாழ்ப்பாண நகரசங்கத் தலைவரினதும் யாழ்ப்பாணப்பகுதி அரசாங்கசபைப் பிரதிநிதியினதும் அபிப்பிராயங் கேட்டிருக்கிறார்களெனத் தெரிகிறது. முனிசிப்பால்றியாக்க வேண்டுமென நிர்வாகசபைக்கு மனுச்செய்தது சுண்டிக்குளி மகாஜன சபையேயாகும். இந்த விஷயத்தில் மாகாணத்தலைவர் ஒருசமையம் சம்மதங் கொடுக்கக்கூடும். ஆனால் நகரசபைத்தலைவரும் யாழ்ப்பாணப் பகுதிக்கு அரசாங்கசபை அங்கத்தவராகவிருப்பவரும் இதற் கிணங்குவார்களோவென்பது யாழ்ப்பாண விஷயங்களை நன்கு உணர்ந்தவர்களுக்கு ஐயத்தின்மேல் ஐயமாயிருக்கும். முனிசிப்பால்றியானால் மாகாணத்தலைவரே அதற்குத் தலைவராயிருப்பார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் தேர்தல் முறைகளை விசாரிப்பதற்கும் டொனமூர் அரசியற்றிட்டத்தின் ஊழல்களை அறிவதன்பொருட்டும் ஓர் விசாரணைச் சபை அனுப்பப்படவேண்டுமென்றே பாராளுமன்றத்தில் அரசியல்வாதிகளும் கேட்கின்றனர். அவ்வாறே யாழ்ப்பாணச் சங்கமும் கேட்கின்றது. சேர். D. B. ஜெயத்திலக்காவும் அதை விரும்புகின்றார். குடியேற்ற நாட்டு மந்திரி திரு. J. H. தொமஸ் அவர்கள் இலங்கைத் தேசாதிபதியை நடந்தேறிய தேர்தல் நடவடிக்கைகளைப்பற்றித் தனக்கோர் அறிக்கை சமர்ப்பிக்கும்படி கேட்டிருக்கிறார். தேசாதிபதி அலங்காரத் திறப்புவிழாவில் கூறியதையே அங்கும் சமர்ப்பிப்பார் என்று கூறலாம். சேர் D. B. ஜெயத்திலக்காவை “டெயிலிநியூஸ்” நிருபர் ஒருவர் தற்போதை அரசியல் விஷயங்களைப்பற்றிக் கேட்டபொழுது தான் ஒரேமனதாக ஒரேகொள்கையுடையவர்களே மந்திரிமாராகத் தெரியப்படவேண்டுமென வெண்ணியே அதற்கேற்ற பிரயத்தனங்கள்செய்து சித்திபெற்றதாகக் கூறினாராம். அப்படியானவர்களை மந்திரிசபையில் வைத்திருப்பதனால் அரசாங்கசபைத் திருத்தங்களுக்கு வாதாடுவதற்குச் சுலபமாகுமாம். நடந்தேறிய தெரிவில் சாதி சமய பேதம் பாராட்டப்பட்டு அதுகாரணமாகவே சிலர் தெரிவு பெற்றனரெனக் கூறியதை இவர் அங்கீகரிக்கவில்லை. சனத் தொகை மூன்றில் இரண்டுபங்கு சிங்களராயிருத்தலால்கூடியதொகையாக புத்த சமயத்தவரே தெரிவுபெறுவரெனக் கூறியிருக்கிறார். இவர்தான் மற்றவர்களின் தெரிவு விஷயங்களில் புத்த குருமாரைச் சந்தித்து வாக்குக்கொடுக்கும்படி கேட்கவில்லையெனவும் தேர்தல் கூட்டங்களில் மாத்திரம் பங்குபற்றி யிருக்கிறதாகவும் கூறினார். இவர் தேர்தல் விஷயங்களில் பங்குபற்றியதால் சிங்களவகுப்பினரிடையேயும் அதிகம் மதிப்பிழந்திருக்கிறதாகத் தெரியவருகின்றது.


விளம்பரம்

**சித்தராரூட விஷவைத்தியம்**
**(A Manual of Snake-Bite Cure)**

வைத்தியர்களுக்குப் பெரிதும் பயன்படக்கூடியது!

கற்றோரும் மற்றோரும் ஆகிய எந்த மனுஷரும் எளிதிற் படித்து உணரக்கூடிய சிந்து ரூபமாக அமைந்தது. தென்னிந்தியாவில், தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந்த திருவையாறு க்ஷேத்திரத்திலிருந்து யாழ்ப்பாணம்வந்து விளைவேலியிலமர்ந்து விஷவைத்தியம் நடத்திவந்தவரும், இந்நூலின் பதிப்பாசிரியராகிய பண்டித நடராஜனது மாதா மகருமாகிய பிரமஸ்ரீ நா. சோமசுந்தர சாஸ்திரிகளின் ஏட்டுப்பிரதியிலிருந்து அச்சேற்றுவிக்கப்பட்டது.

பாம்புக்கடி விஷத்திற்குரிய குடோரி, கலிங்கம், நசியம், ஆக்கிராணம், ஒத்தணம், வேது, துவளை, கெருடபார்வை முதலிய பல விபரங்களைத் தன்னுள்கொண்டுள்ளது.

விலை சதம் 50. அணா 8

வேண்டுவோர் பின்வரும விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

**Pt. Nadarajan**
**Vannarponnai, Jaffna.**
(109) 5-3-34


### வண்ணார்பண்ணையில் கார்விபத்து

யாழ்ப்பாணம் 2

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த கன்னாதிட்டிச் சந்தியில் ஓர் கார்புரண்டுவிட்டது. காளிகோயில் பக்கமிருந்து சிவன்கோவிலை நோக்கிப் புத்தூர் சந்திரசேகரம் என்பவருக்குச் சொந்தமாகிய C. 9474 ம் நம்பர் செவலட் கார்வந்ததாகவும், பெரிய கடைப்பக்க மிருந்து அஞ்சனந்தாள் பக்கத்திற்கு நீராவியடி பொன்னுச்சாமி என்பவருக்குச் சொந்தமாகிய B. 1966 ம் நம்பர் மொறிஸ் மைனர் கார்வந்ததாகவும் செவலட் மிகவேகமாகவந்து சந்தியில் மொறிஸ் மைனரது பின்பக்கச் சேறுதாங்கியில் பலமாக இடித்ததாகவும் அதனால் மொறிஸ் ஒருபக்கத்திற்குச் சாய்ந்துபுரண்டு விட்டதாகவும் கூறப்படுகிறது. சுருங்கக் கூறின் கீழ்ப்பக்கம் மற்றப் பக்கமாகக் காணப்பட்டது, காரில் வந்த டிரைவருக்கும் முதலாளிக்கும் சிறுச்சிறு காயங்கள் ஏற்பட்டனவாம். ந. நி.




வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும், தானந் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும், மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலை நஞ்சுண், டுமையோன் றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே.

—அப்பர்சுவாமிகள்.

யாழ்ப்பாணம், சுன்னுகம்:
யுவஹூ பங்குனிமீ உசஉ

# எவ்விதம் திருத்தப்படவேண்டும்?

அரசாங்க சபை அமைப்பில் பல குறைகள்உளவென்றும், அவைகள் தாமதமின்றித் திருத்தப்படினன்றி இலங்கையின் அரசியலின் முன்னேற்றம் விரும்பியவாறு கைகூடாதென்றும் அனுபவம் வாய்ந்த அரசியல் வாதிகள் பன்முறை கூறியுள்ளார்கள். அவர்கள் கூற்றுகள் யாவும் சென்ற சில வருடங்களில்—அதாவது அரசாங்க சபை அனுட்டானத்தில் தொழிற்பட்ட காலத்தில்—உண்மைகளாகவே தோன்றிவிட்டன. இவைகளை நன்கறிந்தும் இன்னும் வேண்டிய வேண்டிய திருத்தங்களை நாம் ஏற்படுத்தாதிருப்பது பெருங் குறையேயாகும். தற்போதைய அரசியல் முறை சனங்கட்கும் தேசவிருத்திக்கும் ஏற்றதா என்பதை நாம் ஆராய்வதும் அவசியமாய்விட்டது.

தேர்தலில் அபேட்சகராக முன்வந்த சில ஐரோப்பியர், தாம் சித்தியடையாமற் போனதினுல் மனஸ்தாபமுடையராய், அரசியற்றிட்டத்தில் சிறிப்பாய்ந்து அதை ஒழிக்கப்பார்க்கின்றனர். தமது அதிகாரத்தை உபயோகித்துத் தேசாளுமன்றத்திலும் ஆரவாரத்தை உண்டுபண்ணி நின்றனர். இலங்கைவாசிகள் கல்வியறிவில் அதிகம் முன்னேறிவிட்டனரென்றும், சர்வஜன வாக்குரிமையைச் சரியான வழியில் உபயோகித்துத் தேசநலத்தை விருத்தி செய்வரென்றும் எண்ணியே டொனமூர்த் திட்டம் தயாரிக்கப்பட்டதென்றும் ஆனுல், இப்போது தேர்தற் காலத்தில பொதுஜனங்கள் நடந்துகொண்டதிலிருந்து அவர்கள் சாதிவித்தியாசம், வகுப்பு வித்தியாசம், சமயவித்தியாசம் என்பவைகளில் பெரிதும் ஈடுபட்டு உண்மையான வழியில் தமது வாக்குரிமையை உபயோகிக்காது விட்டனரென்றும், ஆகையால் சர்வஜன வாக்குரிமை முதலியனவற்றில் அதிகம் மாற்றம் ஏற்படவேண்டுமென்றும் ஐரோப்பியர் அபிப்பிராயப்பட்டனர். இவ்விஷயமாகத் தேசாளுமன்றத்தில் கேள்வி நிகழ்த்தப்பட்டதும், குடியேற்றநாட்டு மந்திரியாராகும் மெஸ். தோமஸ் அவர்கள் தாம இவ்விஷயத்தைக் குறித்து இலங்கை யரசினரிடமிருந்து விரிவான பதில் கிடைத்தபின் அபிப்பிராயங் கூறுவதாகச் சொன்னுர். டொனமூர் அரசியற்றிட்டம் அனுசாணையில் எவ்வாறு தொழிற்படுகின்றனவென்றும் அதில் உள்ள குறைகள் யாவை என்பதையும் விசாரிக்கும்படி ஒரு விசாரணைச் சபையாரை அனுப்பும்படியும் தேசாளுமன்றத்தில் கேட்கப்பட்டது.

டொனமூர்த்திட்டம் திருத்தப்படவேண்டுமெனப் பல்வேறு கட்சியினரும் ஒருங்கே கேட்கின்றுர். ஆனுல், அத்திருத்தங்கள் எவ்வாருகவேண்டுமென்பதைப்பற்றியதே இப்போது யாவர்க்குமிடையில் ஏற்பட்ட பிணக்குக்குக் காரணமாகும். ஒவ்வொரு கட்சியினரும் தத்தம் கட்சிக்கும் வகுப்புக்கும் சார்பாகத் திருத்தங்களை ஏற்படுத்தப் பார்க்கின்றனர். விசாரணைச் சபையினர் நியமிக்கப்படுதலை யாவரும் விரும்புகின்றனர். ஆனுல் பல்வேறு கட்சியினரும் ஒற்றுமையடைந்து தேசநலத்துக்கேற்ற வழியில் அரசியல் திட்டத்தை அமைப்பதில் நாட்டங்கொள்ளாவிடின், விசாரணைச்சபையால்கட்டமேயன்றி நன்மையில்லையே. நிர்வாகசபை அரசியல்முறை தேசவிருத்திக்குமாறென்றும் கட்சிபேத அரசியலே சிறந்ததென்றும் சிங்களத் தலைவர்கள் பன்முறையும் வாதித்ததுண்டு. ஆனுல் இப்போது மிகுந்த வகுப்புத் துவேஷங்கொண்டு நடப்பவராகக் காணப்படும் சிங்களர்மீது சந்தேகமுடையராய் அதைப் பல்வேறு வகுப்பினரும் எதிர்த்து நிர்வாகசபை முறை யரசியலே நிலைபெறவேண்டுமென்று கேட்டனர். சமீபத்தில் மந்திரிமார்கள் தெரியப்பட்டதிலிருந்து குறைந்த தொகையினராகும் வகுப்பினர்கள் அநேக விஷயங்களை அறியக்கூடியவராகின்றனர். நிர்வாகமுறையரசியலிலும் குறைந்த தொகையினர்க்கு மந்திரிப்பதவி கிடையாதுவிட்டது பெரும் ஆச்சரியத்தை விளைப்பதாகும். இனியாவது அம்முறையை உதவாதென ஒதுக்குவாரா? கட்சிபேத அரசியலே ஏற்றதென்பதை நாம் பன்முறையிலும் எடுத்துக்காட்டியுள்ளோம். தமிழர், சிங்களர், மகமதியர், பரங்கியர், புத்தர், கிறீஸ்தவர், இந்துக்கள் என்ற கொள்கையிலேயே இப்போது தெரிவுகள் நடைபெறுகின்றன. இவ்வலங்கோலங்கள் நீங்கித் தேசவிருத்திக்கு எவ்வழியில் உழைப்பின் விரைவில் பெருநன்மை எய்துமென்ற கொள்கையுடைய கட்சிகள் தோன்றி, வகுப்புவாதத்தில் ஈடுபடாது உழைப்பின், இலங்கைத் தேசம் விரைவில் உயர் நிலையை அடையுமென்பதில் ஐயமின்று.

கட்சிபேத அரசியல் ஏற்படின் (Party Government) சிங்களர் எல்லாமந்திரிமாரையும் தமது வகுப்பிலிருந்தே நியமிப்பரெனச் சிலர் கூறலாம். ஆனுல் நிர்வாகசபை யரசியல் முறையில் யாது ஏற்பட்டது? இப்போது தெரியப்பட்ட மந்திரிகள் யாவரும் சிங்களரல்லவா? பின் செய்வதுயாது? பல்வேறு வகுப்பினரும் ஒற்றுமையடைந்தாலன்றி, உண்மையான அரசியல்திட்டம்அமைவது கூடிய தொன்றன்று. வேண்டுமாயின் குறைந்ததொகையினர் உரிமைகளும் சலாக்கியங்களும் பாதியாதிருத்தற் பொருட்டுச் சிலபாதுகாப்புகள் ஏற்படுத்தலாம். அவ்வாறு செய்வதனுல் ஒரு நட்டமுமின்று. உரிமைகள் பாதிக்கப்படாதிருப்பதற்குப் பாதுகாப்புகளும் சிறு வகுப்பினர்க்குத் தீமைகள் ஏற்படாதிருத்தற்கு விசேஷ அதிகாரமும் தேசாதிபதிக்கு இருக்கவேண்டுமென்பது அவசியமே. ஆனுல், பொதுநன்மைக்குரிய விஷயங்களில் சனப் பிரதிநிதிகளின் எண்ணத்தை நிராகரித்தற்கு விசேஷ அதிகாரம் தேசாதிபதிக்குக் கொடுக்கப்படவேண்டுமென்பதை நாம் அங்கீகரிக்கவியலாது. இவ்வாறு சிறந்த வழியில் திருத்தங்கள் ஏற்படுத்துவதற்கு ஒரு விசாரணைச்சபை ஏற்படுவது இன்றியமையாததென்பதே எமது திடமான அபிப்பிராயமாகும். கூடிய தொகையினராக உள்ள ஒரு கட்சியினர் தோன்றுங்கால், அக்கட்சியில் பல்வேறு வகுப்பினரும் சேர்ந்திருப்பர். அக்கட்சியின் தலைவர் எவ்வகுப்பினராயினுஞ் சரி, மந்திரிசபையை அமைக்குங்கால், தகுதியையும் சனசமூகஒற்றுமையையும் நாடி மந்திரிகளைத் தெரிவதே விசேஷமான முறையாகும். இவ்விதமாக அரசியல் ஏற்படினன்றி இலங்கைக்கு உண்மையான முன்னேற்றம் ஒருபோதும்கைகூடாதென்பதை எவருமறியலாம்.

## சர்வஜனவாக்குரிமை

சமீபத்தில் நடந்தேறிய தெரிவுகள் யாவர் மனத்திலும் பல்வேறு அபிப்பிராயங்களையும் கொள்கைகளையும் கிளப்பிவிட்டன. வாக்குரிமையைப்பெற்ற பொதுசனங்கள் அதனை உண்மையாக உபயோகிக்கவில்லையென்றும், ஆகையால் அதில் அநேக மாற்றங்கள் ஏற்படுத்தப்படவேண்டுமென்றும் சொல்லப்படுகின்றது. சர்வஜனவாக்குரிமையே ஈற்றில் நிலைபெறவேண்டுமாயினும், அதைப் பெறுபவர் அதை உண்மைவழியில் உபயோகிக்கும் ஆற்றல்பெறும்வரையும் அதனுல் உபயோகமின்றென்பதே எமது அபிப்பிராயம். பொதுசனங்கள் போதிய கல்வியறிவு அடையப்பெருதிருப்பினும் அவர்கட்கு அரசியல் விஷயங்களில் ஞானமுண்டாக்குவது சனத்தலைவர்களின் முக்கிய கடமையகும். இக்கடமையைத் தெரிவுகாலங்களில் மாத்திரம் செய்வதால் நன்மை ஏற்படப் பேககின்றிலது. தேசத்தின் முன்னேற்றத்தில் கண்ணுடைடையார் சிறிதும் தாமதியாது தத்தம் ஊர்களில் அரசியற்சபைகளை ஸ்தாபித்து சனங்கட்கு அரசியல் விஷயங்களில் அக்கறையும் ஞானமும் உண்டாகச் செய்தல்வேண்டும். எவ்வழியில் தொண்டாற்றின் நாட்டின் விருத்தி நன்மையைத் தருமென்பதைச் சனங்கட்கு எடுத்துக்காட்டல்வேண்டும். பொதுசனங்கள் சுயநலத்தைநாடாது தேசப்பொதுநலத்தில் செல்வதற்கு தலைவரென்போரின் உதாரணவாழ்க்கையும் இன்றியமையாததாகும். பொதுநிலையங்களின் தலைமையை வகிப்போர் களங்கமற்றவராய்ச் சுயநலத்தை ஒழித்தவராதலும் அவசியம். அப்படியல்லாக்கால் பொதுசனஊழியமென்பது ஒருபோதும் சீரடையாது. ஒருவர் சுயநலத்தைநாட, மற்றையவர் அவர்பின் செல்ல, பின் ஏற்படுவதெல்லாம் அலங்கோலமே. ஆகையால் உண்மையான தேசநலத்தை நாடும் அரசியற் சங்கங்களாலன்றி நம் நாடு அரசியல் துறையில் முன்னேறுவதென்பது அசம்பாவிதமாகும். வாக்குரிமையைச் சனங்கள் இழுக்கடையாத வழியில் எப்போது உபயோகிக்க ஆரம்பிக்கின்றனரோ, அப்போதே எமக்கு நற்காலம்வந்ததெனலாம். ஆகையால பொதுசனங்கள் அரசியல் விஷயங்களில் அக்கறைகொண்டு உழைத்தற்கு எவையெவை அவசியமோ, அவைகள் செய்து முடிக்கப்படவேண்டும். விரும்பியவாறு பொதுசன வாழ்வின் பெருநயத்தைச் சனங்கள் தேர்ந்தபின் சர்வஜன வாக்குரிமை ஏற்படின், அது உண்மைவழியில் உபயோகப்படுமென ஒருபோது நம்பலாம். அவ்வாறின்றி, வாக்குரிமையென்றுலென்ன? அதன் நோக்கம் யாது? அதனை எவ்வழி உபயோகிக்கவேண்டும்? அதனைப் பணத்துக்கு விற்கலாமா? என்பனவற்றை நன்கறியாது சுயநலவாழ்வில் அமிழ்ந்தியுள்ளார்க்கு வாக்குரிமை அளிக்கப்படின், அதனுல் சிறிதும் நன்மை ஏற்படாதென்றே நாம் கூறுவாம்.

கிராமச்சங்கங்களின்மூலம் அரசாங்கசபைக்கு அங்கத்தவர் தெரிவு செய்யப்படுவதானுல், தெரிவுகாலங்களில் பலவித ஊழல்கள் தலைகாட்டக்கூடும். அன்றியும், கிராமச்சங்க அங்கத்தவரைத் தெரிவுசெய்யும் உரிமையும் சர்வஜன (ஆண் பெண் இருபாலார்க்கும்) வாக்குரிமை வழங்கப்படல்வேண்டும். கிராமச் சங்கத்துக்கு வரியிறுப்போர் ஆண்களேயாதலால் பெண்கள் உரிமை பெறமுடியாது. அவ்வாறு கிராமச்சங்கத் தெரிவுக்கும் சர்வஜன வாக்குரிமை பெறவேண்டின், கிராமச்சங்க பரிபாலனம் மத்திய அரசாங்கத்தின் கீழ் வரவேண்டும். இது சமீபத்தில் நிகழக்கூடிய தொன்றன்று.

## அங்கும்—இங்கும்

பதவி வேட்டையின்பொருட்டு அரசாங்கசபையில் குறைந்ததொகையினர் அடைந்த அலங்கோலத்துக்கு அளவின்றும். ஒவ்வொருவருந் தலைவராக நடிக்க முயன்றனர். ஈற்றில் எவரும்தலைவராகாமையால் எண்ணியதெல்லாம் மின்னென மறைந்தது. குறைந்த தொகையினராயிருந்தும் ஒற்றுமையாக நிற்பின் சில சலாக்கியங்களாவது பெறக்கூடும். அதைவிட்டு எவர் தலையிலும் உட்கார நினைத்தால் யாதாக முடியும்.

* * *

இதுவரையில் 8 தேர்தல் பெட்டீசங்கள் அனுப்பப்படலாயின. இன்னும் எத்தனையோ தெரியவில்லை. தேர்தலில் செலவிட்டபணம் ஒருவாறுக இனி நீதிமன்றத்தில் செலவாகும் பணம் இம்மட்டா? தேர்தல் ஊழல்கள் எப்போதும் இருந்தே தீரும்போலும். சட்ட விரோதமாக நுழைந்தோரைச் சட்டப்படி வெளியேற்றுவிப்பதுதான் முறை. இதுவிஷயமாக ஏற்படும் சிரமம் இம்மாத்திரமன்று. என்ன செய்வது? சிரமத்தைப் பார்ப்பதா? இவ்விஷயங்களை தற்போது அலட்சியஞ் செய்யின் பின் இக்கெடுதிகள் பிரமாதமானவையாய் நிற்பாட்டவும் இயலாதனவாய் விடும்.

* * *

டொனமூர்த் திட்டத்தின் குறைநிறைகளை விசாரிக்க ஒரு விசாரனைச்சபை ஏற்படுவதை எல்லாரும் அங்கீகரிக்கின்றனர். ஐரோப்பியர் சர்வஜனவாக்குரிமையை அதன் மூலமாகத் தொலைக்கலாமென எண்ணுகின்றனர். தமிழரும் மற்றைய வகுப்பினரும் பிரத்தியேக ஸ்தானங்களைப் பெறலாமென எண்ணுகின்றனர். சிங்களர் நிர்வாகசபையரசியலைத்தொலைத்துவிட்டு கட்சிமுறையரசியலைப் பெறலாமென்றும் தேசாதிபதியின் விசேஷ அதிகாரத்தை நீக்கலாமென்றும் எண்ணுகின்றனர். இவையாவும் பொதுவாகத் தேசநலத்தை நாடிச் செய்யப்படுகின்றனா? அன்று ஒவ்வொரு வகுப்பினரும் தந்தம் நயத்தையே நோக்குகின்றனர். அப்படியாயின் உண்மை விருத்தி எப்படிக் கூடும்?

* * *

எய்தவனிருக்க அம்பினை நோவதா? தம்மைத் தெரிந்தவர் பிழையைச் செய்தனராக அரசாங்கசபையிலும் சீறுவதா? மந்திரிமாரின் தெரிவில் பங்குபற்றுவிடின் டொனமூர்த்திட்டம் வீழ்ந்து மாளுமா? எப்படியாகும்? போகமுன் மந்திரியாகவும் தலைவராகவும் வந்துவிடக் கூடுமென எண்ணுவது எப்படிக்கூடும்? வயதும் அனுபவமும்வாய்ந்தவரிருக்க அற்பஅறிவும் சிறிய வாழ்வுமுடையவர் ஆகாயத்தில் பறப்பதெனில் இலகுவா? கிடைத்ததுடன் அடங்குவதே பெருங் குணம். *

தேர்தலை நடத்த ஊரவர் உறவினர் நண்பர்கள் உதவினர். இனி நீதிமன்றத்தில் விசாரணை முடியும் வரையும் செலவு செய்ய யாவர் வருவாரோ? யாரோ ஒருவர் வருவாரோ? எவருமின்றிக் கடவுளை நம்பினவர்க்கும் கஷ்டமுண்டா? மலையுச்சியிலிருந்து விழுந்தவனுக்கன்றே நோவும், வருந்தமும், அடிமலையில் விழுந்தவனுக்கு என்ன வருத்தம். உள்ளவனுக்கன்றே கவலை. இல்லாதவற் கில்லையெதுவும். அப்படியான வாழ்வுதான் பேஷ். இதுவே சனங்களால் விரும்பப்படுவதாம்.

### அறிவித்தல்

புது வருடப்பிறப்பை முன்னிட்டு வருகிற 12-4-36 ல் வெளிவரவேண்டிய 'ஈழகேசரி' வெளிவரமாட்டாதென்பதைத் தெரிவிக்கின்றேம். மனேஜர்.

வானுயர் தோற்ற மெவன்செய்யுந் தன்னெஞ்சந், தானறி குற்றப் படின்

## மதிப்புரை

### ஜவஹர்லால்நேரு:

இந்நூல் தினமணி ஆசிரியர் டி. எஸ். சொக்கலிங்கம் அவர்களால் இயற்றப்பட்டது. தேசபக்தர் சரிதையின் ஐந்தாம் மலராக வெளியிடப்பட்டுள்ளது. சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல் என்னும் அழகு அமைய எழுதப்பட்டுள்ளது. ஒருவிஷயம் சொல்லுவான் தகைமையால் நன்றாதலும் அன்றாதலும் உண்டு. ஜவஹர்லாலின் வாழ்க்கை வரலாறு தேசாபிமானத்தை வளர்க்கக்கூடியதொன்றாயினும் திரு. சொக்கலிங்கமவர்கள் எழுதிய வகையால் இந்நூல் அளப்பரிய தேசாபிமானத்தை உண்டாக்கத்தக்கதாய் இருக்கின்றது. இந்நூலையாம் ஆங்காங்கு நோக்கிய இடத்து ஆரம்பமுதல் இறுதிவரையும் படிக்கவேண்டுமென்னும் எண்ணம் எழலாயிற்று சிற்சில பகுதிகளை வாசிக்குமிடத்து நெஞ்சு அழலிடைப்பட்ட மெழுகேபோல உருகிவிடுகின்றது. ஜவஹர்லாலின் பல பருவங்களையும் நிலைகளையும் காட்டும் அழகிய பதினாறு சித்திரங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியாரவர்கள் எழுதிய சிறப்புரையைக் கொண்டது. நல்ல காகிதத்திலே சிறந்தமுறையில் அச்சிடப்பட்டுள்ளது. விலை ஐந்து அணுதான். தேவையானோர் அல்லயன்ஸ் கம்பெனி-மயிலாப்பூர்-சென்னை என்ற விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். எமக்கனுப்பிய பிரதிக்காக வந்தனங் கூறுகின்றோம்.

### சித்தர் ஆரூட விஷ வைத்தியம்

இந்நூல், வட்டுக்கோட்டை நடராஜ ஜோதிஷர் க-வது வெளியீடாக, திரு. PT. நடராஜன் அவர்களால், யாழ்ப்பாணம் கமலாசனி அச்சுநிலையத்திற் பதிப்பிக்கப்பெற்றுள்ளது. இதில், பாம்புகளின் வேறுபாடுகள், ஜாதிகள், குணங்கள், முதலியவைகளும், அவற்றின் விஷத்திற்குரிய பரிகார முறைகள், நசியம், தைலம் முதலிய மருந்து வகைகளும், வேறு விஷ ஜந்துக்கள் தீண்டிய விஷத்தை நீக்கக்கூடிய முறைகளும் விரிவாகக் கூறப்பட்டிருப்பதுடன், மருந்தால் மாற்றமுடியாத சில விஷங்களைப் போக்குதற்குக் கருடத் தியானம் முதலிய தெய்வ வழிபாட்டு முறைகளும் குறிக்கப்பட்டிருக்கின்றன.

விஷ வைத்திய நூல்கள் தமிழில் அருகிக்கிடக்கும் இந்நாளில் இந்நூலைப் பரோபகாரமாக வெளியிடத் துணிந்த மேற்படி நடராஜன் அவர்களுக்குத் தமிழ் மக்களும் வைத்தியர்களும் பெரிதும் கடமைப்பட்டவர்களாவர். இவர் இதுபோன்ற பல நூல்களை வெளியிடுவதற்குப் பல வழிகளிலும் உதவிபுரிய வேண்டுவது எம்மனோரது கடமையாகும். விலை சதம் 50.

---

யாழ்ப்பாணம் சுப்பிறீம்கோடு.

### நயினாதீவுக் கலகவழக்கு

#### எதிரிக்கு 5 வருடச் சிறையும் 7 கசையடியும்

யாழ்ப்பாணம் 1

நயினாதீவு வாசிகளாகிய 1. விநாசித்தம்பி-வேலாயுதம், 2. சின்னத்தம்பி-தில்லையம்பலம் முதலிய இருவர்கள்மீது அவ்வூர் வாசியாகிய முத்தர்-சின்னையா என்பவனை வாளால்வெட்டிக் கொலைசெய்ய எத்தனித்ததாகத் தொடரப்பட்டவழக்கு விசாரணைசெய்யப்பட்டு 1-ம் எதிரிக்கு 5 வருடக் கடூழியச்சிறைத்தண்டனையும் 7 கசையடியும் எனத்தீர்ப்புச்செய்யப்பட்டது.

### பிரிவுபசாரக் கொண்டாட்டம்

யாழ்ப்பாணம். பொலிஸ்நீதிபதியாகக் கடமைபார்த்துத் தற்போது ஊவா மாகாண உதவித்தலைவராக மாற்றம் பெற்றிருக்கும் திரு. K. ஆழ்வாப்பிள்ளை C. C. S. அவர்களின் பிரிவைமுன்னிட்டுச் சென்ற 31-3-36 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4-30 மணியளவில், மல்லாகம் பொலிஸ் நீதிஸ்தலத்தில் நியாயவாதி திரு. T. குமாரசுவாமி அவர்களின் தலைமையின்கீழ் ஓர் உபசாரணைக்கூட்டம் நடைபெற்றது. அத்தருணம் பலபிரமுகர்களால் மேற்படி நீதிபதியவர்களின் குணதிசயங்களைப்பற்றி எடுத்துக் கூறப்பட்டது. கடித.

# அபிசீனிய மகாயுத்தம்

## ஆகாயக்கப்பலிலிருந்து குண்டுமாரி

### முப்பதுவிமானங்கள் செய்த அழிவு — ஹரூர் நகரம் தரைமட்டமாயது

## அனேக வைத்தியசாலைகளும் ஆலயங்களும் தீக்கிரையாயின

முப்பது இத்தாலிய விமானங்கள் தெற்குப் போர்முனையில் அடிஸ் அபெபாவுக்குச் செல்லும் புகையிரதப் பாதைக்கணித்தாகவுள்ள ஹரூர் நகர்மீது குண்டுகள் போட்டு பெருநட்டத்தை விளைத்துவிட்டன. ஹரூர் என்னும் பட்டினம் அபிசீனியாவில் இரண்டாம் பட்டினமாகும். இரண்டு மணித்தியாலமாகச் சொரிந்த குண்டுகளால் ஏற்பட்ட நட்டத்திற்கோரளவின்று. அநேக வைத்தியசாலைகளும் கத்தோலிக்க ஆலயங்களும் தீக்கிரையாயின. அன்று அநேக வீடுகளிலும் தீப்பற்றிவிட்டதாகவும் கூறப்படுகின்றது. ஒரு மகமதிய பள்ளிவாசலும்தீக்கிரையாயிற்றும்

வடக்குப் போர்முனையில் இத்தாலியர் அதிக யுத்தமின்றி இரு நகரங்களைக் கைப்பற்றிவிட்டனர். இப்போது அபிசீனிய அரசர் சொக்கோற்ற என்னும் இடத்தில் பெரிய ஒரு சேனையுடன் தாமதிக்கின்றார். இவ்விடம் வடக்குப் போர்முனையிலிருந்து 100 மைலுக்கப்பாலுள்ளது. மேலும் இத்தாலியர் கோபா என்னுமிடத்தில் குண்டு போட்டமையால் அநேகர் உயிர் துறந்தனராம்.

இப்போது இத்தாலியர் ஆகாயப்படையைத் திருத்தியமைத்தலிலேயே கண்ணும் கருத்துமாக நிற்கின்றனர். விரைவில் இத்தாலியில் 1000 ஆகாய விமானிகளிருப்பாராம். பயிற்றப்படுகின்றனர். வடக்குப் போர்முனையில் இத்தாலியர் 8 மைல் வரையில் முன்னேறியுள்ளாராம். அபிசீனியாவின் மேற்புறத்திலுள்ள ஸாணு என்னும் வாவியைக் கிட்டிச்சேர இத்தாலியர் இன்னும் 50 மைல்தூரம் முன்னேற வேண்டுமாம்.

இத்தாலிய விமானிகள் ஹரூர் நகர் மீது குண்டுபோட அரை மணித்தியாலத்துக்குமுன் தாம் எச்சரிக்கை செய்ததாக இத்தாலியர் கூறுகின்றனர். இந்த எச்சரிக்கை காரணமாக அநேக அபிசீனியர் மலைப்பாறைகளில் சென்று ஒழித்து உயிர் தப்பினராம். அநேக மகமதியர் ஹரூர்நகரில்கொல்லப்பட்டமையால் மகமதியர்க்குப் பெரு மாத்திரத்தைக் கிளப்பிவிட்டதாகச் சொல்லப்படுகிறது. மேலும் நச்சுப்புகையை உண்டாக்கும் குண்டுகள் போட்டது சர்வதேச சங்க நிபந்தனைகட்கு மாறான விஷயமென்றும் இதை வல்லரசுகள் கவனிக்காவிடின் பெரும் அழிவுகள் வந்தெய்தும் என்றும் சொல்லப்படுகிறது. ஜெர்மனியர் ஒருபக்கத்தில் உலக சமாதானத்தைக் கெடுக்கப்பார்க்கின்றனர். இன்னொருசாரில் இத்தாலிய நாகரீகத்துக்குமாறான வழிகளை யுத்தகாலத்தில் நீதியீனமாக அனுட்டிக்கின்றனர். இவர்கட்கு எல்லையில்லையாவென பிறிட்டிஷ் தேசாளு மன்றத்தினர் யோசிக்கின்றனர்.

யுத்த கோலமில்லாத நகரங்களை விமானங்கள் அழித்தது பெரும் பிழையென்றும் கூறப்படுகிறது.

முதன்முறையாக அபிசீனிய அரசரின் படையை இத்தாலியர் அஷங்கி என்னும் வாவிக்குக் கிட்டத் தாம் தோற்கடித்துவிட்டதாக தளபதி படோகிளியோ கூறுகின்றார். இந்யுத்தத்தை அரசரே நேரில் நின்று நடத்தினதாகவும் கூறப்படுகிறது. இச்சண்டையில் 7000 அபிசீனியர் கொல்லப்பட்டனராம். இத்தாலியர் பக்கத்திலும் 870 பேர் உயிர் துறந்தனராம். இதுவரையில் செய்த சண்டைகளுள் இந்தச் சண்டை மிகவும் உக்கிரமானதென இத்தாலியர் கூறுகின்றனர். இந்தப்போர்முனையில் 25 விமானங்கள் இத்தாலிய சேனைகட்குத் துணைபுரிந்தனவாம்.

ஹரூர் நகர்மீது இத்தாலியர் குண்டு போட்டது காரணமாகப் பெரும் ஆத்திரம் பிறிட்டினில் ஏற்பட்டுளது. இத்தாலியர் போட்ட 300 குண்டுகளில் 50 அபிசீனிய வைத்தியசாலைகள்மீதும் 14 கத்தோலிக்க தேவாலயங்கள்மீதும் 8 பிரான்ஸிய வைத்தியசாலைகள்மீதும் விழுந்தனவாம். இவ்விஷயமாக அன்றனி ஈடின் அவர்கள் விரைவில் நடபடிக்கைகள் கையாளப்போவதாகக் கூறினார். அபிசீனிய யுத்தம் சமீபத்தில் முடிவுக்குக் கொண்டுவரத் தாம் வேலைசெய்யப்போவதாகக்கூறினார்.

# ஜெர்மனியரின் திடமான பதில்

லொக்கார்னோ வல்லரசுகள் ஜெர்மனியர்க்கு அனுப்பிய நிபந்தனைகளை அவர்கள் அங்கீகரித்தார்களில்லை. சேனைகளை றைனின் பிரதேசத்திலிருந்து தாம் ஒருபோதும் அகற்றவியலாதென்றும், ஆனால் இனி மேலதிகமாகச் சேனைகளை அங்கே கொணர்ந்து சேர்க்கவில்லையென்றும் சொல்லுகின்றனர். ஜெர்மனியர் சேனைகளை அகற்றிப் பழையபடி வல்லரசினர்மீது நம்பிக்கையையுடையராய்ச் சமாதான பிரேரணைகளை எடுத்துரைப்பின் எல்லா விஷயங்களும் சமாதானமாகவும் ஒற்றுமையாகவும் நடத்தக்கூடுமென்று சொல்லப்படுகிறது. மேற்கெல்லையில் இப்போது சங்கடமேற்பட்டமைக்கு முழுக்காரணர் ஜெர்மனியரேயென்றும் சொல்லப்படுகிறது. தற்போதைய அரசியற்றலைவராகும் ஹிற்லர் கூறும் நிபந்தனைகள் சமாதானத்தை நாடியதாகக் காணப்படினும் றைன் பிரதேசப் பாதுகாப்பு விஷயத்தில் அநேக முரண்பாடுகளையுடையதாகக் காணப்படுகிறது. மேலும் ஜெர்மனியருக்கும் பிரான்சியர்க்குமிடையில் நீங்காத பகை இருந்துவருவதாகவும் அது முற்றாக நீங்கவேண்டுமாயின் இருதேச மாணவர்க்கும் கற்பிக்கப்படும் கல்வி துவேஷம் பாராட்டாததாயிருக்கவேண்டுமாம். பத்திரிகைகளும் பகையை அதிகரிக்கும் நோக்கத்துடன் விஷயங்களை எழுதாது நிற்பாட்டவேண்டுமாம்.

நான்கு மாதங்கட்கு ஜெர்மனியர் றைன் பிரதேசத்தில் சேனைகளை அதிகரிக்காரென்றும் அதற்கிடையில் விஷயங்கள் முடிவுசெய்யப்படவேண்டுமென ஜெர்மனியர் பெயரால் ஹிற்லர் கூறுகின்றார். சமாதானம் நீடித்து நிலைபெறக்கூடியவண்ணம் ஐரோப்பாவில் அரசியல்கள் திருத்தி அமைக்கப்படவேண்டுமெனவும் கூறப்பட்டது. பிரான்சியரும் பெல்சியரும் ஒருசார்பாகவும் ஜெர்மனியர் இன்னொரு சார்பாகவும் நின்று தமக்கிடையில் ஒரு உடன்படிக்கை செய்யவேண்டும். 25 வருடத்துக்குத் தாம் ஒருபோதும் அயல்நாடுகளைக் கவரும்பொருட்டு யுத்தத்துக்குச் செல்வதில்லையென்றும் அப்படிச் சென்றால் நீதியீனமான யுத்தத்தை ஆரம்பித்த நாட்டிற் கெதிராகப் பிறிட்டிஷாரும் இத்தாலியரும் யுத்த நடவடிக்கைகள் கையாளலாமென்றும் முடிவுசெய்யப்படவேண்டுமாம். இவ்விஷயங்கட்கு ஜெர்மனியர் தாம் முற்றாகத் தயார் என்று கூறுகின்றனர். இவ்வாறு 19 விஷயங்கள் அடங்கிய நிபந்தனைகளை இப்போது ஜெர்மனிய தூதர் பிறிட்டிஷ் அந்நியநாட்டு மந்திரியாரிடம் ஒப்புவித்தனர். இவ்விஷயங்களைப் பிறிட்டிஷார் மற்றைய லோக்கார்னோ அரசினருடன் ஆலோசித்துப் பின்னரே பதில் கூறுவர். ஜெர்மனியர் சமாதானப் போக்குடன் சமர்ப்பித்த நிபந்தனைகள் யாவர்க்கும் சிறிது மனவாறுதலைக்கொடுத்ததாம்.


லோக்கார்னோ வல்லரசுகள் முன்செய்த நிபந்தனைகள் ஜெர்மனியரின்சுயமரியாதைக்கு மாறாயிருப்பதாகவும் அது முற்றாக மாற்றப்படவேண்டுமென்பதே ஜெர்மனியரின் பிரதானமானகேள்வியாகவுமிருக்கிறது.

ஜெர்மனியர்பெயரால் ஹிற்லர் அனுப்பிய பதிலைக்கண்டு பிரான்சியர் பெரிதும் ஆத்திரமடைகின்றனர். ஜெர்மனியின் நிபந்தனைகள் அங்கீகரிக்கப்படின் ஐரோப்பா யுத்தகளமாக முடியுமெனப் பிரான்சிய பத்திரிகைகள் கூறுகின்றன.

சமாதானம் சித்தியாவிடின் தாம் பிரான்சியருடனும் பெல்சியருடனும் நின்று உதவிசெய்வதாகப் பிறிட்டிஷார் கூறுகின்றனர். மேலும் பிரான்சிய அந்நியநாட்டு மந்திரியாகிய பிளான்டின் என்பவரும் ஹிற்லரின் நிபந்தனைகளைக் கண்டிக்கிறார். இந்நிபந்தனைகள் முற்றாக விரோதமாயிருப்பதால் பிரான்சியரும் பெல்சியரும் பிறிட்டிஷாரும் ஒருங்குசேர்ந்து ஆலோசித்து யாது செய்யவேண்டுமென்பதை முடிவு செய்வர்.

# தேசியத் தலைவருக்குத் தேசப் பிரஷ்டமா?

## பாபு சுபாஸ் சந்திரவஸு



வங்காளத் தேசிய இயக்கத்தில் அதிகம் மதிப்புப்பெற்ற திரு. சுபாஸ் சந்திர வஸு அவர்கள் வரும் ஏப்பிரல்மீ 10௳ இலங்கைக்கு வந்து சேருவாரெனச் செய்தி கிடைத்திருக்கின்றது. இவர் தேகாரோக்கியத்திற்காகச் சென்றிருந்த ஜினீவா என்னுமிடத்தை விட்டுச் சென்ற மார்ச்சுமீ 27௳ 'கொன்ரேவேடே' என்னும் கப்பலில் பிரயாணமாகியிருக்கிறார். இவர் சட்ட விரோத இயக்கத்தை இந்தியாவில் திரும்பவும் தொடக்கும் நோக்கமாக ஓர் கூட்டத்தைக் கூடியதற்காகக் கடந்த 1932ஷு தைமீ 2-ம்௳ கைதியாக்கப்பட்டார். வைத்தியர்கள் இவருக்குக் க்ஷயநோயிருப்பதாகக் கூறியதன்பேரில் சுவிற்சர்லந்து, பிரான்சு முதலியவிடங்களில் சிகிச்சை பெறுவதற்காகவும் தேகாரோக்கியத்திற்காகவுஞ் சென்றிருந்தார். இவர் இந்தியாவுக்குத் திரும்பக்கூடாதென அரசினர் கூறியதன்பேரில் தற்போது இலங்கையில் வந்து வசிப்பார். பெரும்பாலும் பண்டாரவளையிலிருப்பாரெனக் கூறப்படுகின்றது.

### சுன்னாகத்தில் இடியேறு

சென்ற (30-3-36) திங்கட்கிழமை பகல் இரண்டுமணியளவில் இடியோடுகூடிய மழையும் மின்னலும் காணப்பட்டது. பலவிடங்களில் இடியினால் சேதங்களுண்டானதாக அறியக்கிடக்கின்றது. சுன்னாகத்திலும் பலவிடங்களில் இடிவிழுந்து மரங்களையும், துலாமுதலிய அசைவுப்பொருள்களையும் சேதப்படுத்தி விட்டதாம்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்.

இல. 8127.

கனகசபை சிவக்கினானம் சிவியா தேரு. —வழக்காளி.

பொன்னம்மா தாமோதரியின்மகள் சாவகச்சேரி. —எதிராளி.

யாழ்ப்பாணம் பெரிய கோட்டின் 8127ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் நாலு துண்டுக் காணிகளை 1936-ம்ஹூ சித்திரைமீ 20-ம்உ திங்கட்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணி விபரம்.

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம்டிஸ்திறிக் தென்மராச்சிப் பகுதியைச் சேர்ந்த சாவகச்சேரி கோவிற்பற்று சாவகச்சேரியில் இருக்கும்காணி "குளக்காட்டு வளவு" நிலப்பரப்பு இலா. 8-ம் "வாரி வளவு" நிலப்பரப்பு இலா. 4-ம் இரண்டுமாக நிலப்பரப்பு இலாச்சம் 12-ம் இதில் மேற்குப் பக்கமாக $4\frac{1}{2}$ பரப்பு பிறநீங்கலாகவும், ஆட்சியின்படி மிகுதி $7\frac{1}{2}$ பரப்பும் ஆட்சியின் மேலாக 5 பரப்பும் இரண்டுமாக நிலப்பரப்பு இலாச்சம் $12\frac{1}{2}$-ம் எல்லைகள் கிழக்கு அண்ணாமலை கந்தையாவுக்கும், வடக்கு இரண்டாம் காணியும் மேற்கு காலஞ்சென்ற ஆறுமுகம் கனகசபையின் உரிமைக்காறருக்கும் தெற்கு ஒழுங்கை.

(2) "பேயிக்கேணி" வளவு நிலப்பரப்பு இலாச்சம் 30. ஆட்சியின்படி 10 பரப்பு மேலாகவும் இரண்டுமாக பரப்பு 40-ம் எல்லைகள் கிழக்கு செல்லம்மாவின் ஆதனமும் மறுபேருக்கும் சிதம்பரி பெண் சின்னத்தங்கத்திக்கும் மேற்கு ஆறுமுகம் கனகசபையின் உரிமைக்காறருக்கும் தெற்கு மேல்க்காணியும்.

(3) தனங்கிளப்பில் இருக்கும் காணி "ஒட்டான்கலட்டு வயல்" நிலப்பரப்பு இலாச்சம் $9\frac{1}{4}$ எல்லை கிழக்கு சரவணை நாககாதருக்கும வடக்கு தியாகராசக் குருக்களின் ஆதனமும் மேற்கு தண்ணீர்வாய்க்காலும் தெற்கு சின்னத்தம்பி கதிரேசுவுக்கும்.

(4) தனங்கிளப்பில் இருக்கும் காணி "மனிவீரவாகுதேவன் வயல்" நெற்பரப்பு இலா. $5\frac{3}{4}$ எல்லைகள் கிழக்கு இராமர் சின்னத்தம்பிக்கும் பங்காளர்களுக்கும் வடக்கு நாகமுத்தர் நமசிவாயத்தின் உரிமைக்காறருக்கும் மேற்கு வயிரவநாதர் வீரகத்திக்கும் மற்றவர்களுக்கும் தெற்கு காசியர் கதிரேசுவுக்கும் பங்காளர்களுக்கும் இந்த எல்லைக்குள் அடங்கிய காணியும் அதைச் சேர்ந்தவைகளும் அடங்கியவைகளும்.

1936-ம்ஹூ பங்குனிமீ 19உ

R. Vaitheasparn Iyer
கொமமிஷனா

(106) 5.4.36—1

## சுன்னாகத்துக்கு வாசிகசாலை!

சென்ற (1-4-36) புதன் கிழமை மாலை சுன்னாகம் பிராசீனபாடசாலையில் சுன்னாகத்திற்கு ஓர் வாசிகசாலை ஸ்தாபிக்கும் நோக்கமாக திரு. சு. பொன்னம்பலமவர்களின் தலைமையில் ஓர் கூட்டம் கூடப்பெற்றது. திருவாளர்கள் பண்டிதர் மாணிக்கத்தியாகராசர், நா. பொன்னையா, தா. சி. கனகரத்தினம் ஆதியோர் வாசிகசாலையைப்பற்றிப் பேசினார்கள். தற்போது கட்டப்பெற்றுக் குறையிலிருக்கும் கட்டடத்தையே வாசிகசாலை யாக்குவதற்குக் கட்டிமுடிக்க வேண்டுமெனவும் அதை நடத்துவதற்கு ஓர் சங்கம் தெரியப்பட வேண்டுமெனவும் தீர்மானிக்கப் பெற்றது பின்னர் சங்க உத்தியோகத்தர் தெரிவு செய்யப் பெற்றனர்.

போஷகர்கள்: திருவாளர்கள். சு. பொன்னம்பலம், தி. குமாரசுவாமி. தலைவர் திரு. தா. சி. கனகரத்தினம். இணைச் செயலாளர்: திருவாளர்கள். க. இராசநாயகம் ஆ. தம்பிப்பிள்ளை. தனாதிகாரி: ஆ. சங்கரப்பிள்ளை. கணக்குப்பரிசோதகர்: கு. அம்பலவாணர்.

### நிர்வாகசபை

திருவாளர்கள்: மு. தம்பிப்பிள்ளை, ஆ. செல்லையா, S. வடிவேற்பிள்ளை, A. மார்க்கண்டு, சிவசுப்பிரமணியம், நா. ஐயம்பிள்ளை, K. சின்னத்துரையும் சிவன் கோயில் தர்மகர்த்தாக்களும்.

பின்னர் (4-4-36)ல் நடந்த பொதுக் கூட்டத்தில் சங்கத்திட்டமும் அரங்கேறப்பெற்றுப் பணம் சேகரிப்பதற்கு முயற்சிகள் தொடங்க வேண்டுமெனத் தீர்மானஞ் செய்யப்பெற்றது.

---

யாழ்ப்பாணம் சுப்பிறீங்கோடு

# காரைதீவுக் கொலைவழக்கு

## நித்திரைசெய்கையில் வெட்டு | வீட்டுவாசலில் முள்ளுவேலி

(நமது நிருபர்)

யாழ்ப்பாணம் 3

யாழ்ப்பாணம் சுப்பிறீம் கோட்டில் நீதியாசர் திரு. எம். ரீ. அக்பார் அவர்களதும் திரு. ஸீ. முத்துவேலு அவர்களைத் தலைமையாகக்கொண்ட ஆங்கிலம் பேசும் யூரிக்கனவான்களதும் முன்பாக ஊர்காவற்றுறைப் பகுதியைச்சேர்ந்த காரைதீவு மேற்கில் சென்ற ஐப்பசிமீ 1-ம் திகதியளவில் சண்முகம்–சங்கரப்பிள்ளை என்பவரது மரணத்தை வருவித்ததாக அவ்வூர் வாசியாகிய சிதம்பரப்பிள்ளை–பொன்னம்பலம் என்பவர்மீது தொடரப்பட்ட வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்காளி சார்பாக முடிக்குரிய நியாயவாதி எவ். ஸீ. லூயிசும் எதிரியின் சார்பாக நியாயதுரந்தரர்கள் ஏச். ஆர். அரியகுட்டி, ஜே. எவ். பொன்னம்பலம் ஆகிய இருவர்களின் அநுசரணையின்பேரில் நியாயவாதி ஜே. எஸ். பொன்னம்பலம் யூனியர் கவுன்சிலாகவும், பிரபல நியாயவாதி எஸ். துரைசுவாமி தம்பு சீனியர் கவுன்சிலாகவும் விவாதித்தார்கள்.

முதலாவதாக முடிக்குரிய நியாயவாதி வழக்கின் சாராம்சத்தை மிகவுந் தெளிவாக ஜூரிமார்களுக்கு எடுத்துரைத்தார். விசாரணை விபரம் வெளியிடுவதால் அதனை விரிக்காது விடுத்தனம்

அதன் மேல் ஊர்காவற்றுறைப் பகுதி மெடிக்கல் ஆபீசர் டாக்டர் S. D. போல் அவர்கள் விசாரணை செய்யப்பட்டார். அப்போது அவர் கூறியவற்றின் சாராம்சம் வருமாறு:—

"சென்ற ஐப்பசிமாதம் 2-ந்திகதியன்று காலை 10 மணியளவில் நான் காலகதியடைந்தவரது பிரேதத்தைப் பரிசோதனை செய்தேன். காலஞ் சென்றவரது தந்தையாராகிய V. சண்முகம் என்பவரும் மனைவியாகிய மீனாட்சியுமே பிரேதத்தை அடையாளங்காட்டினார்கள். சங்கரப்பிள்ளைக்கு 35 வயதிருக்கும். எல்லாமாக 10 காயங்கள் அப்பிரேதம் மீது காணப்பட்டன. அவற்றுள் 1-ம் 3-ம் காயங்களே பாரதூரமானவைகளெனக்கருதுகிறேன்."

சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

மூன்றாவதாகக் காலஞ் சென்றவரது மனைவியாகிய மீனாட்சி என்பவர் விசாரணை செய்யப்படுகையில் கூறியவற்றின் சாராம்சம் வருமாறு:-

"நான் கல்யாணம் முடித்து 7 வருடங்கள் கழிந்ததேயாயினும் பிள்ளைகளில்லை. எமது வீட்டில் நாங்களிருவருமே இருந்தோம். எனது அண்ணனாகிய கந்தையா செல்வத்துரை முத்துப்பிள்ளை என்பவளை மண முடித்தார். பின்னர் அவர் மனைவியை இங்குவிடுத்துச் சிங்கப்பூருக்குச் சென்று விட்டார். அவருக்கு ஓர் பெண் மகவொன்றுளது. இது சப்பவம் நடைபெறுவதற்கு சுமார் 2 வருடங்கள்முன்னதாக எனது மைத்துனியாகிய முத்துப்பிள்ளை இவ்வெதிரியுடன் கூடி யோடிவிட்டாள். எனது தமையனார் ஏறக்குறைய ஐந்து, ஆறுமாதங்களின் முன்னராகவே இவ்விடம் வந்தார். அதன்மேல் அவர் முத்துப்பிள்ளை மீது கல்யாணப்பதிவைத்தள்ளுபடி செய்யும்படி ஓர் வழக்கையும் எதிரிமீது மான நஷ்ட வழக்கையும் தொடர்ந்தார். அப்பிள்ளையையும் தாயாராகிய முத்துப்பிள்ளையையே கூட்டிச் சென்றார். அவ்வழக்குகளில் எனது கணவனாகிய காலஞ்சென்றவர் முத்துப் பிள்ளைக்குக் கட்டளை கொடுபடாதிருப்பதை அறிந்து தானே பிஸ்கால் சேவகனைக் கூட்டிச் சென்று முத்துப் பிள்ளையைக் காட்டிக் கொடுத்தார். இவ்வழக்குகளைச் சமாதானம் பண்ணுவதாகவும் ஓர் கதை உண்டு. அது எவ்விதம் யாரால் என்ற விபரம் எனக்குத்தெரியாது. கல்யாணப்பதிவைத் தள்ளும்படி வழக்கைத் தொடங்குவதன் முன்னர் எதிரியும் காலகதியடைந்தவரும் சந்தோஷமாகவேயிருந்தனர். கொலையுண்டிறப்பதற்கு முதல் நாளாகிய 30-ந் திகதி யன்று யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டுக்குப் போய் மீண்டு வரும்போது எதிரியும் காலகதியடைந்தவரும் பேச்சுப்பட்டார்கள். இப்பூவுலகில் சத்துராதிகள் ஒருவருமில்லை."

'சம்பவம் நடைபெற்றவன்றிரவு 8-மணிபோல் நாங்கள் (புருடனும் மனைவியும்) சாப்பாட்டை முடித்துக் கொண்டு 9-மணியளவில் நித்திரைக்குச் சென்றோம். நாங்கள் எங்கள் வீட்டின் தலைவாசலில் பாயின்மீது படுத்து நித்திரையாயினோம். அக்காலம் நிலவில்லாது இருளாகவே யிருந்தது. அனேகரது காலடிச் சப்தத்தினாலும் "ரோச்" லைற்றின் வெளிச்சத்தினாலும் நான் விழித்தேன். அதன்மேல் நாலு, ஐந்து பேர்கள் வரை தலைவாசலுக்குள் வந்தார்கள். வந்ததும் எனது கணவனை இருவர் அமர்த்திப்பிடித்துக்கொள்ள பொன்னன் (எதிரி) கத்தியால் 2 முறை வெட்டினான். உடனே நான் எழுந்து பின்னாடிநின்றுகொண்டு கத்தினேன். உடனே யாரோ ஒருவர் எனது பிற்பக்கத்தில் நின்று எனது தொண்டையை அமர்த்தினார். முதுகில் அடித்தார். அடையாளங் கண்டுகொள்ள முடியவில்லை. அங்கு எரிந்துகொண்டிருந்த மண்ணெண்ணெய் விளக்கினுதவியால் பொன்னனை நன்கு கண்டுகொண்டேன். இருவெட்டுகள் வீழ்ந்ததின்மேல் எனது கணவர் எழுந்து அவர்களுடன் இழுபறிப்பட்டார். ஈற்றில் நாங்கள் யாவரும் இழுபறிபட்டுக்கொண்டே முற்றத்திற்கு வந்தோம். வந்ததும் வாசலில் (எதிரிகளால் வைக்கப்பட்டிருந்த) முள்ளுக்கொப்பில் வீழ்ந்தெழும்பினோம். பின்னரும் எனது புருடன் குளறக்குளற அதனையுங் கவனியாது அடிக்கப்பட்டார். அந்நேரத்தில் என்னை யாரோ பிடித்துக்கொண்டார்கள், எனது கணவனை அடித்தடித்துத் தெருவாசல் படலை வரை கொண்டுசென்றார்கள். அவர் இட்ட சப்தத்தையும் அடியின் சப்தத்தையும் மாத்திரமே கேட்டேன். பொன்னன் கோப்பிக்கத்தியால் வெட்டியதையும் மற்றவர்கள் பொல்லுகளால் அடித்ததையுங் கண்டேன். அயலவர்கள் வரும்போது இட்ட சப்தத்தைக் கேள்வியுற்றே என்னைப் பிடித்துக்கொண்டு நின்றவன் பிடியை விட்டுவிட்டு ஓடிப்போனான். பின்னர் நான் படலையடிக்குச் சென்றேன். அங்கு எனது புருடன் றோட்டருகே விழ்ந்துகிடந்தார். எதிரிகள் ஓடிவிட்டார்கள். அவ்விடத்தில் முருகேசு, சுந்தரம், சங்கரப்பிள்ளை, தெய்வானை, வள்ளியம்மை முதலியோர்கள் நின்றார்கள். நான் அவர்களிடம் "பொன்னன் வெட்டிப்போட்டான்" எனச் சொன்னேன். பின் வண்டியில் காயமடைந்தவராகிய எனது கணவனை ஏற்றிக்கொண்டு மானிப்பாய் ஆஸ்பத்திரியை நாடிச் சென்றோம். இடைவழியில் அவரது உயிர் நீங்கியது. அதன்பின் பிரேதத்துடன் பொலீஸ் விதானை வீட்டிற்குச் சென்றோம். அவர் எங்களது வாக்குமூலத்தைப் பதிவுசெய்துகொண்டார். அப்பால் வீட்டிற்குக் கொண்டுபோனோம்.'

(விசாரணை நடைபெறுகிறது)

## கோட்டுக்கு முன் கோரசம்பவம்

யாழ்ப்பாணம் 2

இன்றையதினம் யாழ்ப்பாணம் சுப்பிறீம் கோட்டிற்கு முன்னராகக் கடலைவிற்கும் விக்ரோரியா என்பவள் விற்பனைற்காக இருக்கையில் G. 8804 இலக்கமுள்ள மோட்டார் கார் அவளை நெரித்துவிட அவள் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டாள்.

ந. நி.

---


## சைவசமயாபிமானிகளுக்கு ஓர் அறிக்கை

### மானிப்பாய், மருதடி விநாயகராலய 10-ம்திருவிழா

புண்ணியசீலர்களே!

மானிப்பாயில் மருதடியென்னுந் திருப்பதியில் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் விநாயகப் பெருமானுக்குச் செய்விக்கப்பெற்ற "மஞ்ச"மும் அதற்குரிய கட்டடமும் வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இவ்வாண்டு நடைபெறும் திருவிழாவுக்குப் புதிய "மஞ்சமே" கொண்டுவரப்படும். குறித்த "மஞ்சம்", கட்டடம் முதலியவற்றின்பொருட்டு வேறு சிலரும் பொருள் சேகரிப்பதாக அறிகின்றபடியால், **மற்றையோரிடம் பொருளைக்கொடுத்து ஏமாற்றமடையாதிருக்கும்படி** சைவாபிமானிகளாயுள்ள புண்ணியசீலர்களுக்கு எச்சரிக்கை செய்கின்றேன்.

இங்ஙனம்

பொன்னையா-சண்முகராசன்
உபயகாரன்

மானிப்பாய் 3-4-36

## தேர்தல் பெட்டிசங்கள் 8

### கொழும்பு தென்பகுதி

கொழும்பு தென்பகுதிக்கு அரசாங்கசபை அங்கத்தவராகத் தெரிவு பெற்றிருக்கும் டக்டர். A. P. de. சொய்சா என்பவர் தெரிவுக்காலத்தில் அரசாங்கத்திடமிருந்து சம்பளம் பெறும் உத்தியோகத்திலமர்ந்திருந்ததினல் அவரது தெரிவு முறையாகாதெனெ அவருடன் போட்டி செய்து தோல்வியுற்ற டக்டர் E. A. குறே என்பவர் சுப்பிறீங் கோட்டில் ஓர் பெட்டிசம் கொடுத்திருக்கிறுர்.

### பருத்தித்துறைப்பகுதி.

ஏரம்பு விஞயகமூர்த்தி யென்னும் பருத்தித்துறைப் பகுதியைச் சேர்ந்த ஓர் வாக்காளன் திரு. G. G. பொன்னம்பலம் கைலஞ்சங் கொடுத்து தகாதமுறையாக தெரிவு நடத்தியபடியால் அவரதுதெரிவு முறையாகாதெனப் பெட்டிசம் கொடுத்திருக்கிறுர்.

### வதுளைப்பகுதி

வதுளைப்பகுதிப் பிரதிநிதி யாயிருக்கும் முதலியார் D. H.கொத்தலாவலை யென்பவர் அரசாட்சியாரின் கீழ் ஓர் ஒப்பந்தத்திலீடுபட்டிருந்ததால் அவரது தெரிவு முறையாகாதென அவருடன் போட்டிசெய்த திரு V. சோமசுந்தரம் தனது பிறக்றர் மூலமாக ஓர் பெட்டிசம் அணைத்திருக்கிறுர்.

### டெடிகமா பகுதி

டெடிகமா பிரதிநிதியாக விருக்கும் திரு. டட்லி சேனநாயக்கா கைலஞ்சத்தாலும் தகாத முறைகளாலும் தெரிவு பெற்றிருப்பதால் அவரது தெரிவு முறையாகாதென அப்பகுதியைச் சேர்ந்த N. ஆரொன் என்னும் வாக்காளன் ஓர் பெட்டிசம் அணைத்திருக்கிறுர். இந்த அங்கத்தவர் சார்பாக கைலஞ்சம் கொடுத்தவர்கள் அவரது பிதாவாகிய கமத்தொளில் மந்திரி திரு. D. S. சேனநாயக்காவும் போக்குவரத்து மந்திரி திரு. J. L. கொத்தலாவலையுமென பெட்டிசத்தில் காட்டப்பட்டிருக்கிறது.

### மாத்தறைப்பகுதி

மாத்தறைப் பகுதியைச் சேர்ந்த H. L. பியதாசா என்னுமோர் வாக்காளன் திரு. இராசா ஹெவவித்தாரண கைலஞ்சங் கொடுத்து சட்டத்துக்கு மாறுக கலசமுண்டாக்கி தகாத முறைகளைக் கையாண்டு தெரிவுபெற்றதனுல் அவரது தெரிவு முறையாகாதென ஓர் பெட்டிசம் அணைத்திருக்கிறுர்.

### அவிசாவலைப்பகுதி

அவிசாவலைப் பகுதியைச் சேர்ந்த L. A. சமரக்கோன் என்னும் வாக்காளன் திரு. பிலிப் குணவர்த்தன கைலஞ்சத்தாலும் தகாத முறைகளாலும் தெரிவு பெற்றதால் அவரது தெரிவு முறையாகாதென ஓர் பெட்டிசம் அணைத்திருக்கிறுர்.

### பலப்பிட்டியா பகுதி

பலப்பிட்டி பிரதிநிதி திரு பிரான்சிஸ் டீ சோய்சா தெரிவுக்காலத்தில் றப்பர் கட்டுமான சங்கத்தில் அங்கத்தவராகவிருந்து அரசாட்சியாரிடஞ் சம்பளம் பெற்றதால் அவரது தெரிவு முறையாகாதென D. B. Z. W. தசநாயக்கா என்னும் வாக்காளன் ஓர் பெட்டிசம் அணைத்திருக்கிறுர்.

### சிலாபப்பகுதி

சிலாபப் பகுதிக்குப் போட்டியின்றித் தெரிவு பெற்றுத் தற்போது கைத்தொழில் வியாபார மந்திரியாகவிருக்கும் திரு. C. C. S. கொறியா தகாத முறையாகவும் சட்டத்துக்கு மாறுன விதமாகவும் தெரிவு பெற்றதால் அங்கத்தவராகத் தகுதியற்றவர் என திரு. F. A. விஜயசேகரா என்பவர் ஓர் பெட்டிசம் தாக்கல்செய்திருக்கிறுர்.

## கலம்பகம்

கொழும்பு ஆபத்துச் சகாயச்சங்கத்தின் 105- வது வருடாந்தக் கூட்டம் சென்றவாரம் நடைபெற்றதாம்.

o o o

1936-ம் வருடம் மார்ச்சு மாதம் நடைபெற்ற மருத்துவப் பெண்கள் பரீட்சையில் முதலாவது வகுப்பில் 14 பேரும் இரண்டாவது வகுப்பில் 21 பேரும் சித்தியடைந்திருக்கின்றனராம்.

o o o

யாழ்ப்பாணத்தில் தற்போது சுப்பிறீங்கோட்டு நீதிபதியாகக் கடமை பார்க்கும் கௌரவ அக்பார் அவர்களுக்கு, பிரபல வியாபாரியான திரு தாதாபாய் அவர்கள் சென்ற 22ந் தேதி ஞாயிற்றுக் கிழமை தனது கடையில் ஓர் உபசாரம் நடாத்தினுராம்.

o o o

வடமத்திய மாகாணத்திலிருந்து உள்ளூர்ப் பொருளாகிய நெல் குரக்கன் முதலியவற்றை வெளியே கொண்டு செல்லக்கூடாதெனச் சென்றவருடம் உண்டாக்கப்பட்டசட்டம் சென்றமாதம் 27ந்தேதி நீக்கப்பட்டு விட்டதாம்.

o o o

திரிகோணமலைப் பட்டணத்துக்கு 3 மைல் தூரத்திலுள்ள ஒருபழைய குளத்திலிருந்து திரிகோணமலைப் பட்டணத்துக்கும் துறைமுகத்துக்கும் குளாய் மூலம் தண்ணீர் உதவும் முயற்சி விரைவிற் செய்யப்படுமாம்.

o o

மாத்தளை தெற்கைச் சேர்ந்த நந்தனை என்னுங் கிராமத்திலுள்ள அரசினர் கலாசாலையில் உதவிஉபாத்தியாயராகவிருந்த திரு. எச். பி. தென்னக்கோன் என்பவர், தனது கலாசாலையில் கல்விபயின்ற ஒரு மாணவியின் தந்தையார், தன்மீது வீண் அபவாதத்தைக் கூறிப் பொலிஸ் நீதிபதிக்கு ஒரு விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தாரென்னும் அவமானத்தினுல் றப்பர் மருந்தை உட்கொண்டு தற்கொலை செய்து கொண்டாராம்.

o o o

மறியற்சாலையிலுள்ள சில கைதிகள் ஓய்வுபெறும் நோக்கத்துடன், நிலத்திற்படரும் ஒரு செடியின் இலையைத் தேகத்தில்வைத்துக் கட்டிப் புண் உண்டாகும்படி செய்து விடுகின்றுர்களாம். இவ்விதமே உண்டாக்கிய இரு புண்கள் காரணமாக மகாராச் சிறையிலிருந்த பொடியாகாமி என்பவன் மரணமடைந்தானும்.

o o o

அசாமைச் சேர்ந்த யுதிக்பாய் என்னுமிடத்தில் ஆலங்கட்டிமழை பெய்தமை காரணமாகக் கட்டிடச் சுவர்கள் இடிந்து விழுந்து பலரைக் காயப்படுத்தி விட்டதாம்.

o o o

சேலத்தைச் சேர்ந்த சேத்தமங்கலங் கிராமத்திலுள்ள அசீஸ், அப்துல்காதர் என்னும் இரு சகோதரர்கள் தங்கள் குதிரையை உள்ளே கட்டுவதா, வெளியிற் கட்டுவதா என்னும் விஷயத்தில் வாக்குவாதப் பட்டுக் கத்தியினுல் ஒருவரையொருவர் தாக்கிப் படுகாயமடைந்தனராம்.

o o o

சென்னைச் சர்வ கலாசாலையில் சேரும் மாணவர்கள் 15- வயதுக்கு மேற்பட்டவர்களாயிருக்கவேண்டுமென ஷெகலாசாலை அதிகாரிகள் தீர்மானித்திருக்கினறனராம்.

o o o

பாலத்துறையைச்சேர்ந்த எண்ணெய்வியாபாரியான திரு. பழனிச்செட்டியார் என்பவர் சட்ட விரோதமாக 4 ருத்தல் கஞ்சாவை வைத்திருந்தாரெனக் குற்றஞ்சாட்டப்பட்டு ஒருவருடக்கடுங்காவற் றண்டனை விதிக்கப்பெற்றுராம்.

o o o

மெச்சிக்கோ நகரின் மீது பறந்து சென்ற ஆகாயவிமானமொன்று கீழேவிழுந்து நொருங்கியமையால் 10 பிரயாணிகளுட்பட 15 பேர் உயிர் துறந்தனராம்.

புத்தளப்பகுதியில் நெல்முதலியபயிர்கள் விளைவு குறைந்தமையால் உணவுப் பொருள் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறதாம்.

o o o

பிறிட்டிஷ் கடற்படையின் உதவித் தளகர்த்தரான திரு. சாமர்வில் என்பவர் அயர்லாந்திலுள்ள தமது இல்லத்திலிருக்கையில் யாராலோ சுட்டுக் கொல்லப்பட்டாராம்.

o o o

இலங்கைச் சுப்பிறீங் கோட்டுப் பிரதம நீதிபதியான கௌரவ சேர் பிலிப்ஸ் மக்டொனுல்ட் என்பவர் ஓய்வு பெற்று விட்டார். அவரிடத்திற்கு இன்னெருவர் நியமனஞ் செய்யும் வரையும் நீதிபதி திரு. L. G. டால்ற்றன் என்பவர் கடமைபார்ப்பாராம்.

o o o

இங்கிலாந்தைச் சேர்ந்த காம்ஸ்கமபர் என்னுமிடத்தில் ஏற்பட்ட ஒரு விமான விபத்தினுல் 5 பேர் உயிர் துறந்தனராம்.

o o o

பங்களூரில் இந்தியப் பொருள்களைக் கொண்டுசெய்யப்படும் ஆகாய விமானமொன்று விரைவில் வேலை முற்றுப்பெறுமாம்

o o o

வடஇந்தியாவைச் சேர்ந்த கோன்பூ என்னுமிடத்தில் வசிக்கும் ஒரு வியாபாரி கள்வருக்குப் பயந்து வீட்டுக் கூரைக்குள் மறைத்து வைத்திருந்த 750 தங்கப்பவுண் பெறுமதி யுள்ள நோட்டுகளை ஒரு குரங்கு எடுத்துக்கொண்டு போய் விட்டதாம். அந்தக் குரங்கைப் பிடிப்பதற்கு அரசினர் முயற்சி செய்கின்றனராம்.

o o o

கலுவா என்னுமிடத்தில் வசிக்கும் இரு சிங்களவர் சுப்பையா என்னும் யாழ்ப்பாணத் தமிழ் வாலிபனைத் துன்புறுத்தி அவரிடமிருந்த பணத்தை அபகரித்தனர் எனக் கழுத்துறைப் பொலிஸ் கோட்டில் குற்றஞ் சாட்டப்பட்டுத் தனித்தனி 4 மாதக் கடுங்காவற் றண்டனையும் 50 ரூபா அபராதமும் விதிக்கப் பெற்றனராம்.

o o o

சென்ற மாதம் நடைபெற்ற வைத்தியப் பரீட்சையில் சித்தியடைந்துள்ள 10 பேரில் ஸ்ரீமதி L. G. செல்லையா என்னும் பெண்மணியும் ஒருத்தியாம்.

o o o

நேர்பாளத்தைச் சேர்ந்த யோக்பாணிக் என்னுமிடத்தில் சணல் ஆலை அமைப்பதற்காகத் தொழிலாளர் வேலைசெய்துகொண்டு நிற்கையில் மேற்கட்டிடத்தின் ஒரு பகுதி இடிந்து விழுந்ததால் 200 பேர் மரணமடைந்தனர். பலர் காயமடைந்தனராம்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 3410

புன்னாலைக்கட்டுவன்
வயிரமுத்து பொன்னையா
வழக்காளி

புன்னாலைக்கட்டுவன்
தாமோதரம்பிள்ளை முத்துச்சாமி
எதிராளி

யாழ்ப்பாணம் பெரியகோட்டில் 3410-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக்காணியை 1936-ம் ஹு சித்திரை மீ 22-ந உ புதன்கிழமை பிற்பகல் 4 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்கு ஈவினையில் இருக்கும் காணி "கொல்லபுலம்" நிலப்பரப்பு இலாச்சம் 17-ம். 12½ குளியும், கிணறும் வான்பயிர் செய்பயிர்களும். எல்லைகள்: கிழக்கு அப்பாக்குட்டி தம்பிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். தெற்கு வேதவனம் இராசகிருஷ்ணருக்கும் மறுபேருக்கும், கந்தையா பெண் நல்லம்மாவுக்குமுடைய ஆதனம். மேற்கு செல்லையா பெண் அன்னமுத்துவின் ஆதனம். வடக்கு ஆறுமுகம் அருணுசலத்தின் ஆதனம். தெற்கு எல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றில் தண்ணீர்ப்பங்கு பிறநீங்கலாகவும் துர்வைப்பங்கும் இரண்டு தென்னமரங்களும் மிகுதியானதும் அதில் அடங்கியவைகளும் சேர்ந்தவைகளும்.

1936ஹு பங்குனிமீ 19உ

P. Vaitheaswaran Iyer
கொம்மிஷனர்.

(107) 5-4-36-1

அம்பலாங்கொடையைச் சேர்ந்த திரு. கே. டி. நந்திரிஸ் டி. சில்வா என்பவருக்குச் சொந்தமான 1500 ரூபா பெறுமதியுள்ள ஒருசெக்சம்பந்தமாக ஏமாற்றஞ் செய்தாரென, பழைய அரசாங்கசபையில் அங்கத்தவராயிருந்த திரு. ஜீ. சி. ஆர்தர் டி. சொய்சா என்பவர்மீது ஒரு வழக்குத் தொடரப்பட்டிருக்கிறதாம்.

o o o

யாழ்ப்பாணத்தில் செம்படவரால் பிடிக்கப்படும் ஆமைகளைக் கொல்லும்வரை விட்டுவைப்பதற்கென ஒருகுளம் விரைவில் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படும். தற்போது பிடிக்கப்படும் ஆமைகள் கொல்லப்படும்வரை வெய்யிலில் கிடக்கவிடப்படுகின்றனவாம்.


## சலாமிசிரி லேகியம்.

இந்த லேகியத்தை நான் அனேக பிரபுக்களுக்குச் செய்துகொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறுர்கள். ஆனுல் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனுல் உண்டாகும் சுகத்தை அடையும்படி பொதுநலத்தைக் கருதியே இப்போது இதைப்பற்றி விளம்பரப்படுத்தினேம்.

இது சலாமிசிரி, குங்குமப்பூ, சிலாஜித, கஸ்தூரி, குமாஸ்தாக, பீதாஞசாலாமுஸ்லி, சப்தேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சாரப்பருப்பு, பாதம்பருப்பு. சாத்தாவாணி, நீர்முள்ளி விதை, நாகம்பூ, வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளி பஸ்பம், அயக்காந்த செந்தூரம். சாம்பிராணி பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனுல் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒரு வருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால் மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேக புஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இதன் விலை ராத்தல் ஒன்றுக்கு ரூபா 20. அரை ராத்தல் ரூபா 10. கால் ராத்தல் ரூபா 5. தபாற்செலவு வேறு.

சிங்கப்பூர், பினங்கு முதலிய தொடுவாய் ராச்சியப்பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினுல் முன் மனியாடர் அனுப்புதல் வேண்டும்.

க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை
காத்தான்குடி போஸ்ட், மட்டக்களப்பு, சிலோன்.
Kattankudi P. O. Batticaloa, Ceylon.

(105) 5-4-36-8

# உடல் நூல்.

(சாவைநகர், ஆசிரியகலாசாலைப் பிரசாரகர்
திரு. நி. வ. வீரகத்திப்பிள்ளை அவர்கள் எழுதியது.)

(உரிமை ஆக்கியோனுக்குரியது)

## கழிவுமண்டலம்
(முற்றொடர்.)

தோலைப் பேணும் முறைகள்:- தோலின் மேற்பரப்பில் சுவேதநீர்க் கோளத்திலிருந்து வெளியேறும் வியர்வையும் நிணக்கோளத்திலிருந்து வெளியேறும் நிணநீரும் வந்துபடிந்திருப்பதை நாம்பலமுறைகளில் அவதானிக்கிறோம். அப்படிப் படிவதினால் அழிந்துபோகும் தோலின் பாகங்களும் நம்முடையின்பாகங்களும் புழுதிகளும் அவையுட்படிந்து ஓர்வகை அழுக்காகிய படையைப் பிறப்பிக்கிறதையும் நாம் கவனிக்கத் தக்கதாய் இருக்கின்றது. இவ்வழுக்கை நாம கழுவித் தோலைச் சுத்தமாய் வைத்திருக்கவேண்டும். சுத்தமாகக் கழுவி வைத்திராவிடில் உண்டாகும் தீங்குகள்:-

1. சுவேதநீர்க் கோளங்கள் தூசிகளினாலடைக்கப்பட்டு வியர்வை வெளியேறுது தடுக்கப்படும்.

2. நிணக்கோளங் களிலிருந்து நிணநீர் வெளியேறுது தடுக்கப்படும். அப்படித் தடுக்கப்பட்டால் தேசம் வனப்பில் குன்றும். மயிர்கள் மாய்ந்து பிளவுபட்டு உதிர்க்கப்படும். நிணநீர் தோலினுள்ளிருந்து கருங்காய்கள் அல்லது கட்டிகளைப்பிறப்பிக்கின்றது.

3. இவ்வித அழுக்குப்படை தோலின் உணர்ச்சியைகுறைத்துவிடும்.

4. இவ்வழுக்குப்படை ஒட்டிப்பிழைப்பன பாரிய நோய்க்கிருமிகளுக்கு இருப்பிடமாய்த் தோன்றும்.

5. இவ்வழுக்கு கெட்டமணத்தைச் சூழவிருப்போருக் களிக்கும். இவ்விதத்தீங்குகளை அகற்றுவதற்கு நாம் சுத்தசலங்கொண்டு நாளாந்தம் தோலைக்கழுவி அல்லது ஸ்நானஞ்செய்து புனிதமாய் வைத்திருக்க வேண்டும். ஆனால்குறித்த அழுக்குப்படையில் எண்ணெய்ப் பொருள் போன்ற நிணம் மிகைத்திருப்பதினால் அது சலத்தினுற் சுலபமாய்க் கழுவப்படமாட்டாது. ஆகையாற் சவர்க்காரந் தேய்த்துக் கழுவுவதினுல் மாத்திரம் அழுக்குச் சுத்தமாய் அகற்றப்படும்.

தோலைப் பேணும் மறுமுறைகள்பல. அவைகளிற் சிலவற்றை அடியிற் காண்க.

ஒழுங்காய் ஸ்நானஞ் செய்வதும், அளவான காற்றிலும் வெளிச்சத்திலும் நடமாடுவதும், தோலிற் காயங்கள் ஏற்படுங்காலங்களில் அக்காயங்களைக் கட்டிக், குணமாக்கலும், அளவுக்கு மிஞ்சிய குளிரில் நடமாடாது விடுதலும் தோலைப்பேணும் முறைகளிற் சிறந்தனவாகும்.

### ஸ்நான வகைகள்.

1. வெந்நீர் ஸ்நானம்:- குழந்தைகளும், வயோதிபரும், வியாதிஸ்தரும் வெந்நீரில் ஸ்நானஞ் செய்ய வேண்டும். வெந்நீர் 115°F சூடுள்ளதாய் இருக்கவேண்டும். வெந்நீர் ஸ்நானப் படுகைக்குப் போவதற்கு முன் அல்லது இராப்போசனத்துக்குமுன் நிகழவேண்டும். ஏனெனில் வெந்நீர் ஸ்நானத்தின்பின் குளிர்காற்று சருமத்தில்தாக்குமானுல் சலதோஷம் தடிமல் போன்ற நோய்களுக் காளாவோம்.

2. குளிர் சல ஸ்நானம்:- இது காலையில் நிகழ்த்த வேண்டியதொன்று. சுகதேகமுள்ளவர்கள் அனுட்டிக்கவேண்டிய தொன்று. உஷ்ணப்பிரதேச வாசிகளுக்கேற்றது.

3. உப்புச்சல ஸ்நானம்:- கோடைகாலத்துக் கேற்றது. சிரமதனுட்டிக்கும் காலங்களிலும் உணவு உண்டவுடனும் இவ்வகை ஸ்நானம் தவிர்த்து வைக்கப்படவேண்டியதாகும். கடற்சலத்திற் குளிப்பதற் கேற்ற நேரம் பகல் 11 மணியாகும். ஏனெனில் அந்நேரத்தில் நமது தேகம் முழுப்பலன் கொண்டிருக்கின்றது.

கழிவு பொருட்களைத் தேகத்திலிருந்து வெளியேற்ற முறுப்புகளில் மூன்றாவதாய் அமைந்திருப்பது பிருக்கம் அல்லது குண்டிக்காய் எனப்படும் (The Kidneys) இது கீழ்வயிற்றிலே முள்ளந் தண்டுக்கு முன்னே பக்கத்துக்கொன்றாய் இரு கூறுகளை உடைய மாங்காய் வடிவமானவோர் உறுப்பு. இதன்நிறம் இருண்டசிவப்பானது. 4" அங்குல நீளமும் $2\frac{1}{2}$" அங்குல அகலமுமுடையது. ஒவ்வோர் கூறும் ஐந்து அவுண்சு நிறையுள்ளது ஒரு மெல்லிய சவ்வினால் மூடப்பட்டுள்ளது. இதில் நாடிகளும் நாளங்களும் வந்து பொருந்துகின்றன. நாடி இரத்தத்தைக் கொண்டுவருகின்றது. நாளம் காரிரத்தத்தை எடுத்துச்செல்வது. அத்துடன் மூத்திரநாம்பும் (அல்லது கொடியும்) இணைந்திருக்கின்றது. இதன் தொழில், குண்டிக்காய்களினால் இரத்தத்திலிருந்து பிரித்து எடுக்கப்பட்டமூத்திரத்தை மூத்திர கோசத்துக்குக் கொண்டுபோவதே. (படம்பார்க்கவும்)

மூத்திர நரம்புகள் ஒவ்வொன்றும் 14" அங்குல நீளமுள்ளது. மூத்திர கோசத்தையும் குண்டிக்காய்களையும் இணைக்கின்றன.

மூத்திரகோசம்:- இது மெல்லிய பேசிகளாலானது. உருவத்தில் சிறுகுடம் போன்றது. கூபகத்துள் அமைந்திருக்கின்றது. உருவத்தில் தலைகீழாகக்கவிழ்த்து வைக்கப்பட்டமுட்டியையொத்தது. இதன் தொழில் குண்டிக்காயிலிருந்து மூத்திர நாம்புமூலம் சொட்டப்பட்ட மூத்திரத்தைச் சேகரித்துவைத்துக் கழிப்பதே. சுகதேகியின் மூத்திரம் களங்கமற்றது. வெளிறினமஞ்சள் நிறமானது. மூத்திரத்துள் கொஞ்சத்தை ஓர் பாத்திரத்துள் எடுத்துப் பரிசோதித்துப் பார்த்தால் அதில் உப்பு, நிபாக்கினி, கெந்தகம், சோடியம், பொட்டாசிய உப்பு முதலியவைகள் கலந்திருப்பதை அறியலாம். நாளொன்றுக்கு ஓர் சுகதேகியின் சரீரத்திலிருந்து கழிக்கப்படும் மூத்திரத்தின் அளவு 50 அவுன்சாகும். காலநிலைக்கேற்ப இத்தொகை வித்தியாசப் படுகின்றது. மழைகாலத்தில் வெளியேறும் மூத்திரத்தின் அளவு அதிகம். ஏன்? மழைக்காலங்களில் தோலினுள் அமைந்திருக்கும் இரத்த நரம்புகள் விறைப்பதால் அவ்விடத்துக்குச்செல்லவேண்டிய இரத்தமும் உள்ளுறுப்புகளை நாடிஓடுகின்றது. ஆகவே உள்ளுறுப்புகளுக்கு இரத்தப் பிரவாகம் அதிகரிக்கின்றது. இரத்தம் அதிகரிக்க அதிலுள்ளநீரும் அதிகரிக்குமென்பது சொல்லாமலே புலப்படும்.

நாலாவது உறுப்பு:- பிளிகை அல்லது மண்ணீரல் (The Spleen) பிளிகை இரைப்பைக்கும் கணையத்துக்கும் இடப்பக்கமாய் அமைந்திருக்கின்றது. இது இருண்டகபில நிறத்தையுடைய தசையாலானது. ஐந்து அங்குல நீளமானது. ஐந்து அவுண்சு நிறையுள்ளது. இதனைச் சூழ்ந்ததோர் மெல்லிய சவ்விருக்கின்றது. இரத்தத்தால் நிறைந்திருக்கின்றது. பிளிகை நாடியால் இவ்விடத்துக்கு இரத்தங் கொண்டுவரப் படுகின்றது. பிளிகை நாளத்தால் காரிரத்தம் எடுத்துக் கொண்டுபோகப் படுகின்றது. இதன் தொழில் பூரணமாய் அறியப்படாததொன்று. என்றாலும் இவ்விடத்தில் வெண்சிவ அணுக்கள் விர்த்தியாகின்றன வென்றும் களைத்த உபயோகமற்ற செஞ்சீவ அணுக்கள் சேகரிக்கப்பட்டு அடக்கம் பண்ணப் படுகின்றனவென்றும் இவ்விருநியாயங்கள்பற்றி இவ்வுறுப்பை வெண்சிவ அணுக்களின் பிறப்பிடமென்றும் செஞ்சீவ அணுக்களின் சேமக்காலை என்றும் அழைக்கப்படுகின்றதென்றும் நூலோர் கூறுகின்றனர்.

பழுதடைந்த செஞ்சீவ அணுக்கள் காரிரத்தத்துடன் எடுத்துச் செல்லப்படுவதால் இதுவுமோர் கழிவுறுப்பாய் எண்ணப்படுகின்றது. இங்ஙனம் எடுத்துச் செல்லப்பட்ட செஞ்சீவ அணுக்கள் ஈரலைச் சேர்ந்து அவ்விடத்தில் பித்தநீராய்ப் பேதிக்கப்படுகின்றன.

## ஆணாக மாறிய பெண்

இங்கிலாந்தில் ஒக்ஸ்போட்டில் நெடுங்காலமாக பெண் எனப் பெற்றோராலும் சிநேகிதராலும் கருதப்பட்ட ஓர் பெண் தற்போது ஓர் வாலிபனாகத் தச்சுவேலைசெய்து வருகிறான். இவன் பெண் எனக்கருதப் பட்டிருந்த காலத்திலும் ஆண்களின் கூட்டங்களிலேயே காணப்படுவானும். பெண்களைப்போல் நடக்கவேண்டுமென்று யாராவது கூறினால் இவனுக்கு அக்காலத்தில் கோபமிகுதியாயிருக்குமாம் இவன் 16 வயதில் நோய்வாய்ப் பட்டிருந்தசமயம் வைத்தியர் பரிசோதனை செய்தபோதே இவள் ஓர் ஆண்பிள்ளையெனக்கண்டு பிடிக்கப்பட்டது.


தமிழ் மஞ்சரி
முதற் புத்தகம்
(ஆறும் வகுப்புக்குரியது)
வித்தியாசாலைகளினுபயோகத்துக்குரியதென இலங்கை வித்தியாபகுதியாரால் 3-3-36-ல் அங்கீகரிக்கப்பட்டது.
விலை சதம் 60.
வடஇலங்கைத்தமிழ்நூற்பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்டது.
கிடைக்குமிடம்:-
தனலக்குமிபுத்தகசாலை, சுன்னுகம்.


## மதிப்புரை

### நாட்டுச் சீவனசாஸ்திர பாடபுத்தகம்

மேற்போந்த அழகிய நாமந்தாங்கிய புத்தகமொன்று தரப்பெற்றேம். இதன் ஆக்கியோன் ஆசிரியர் ஸ்ரீ இ. தர்மலிங்கம் அவர்கள். 284 பக்கங்கள் கொண்டது. சுன்னுகம், வடஇலங்கைத் தமிழ்நூற் பதிப்பகத்தாரால் வெளியிடப்பெற்றது. - விலை ரூபா 2. இப்புத்தகம், கனிஷ்ட, சிரேஷ்ட ஆசிரிய தராதர பத்திர வகுப்புகளுக்கென வித்தியாபகுதியாரின் பாட அட்டவணையை முற்றும் அனுசரித்தெழுதப்பட்டது. இது சுற்றுடல், தாவரவர்க்கம், பிராணிவர்க்கமென மூன்று பிரிவுகளாக வகுக்கப்பெற்றுள்ளது. அம்மூன்றனுள் முதலாவது பிரிவாகிய சுற்றுடலிலே சுகாதார, சனசமூக, பொருளாதார, அரசியல் விஷயங்களும், இரண்டாவது பிரிவாகிய தாவரவர்க்கத்திலே தாவரங்களின் பகுதி, அமைப்பு, தொழில், பரவும்விதம், வர்க்கவிருத்தி, உணவு, சில காய் கனிகளின் செய்கை, தரை, மழைவீழ்ச்சி, சுவாத்திய தாவரப்பிரிவு எனும் விஷயங்களும் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன. மூன்றாவது பிரிவாகிய பிராணிவர்க்கம், மிருகம், பறவை, ஊர்வன, மீனினம், பூச்சியினம் என ஐந்தாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு இனமும் விரிவாகவும் சாஸ்திர ரீதியாகவும் விளக்கப்பட்டுள்ளது. ஆக்கியோன் தாம் கற்ற, கற்பித்த, நேரிற் கவனித்த விஷயங்களின் அனுபவத்தைக்கொண்டும், இன்னும் பலவகை நூல்களினதும், வெளியீடுகளினதும் உதவியைக்கொண்டும் இவ்வரிய நூலை ஆராய்வுடன் அணிவகுத்துச் சித்திர விளங்கங்களுடன் எழுதியிருக்கிறாரென்பது இதனைப் படிப்பாருக்கெல்லாம் இனிது தெளிவாகும். அவர் இந்நூலை ஆக்குங்கால் அந்தந்த விஷயங்களிலே நிபுணத்துவம வாய்ந்த அறிவாளிகளின் உதவியைப் பெற்றதிலிருந்து இதனை எந்தவிதமும் அதிகந் திருப்திகரமானதொன்றாய் வெளியிடுவதிலே பெரிதும் ஆர்வம் கொண்டுள்ளாரென்பது தானேபோதரும். அவரது ஆர்வம் பூர்த்தியடைந்திருப்பதைக் கவனித்துச் சந்தோஷமானேம். இந்நூல், ஆசிரியர்கள் மாணவர்கள் ஆதியாம் இருபாலாராலும் உவந்து ஏற்றுக்கொள்ளப் படுமென்பதே நமது அபிப்பிராயம். அவர்களது உபயோகத்திற்கென வித்தியாபகுதியாரின் பாட அட்டவணையும் இந்நூலிலே பிரசுரஞ் செய்யப் பெற்றிருக்கிறது. அதனால் அந்தந்த வகுப்புகளுக்குரிய விஷயங்களை ஆசிரியர் தெரிந்து கற்பிக்கக்கூடியோராவார்கள். வண. சுவாமி ஞானப்பிரகாசர், வித்தியாதரிசி ஸ்ரீ சே. தியாகராசா, யாழ்ப்பாணம், அரசினர் மாதிரித்தோட்டத்து மனேஜர் ஸ்ரீ எம். ஆர். எம் ஜெபரட்ணம், பரமேஸ்வரக் கல்லூரிப் பிரதமாசிரியரும் அரசாங்கசபை அங்கத்தவருமான ஸ்ரீ எஸ். நடேசபிள்ளை முதலானேர் மனமுவந்து அளித்திருக்கும் போந்த மதிப்புரைகளே இந்நூலின் சாத்திரத்தை இனிது எடுத்துக்காட்டப்போதியன. நமக்கு அனுப்பிய பிரதிக்காக நன்றி கூறுகின்றேம்.

—"சத்தியவேத பாதுகாவலன்,"
27-3-36.


கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 8326-ம் இலக்க வழக்கின் விற்பனவு சித்திரை மீ 18உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி என்றிருப்பது, முற்பகல் 8 மணிக்கு என்பதாகத் திருத்தப்பட்டிருக்கிறதென்பதை அறிவிக்கிறேன்,

C. Kandiah Chettiar
கொம்மிஷனர்.

மாணவர்பகுதி

# அராபிக் குழந்தைகள்

(கன்னாகம் மயிலணிச் சைவவித்தியாசாலை ஆசிரியர் திரு. இ. சபாரத்தினம் அவர்கள்.)

அரேபியா என்பது ஆசியாக்கண்டத்தின் தென்பாகத்தில் உள்ள ஓர்குடாநாடு. இது ஓர் பெரியபாலைவனப் பிரதேசமாயிருக்கிறது. இங்கு வசிக்கும் அரேபியர் நாடோடிகள். இவர்கள் முகமது சமயத்தைச் சேர்ந்தவர்கள். அரேபிக்குடும்பத்தில் ஓர் ஆண்குழந்தைபிறந்தால் இனத்தவர்கள் பெற்றோரைப் பார்த்து "அல்லா ஓர் நன்கொடை கொடுத்திருக்கிறார்" என்பார்கள். பெண்பிறந்தாலோ உறவினர் பெற்றோரைப் பார்த்து "இப்பெண் உங்களைச் சந்தோஷப் படுத்தக்கூடியமட்டும் சந்தோஷப்படுத்தட்டும்" என்பர். தகப்பன் "இது என்துக்கம் என்பான்"

ஓர்பிள்ளை பிறந்து ஒருவாரத்தின்பின் அங்கு ஓர் விருந்து நடைபெறும். அவ்விருந்திற்கு அவ்வம்சத்தலைவனும் சிநேகிதரும் அழைக்கப்படுவர். பெண்கள் அவ்விடத்தில் அழுதுகுழறுவார்கள். ஆண்கள் நடனஞ்செய்வர். புளூற் என்றவாத்தியமும் வாசிக்கப்படும். ஒருவிதமேளமும் அடிக்கப்படும். பொதுவாக அங்கு வாத்தியங்களுடன்கூடிய அழுகையாகவேயிருக்கும். பிள்ளைகளே? எங்கள் ஊரில் ஒருகுடும்பத்தில் ஓர் பிள்ளைபிறந்தால் எல்லோருஞ் சந்தோஷப் படுவார்கள் என்பது உங்களுக்குத்தெரியும். ஆனால் அக்குடும்பத்தில் ஓர் பிள்ளை பிறந்தால் துக்கப்படுவார்கள் என்றுகேட்க உங்களுக்கு வியப்பாயிருக்கும். அவ்விடத்தில் அழுகை முடிந்தவுடன் வெள்ளாட்டு இறச்சித் துவட்டல், பேரீச்சப்பழம், அத்திப்பழம், தேன், நெய், ஆட்டுப்பால் முதலியன சாப்பிடுவார்கள். பிள்ளைகளுக்கு ஞானத்தாய் அல்லது ஞானத்தகப்பன் நாமகரணமிடுவர்.

அராபியர் கூடாரவாசிகள் என்பது உங்களுக்குத் தெரிந்தவிஷயம். அத்தி இலைகளினால் கூடைகட்டி அதிற் பிள்ளைகளைக்கிடத்திக் கூடாரங்களில் தொங்கவிடுவர். பகற்காலத்திற் பிள்ளைகளை இடுப்பில் எடுக்கித்திரிவர். வளர்ந்த பிள்ளைகளுக்குக் குதிரை, ஆடு, மாடுகளில் அதிக விருப்பமிருக்கும். குதிரைக்குட்டி ஒவ்வொன்றை ஒவ்வொருகுழந்தையும் வளர்ப்பதுண்டு. அக்குதிரைக்குட்டிகள் குழந்தைகளுக்குப்பின்னே எந்தநேரமும் ஓடித்திரியும்.

அராபியர் பெண்பிள்ளைகளைக் கவனிப்பதில்லை. உனக்கு எத்தனை பிள்ளைகள் உண்டு என்று ஓர் அராபியனைக் கேட்டால் அவன்தன் ஆண்மக்களையே எண்ணிச் சொல்வான். பெண்பிள்ளைகள் இல்லையோ வென்றால் எனக்குத்தெரியாது என்பான். ஒரு அராபியன் பல பெண்களை விவாகஞ் செய்யும் வழக்கமுண்டு. அவன் எல்லாப்பொருள்களிலும் மேலாகத் தன் குதிரையையும், அடுத்தபடியாகத தன் துவக்கையும், அடுத்தபடியாகத்தன் மூத்தமகனையும் நாலாவதாகத்தன் மனைவியரையும் நேசிப்பான்.

பெண்கள் இளமையிலேயே நூல் நூற்றல், இறைச்சி துவட்டல், சமைத்தல், தேன்பலகாரம் உண்டாக்கல், உடுப்புவெட்டல், முதலிய வேலைகளைப் பழகிக் கொள்வார்கள். ஆண்களும் பையன்களும் சாப்பிட்ட பின்பே பெண்கள் சாப்பிட முடியும். ஆண்கள் வேறு இடத்திலும் பெண்கள் வேறு இடத்திலுமிருந்து சாப்பிடுவர். விருந்தாளிகள் தங்குவதற்குப் பிரத்தியேகமாகக் கூடாரத்தில் பெரும்பாகம் எந்தநேரமும் காற்றும் வெயிலும் படுவதற்காகத் திறந்துவிடப் பட்டிருக்கும்.

சாதாரணமாகப் பல கூடாரவாசிகள் சேர்ந்து ஒருகூட்டத்தில் இருப்பதுவழக்கம். அப்பொழுது கோப்பியை அதிகமாக அருந்துவர். பெண்கள் வந்திருப்பவர்கள் யாரென்று திரைச்சீலைக் கூடாகத் துவாரஞ்செய்து பார்ப்பர். ஆண்களும் பையன்களும் சேர்ந்து கட்டுக்கதைகள் சொல்லிக் கொண்டிருப்பார்கள். பெண்கள் ஆண்களுக்குக் கிட்டப்போகாமல் தாங்கள் இருக்கும் இடத்தையும் ஆண்களிருக்கு மிடத்தையும் பிரிப்பதற்காக இடப்பட்டிருக்கும் திரைச்சீலையினருகே நின்று கதைகளைக் கேட்பர்.

நம்நாட்டில் முகமதியப் பெண்கள் முகமூடி அணிந்து செல்வதை அவதானித்திருப்பீர்கள். ஆனால் கூடாரத்தில் வசிக்கும் பெண்கள் முகமூடியணிவதில்லை. நகரங்களிலும் வீடுகளிலும்வசிக்கும் பெண்கள் ஒரு கிழமையில் வெள்ளிக்கிழமை பின்னேரம் மாத்திரம் உலாத்தவெளிக்கிளம்பலாம். அப்பொழுது முகமூடி அணிந்துகொண்டே செல்வர். உலாத்துபவர்கள் அதிகமாகச்சுடலை ஓரங்களுக்குச் செல்வர். அங்குச்சென்றவுடன் தங்கள் முகமூடிகளைக் களற்றிவிட்டு மற்றவர்களுடன் சிரித்துக்கதைப்பர். பொழுதுஅஸ்தமித்தவுடன் வீட்டுக்குத் திரும்பிச் செல்வர். மறுவெள்ளிக்கிழமை பின்னேரம் வருமட்டும் வீட்டில் அடைபட்டுக் கிடப்பர்.

கூடாரங்களில் வசிக்கும் பெண்கள் ஒவ்வொருநாளும் இடம்விட்டு இடம் பெயருவார்கள். பெரிய காவனிய வர்த்தகர்கள் செல்வதை அவதானிப்பார்கள். அராபியர் தங்கள் செயிக் (Sheekh) அவர்களுக்குவரி செலுத்துவதுவழக்கம். வரி அவரவர் தகமைக்குத்தக இருக்கும். சிலர்செம்மறியாடுகளும், சிலர் பேரீச்சம்பழச் சாக்குகளும், சிலர் வெள்ளாடுகளும், சிலர் ஒட்டகங்களும், இன்னுஞ் சிலர் குதிரைகளுமனுப்புவர். அராபியர்காசை ஓர் விளையாட்டுப் பொருளாகமதிப்பர். ஏதாவது காசுகிடைத்தால் அதைப்புதைப்பர். பின்புதைத்த இடந்தெரியாது மறந்துவிடுவர். அவர்கள் பெரும்பாலும் பண்டமாற்றே செய்வர்.

கூடாரவாசிகள் தங்கள் மிருகங்களை மேய்ப்பதற்காக எந்தநாளும் இடம் பெயர்ந்து கொண்டேயிருப்பர். இடம் பெயர எத்தனிக்கும் பொழுது தங்கள் கூடாரங்களைச் சுருக்கித் தடிகள் வேறாகவும், தோல் வேறாகவும் பிரித்து ஒட்டகத்தின் முதுகில் வைத்துக் கட்டுவர். சட்டிபானைகளையும் அங்குள்ள பழவர்க்கங்களையும் சாக்கிலிட்டு ஒட்டகத்தின் முதுகில் ஏற்றுவர். அவர்கள் செல்லும் பாதைகளிற் தண்ணீர் கிடையாதாதலின் தோற்பைகளில் தண்ணீர் எடுத்துச் செல்வர்.

அராபியர் பிரயாணஞ் செய்வது பார்க்க மிக அழகாயிருக்கும். பாரமேற்பட்ட ஒட்டைகள் ஒன்றின் பின் ஒன்றாய்ச் செல்லும். மனுஷர் வெள்ளைநிற அங்கியுடன் செல்வர். பெண்கள் நீலம் அல்லது சிவப்பு நிற அங்கியுடன் செல்வர். பிள்ளைகள் மஞ்சள் நிற அங்கியுடன் போவர்.

பிரயாணகாலங்களில் நடந்து செல்வோர் பாதரட்சையின்றியே நடப்பர். சிலர் ஒட்டைகளின்மேல் ஏறிச் செல்வர். தலைமைக்காரர் தாம் செல்வதற்கு ஒவ்வோர் ஒட்டகம் வைத்திருப்பர். வழியில் பெரும் மணற்குன்றுகளும் பங்களும், கற்பாறைகளும், நச்சுநீருள்ள சிறுவாவிகளும், ஏராளமாயிருக்கும். பகற்காலத்தில் வெயில் அதிகமாகவிருக்கும். இராக்காலத்தில் குளிர் மிகுதி. பகலிற் பனிப்புகார் இடையிடையே தோன்றி எல்லாவற்றையும் மறைத்துவிடும். வழிகாட்டி ஒருவன் இருப்பான். அவன் எந்த நேரமும் எப்புகாரிலும் வழிதவறாது செல்லத்தக்கவன். அவனுடைய உதவியினால் பல நாட்களாகப் பிரயாணஞ் செய்து ஓர் பாலைவனப் பசுந்தரையை அடைவர். அங்கு எல்லாம் பச்சையாயிருக்கும். நீர் காணப்படும் ஆயிரக்கணக்கான பேரீந்துகள் செழித்து வளரும் அவ்விடத்திலே சிறிதுநாட் தங்கியிருப்பர்.


## மருந்துச் சரக்குகளின் விளம்பரம்

இத்தாற் சகல வைத்தியர்க்கும், மருந்துச்சரக்கு வியாபாரிகட்கும் தெரிவிப்பதாவது:—இப்போது பெரியகடை மார்க்கட்டுக்கு வடக்குப் பக்கத்திலிருக்கும் சே. சிவக்கொழுந்து அவர்களின் மருந்துச்சரக்குக் கடையிலும், நல்லூர்வடக்குச் சட்டநாதர் கோயிலடியிலிருக்கும் மேற்படியாரின் மருந்துச் சரக்குக் கடையிலும், கஸ்தூரி, கோரோசனை, குங்குமப்பூ, காண்டாமிருகக் கொம்பு; சுத்தமான சிப்பி முத்தும் அடியிற் குறிப்பிட்டிருக்கும் விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்

| | களஞ்சு ஒன்றுக்கு | தோலா ஒன்றுக்கு |
|---|---|---|
| 1-ம் நம். கஸ்தூரி | 20—00 | 40—00 |
| ,, கோரோசனை | 3—00 | 7—00 |
| ,, குங்குமப்பூ | 50 | 1—20 |
| ,, முத்து | 14—00 | 32—50 |

1-ம் நம். காண்டாமிருகக்கோம்பு களஞ்சு ஒன்றுக்கு சதம் 50. றாத்தல் ஒன்றுக்கு ரூபா 40.

மேலே சொல்லப்பட்ட சரக்குகள் எல்லாம் முதல்தரமான நல்லசரக்குகளே, எங்களிடம் நேரில்வந்து பார்த்துக்கொள்ளலாம். இன்னும் சுருள் தங்கம், புனுகு, பச்சைக் கற்பூரம் ஜவ்வாது, அரைத்த சந்தணம், சந்தணக்கட்டை, சந்தணவில்லை, சாம்பிறாணிப் பதங்கம், தைலம், முதலியவைகளும், செண்ற், அத்தர் முதலிய வாசனைத் திரவியங்களும், திறமான பன்னீர்வகைகளும், அபிஷேகத்திரவியங்களும், ஓமவாட்டர், சுருட்டுக்கோடாச் சரக்குவகைகளும் பலவிதமான திறம் ஊதிவத்திவகைகளும், மற்றும் மருந்துச் சரக்குவகைகளும் தொகைக்கும் சில்லறைக்கும் சரசமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

தஞ்சாவூர், மு. ஆபிரகாம் பண்டிதர் அவர்களின் சஞ்சீவி மருந்து வகைகளும்; திருச்சி, டக்டர் A. மதுரம் அவர்களின் குரு மருந்து வகைகளும்; யாழ்ப்பாணம், டக்டர் ஜே. வஸ்தியாம்பிள்ளை அவர்களின் மருந்துவகைகளும் இவ்விடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வீ. பீ. மூலம் பெற விரும்புவோர், நான்கிலொருபாகத்தை முற்பணமாக அனுப்பவேண்டும். தொடுவாய்ப்பகுதிகளுக்கு முழுவதும் முற்பணமே அனுப்பவேண்டும்.

தபால், மனிஆடர் அனுப்பும் விலாசம்:

**ஆ. இராசையா,**
சே. சிவக்கொழுந்து அவர்களின் மருந்துச்சரக்குக் கடை
பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்.

(59) 29-12-35—12.


## இடியும் மழையும்

### நெருப்பவிக்கும்குழாய்களுடன் பொலிசார் தோற்றினர்

யாழ்ப்பாணம் 30

நேற்றையதினம் மின்னல் இடியோடு கூடிய மழை இடையிடையே பெய்தது. சரியாக 2 மணியளவில் வண்ணார்பண்ணை நாவலர் வித்தியாசாலைக்கருகாமையில் இருக்கும் பொன்னம்பலம் சபாபதி யென்பவரது வளவிலுள்ள ஓர் பனைமீது இடிவீழ்ந்தது. அதன்பயனாக அம்மரவட்டுச் சரிந்ததுடன் நெருப்பும்பற்றிச் சுவாலை விட்டு எரிந்தது. அந்நேரத்தில் மழையும் நின்றுவிட்டது. அம்மரத்தைச்சுற்றி வைக்கோல் குவியலும் வீடுகளும், வேலிகளு முள்ளவாதலால் திரு. சபாபதி உடனே இது விஷயத்தைப் பொலீசாருக்கு டெலிபோன்மூலம் அறிவித்தாராம். சிறிது நேரத்துக்கப்பால் இரு பொலீஸ்காரர்கள் நெருப்பவிக்கும் குளாய்களுடன் அங்கு பிரசன்னமாகி அவ்விடத்தில் குழுமியிருந்த ஜனங்களையும் பனைமரத்தையும் பார்த்துவிட்டுத் தம்மால் ஒன்றும் செய்ய முடியாதெனவும், பனையின்கீழ் காவலிருக்கும்படியும் கூறிச்சென்றனர். பின்னரும் 2 மணித்தியாலம்வரை நெருப்பெரிந்து தானாகவே அணைந்துவிட்டதாம். ந. கி.


## சுத்தமான கதர்ப்புடவைகள்.

திருப்பூர் சுயம்கதர் வேஷ்டிகள், சால்வைகள், துண்டுகள், ஷேட் துணிகள் முன்னிலும் பார்க்கச் சகாயமான விலைக்குக் கிடைக்கும்.

**ஆ. சு. வேதாரணியம்பிள்ளை,**
புடவை வியாபாரம்,
பெரியதெரு, சுன்னாகம்.

(50) 1-12-35×12-36.


தவவேடத்தில் மறைந்தொழுகுவோன் வேடனை ஒப்பான்,

## நாகர்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கண்டுபாடி வாழ்த்தல் பிறவாசரிடத்துக் காணப்படாமையின் ஏற்புடைத்தன்று. அல்லதூஉம் முரஞ்சியூரென்பது தமிழகத்தின்கண்ணதன்றுயின் இக்காட்டு இவ்வூர் என்னும் வாய்பாட்டாற் றெரித்துவழங்குதல் வேண்டுமாதலின் அஃதின்மையிற் றமிழகத்தேயாமென்பது பெறுதும். பெறவே இமிழ்கடல் வேலித் தமிழகங்காக்கும் முடியுடை மன்னர் மூவரென்பதன்றி நால்வரென்றல் கேட்டிலம். அதனுனாகரும் முடியுடை மன்ன ராயினரென்றல் பொருந்தாது. அற்றன்று நாகநாட்டினே முடியுடை மன்னர் மரபினராயிருந்து ஆண்டுநின்றும் ஈண்டுப்போதந்தாரெனின் வரும் இழுக்கென்னையோவெனின், அங்ஙனம் இவர்க்கொரு வரலாற்றுக் குறிப்பும் பெறப்படாமையானும் நாகர்கள் காதேறியதன்றித் தமிழகத்தின்கண்ணும் பண்டேதொட்டு வதிந்தாருமுளர் என்பது பெறப்படலானும் முடியுடை மன்னரை முடியுடை மன்னரென்பதன்றி அவர்குடிப் பிறந்தாரையும் பண்டும் இன்றும் யாண்டும் மரபன்மையானும் அஃதிழுக்கேயாமென்க. இக்கருத்தானும் நாகரென்பார் ராயர் என்னும் பெயர்க்கு வாளா வுரியரல்லராமை பெறப்படும். ஆயின் ஏனைப்பெயர்களெல்லாம் உள்ளவாறு வழங்காநிற்ப இஃதொன்றும் மாறுபட்டதெனக் கூறுதல் பொருந்திற்றன்றுமாலோவெனின், அற்றன்று. அவைகளும் பல்வேறுபட வழங்கும் ஏதல் வேற்றுமை (பாடவேற்றுமை)களே நற்றிணை முதலிய பொறிச்சுவடி (அச்சுப் புத்தகம்)க்கட் காண்மாதலின் அவை மாறுபட்டிலவென்பது பொருந்தாது. அம்மாறுபாடுகளெல்லாம் இடையே பாடுவோரும் எழுதுவோரும் கேட்போரும் தத்தம் கருத்திணுக்கியைய அமைத்துக்கொள்ளப் படுவனவாதல் ஒருதலையென்பது தெளிந்தவாறேபோல முடிநாகராயரென்பதூஉம் இடையே ஆக்கிக்கொள்ளப்பட்டதென்பது பிழையாமாறில்லையென விடுத்து இவ்வாராய்ச்சியொழிக ஒக்கும். இனி, இவ்வாராய்ச்சிக்கு முக்துற முடிநாகரென்னுஞ் சொற்கு இங்ஙனமிருத்தல் வேண்டும் இங்ஙனமிருத்தல்வேண்டுமெனத் துணியப்படாத பல பொருளும் உடம்பாடு தோன்ற மயங்கக்கூறுதல் என்னையோவெனின், அக்கூற்றுக்களென்பர் என்னுஞ் சொற்கொண்டு முடித்துப் பிறன்கோட் கூறலாக்கி அப்பொருள்களும் பிற்காலத் தமைந்தனவாதலின் அதுபற்றி அவையும் பொருந்துமென உடம்படுதலின மயங்கக்கூறுதலாகாதென்க. ஆயின் அவற்றைமறுத்த லென்னையெனின் அப்பொருள்கள் முற்காலத்தே அச்சொற்கு இயற்கையானே அமைந்தனவல்லவாமென்க. இனி முன்னே ஓரிடத்து முடிநாகனுரை ஆரியராயிருத்தல்வேண்டுமெனக் கூறியதென்னையெனின் ஆரியமொழிப் பொருள்படக்கூறின் முடிநாகர் ஆரியராதல் வேண்டும். ஆரியரார் உண்மையெனக் கொள்ளின் அம்முடிநாகர் நாகநாட்டு முடிநாகரினினறும் வேறாய்த் தமிழ்மொழிப்பொருள்படும் பெயரையுடைய நாகநாட்டு முடிநாகர் ஆகாரென்னுங் கருத்தாற் கூறியதன்றி ஆரியரென்றவாறன்று.

இனி முற்கூறியவாறுபோல முடிநாகனர் என்னும் பெயர் துணியப்படும் தமிழ்மொழிப் பொருள்படுமாறும், ஆரியர்சொல் லொப்புமையானும், தக்கலங் கடைப்பிடித்தலானும் திரித்துத் தம்மொழியாற் பொருள்கொண்டவாறும் என்னையோவெனிற் கூறுதும்.

நாடகப் பகுதி.

# தருமபுத்திரர் அல்லது துரோபதி துகில்

(மானிப்பாய். திரு. தா. சுவாமிநாதன் அவர்கள்.)

[உரிமை ஆக்கியோனுக்கே உரியது.]

(முற்றொடர்.)

துரியோ:—ஏது பேருரை இகழ்த்துகின்றீர்! நிறுத்தும், நிறுத்தும். (யுத்தமுழக்கம் செய்தனன். பார்த்தனைக்கிருபன் எதிர்க்க, அன்னுன் அவனது செவியைச் சிதைத்துவிட்டோட்டினன். துரியோதனனுமெதிர்த்து அன்னவன் பாணங்களுக்காற்றுது முதுகிட்டோடத் துணிந்தனன்.

அரிச்:—ஏ அரவமேவிய பதாகையாய்! சிலையானது கரத்திலிருக்கவும், போர்முனையில் நீ புறங்கொடுத்தோடின், ஊரின்கண்ணே யானையெருத்தமீது நீ உலாப்போகின்ற வீதியிற் காணும் பாவையர்தானும் யாது கூறுர்!

இருபுறம் சாமரை யிரட்டத் திங்கள் போல், ஒரு குடைநிழற்ற விவ்வுலகம் நின்னதா, மருவலர் கைதொழ வாழு கின்றநீ, பொருமுனை காண்டலும் போதல் போதுமோ!

உன்பெரும் துணைவரோ டுன்னையோர் கணத், தென்பெரும் கணைகளுக் கிரைகளாக்குவேன்; வன்பெரும் கொடிமிசை மடங்க லேற்றினுன், தன்பெரும் வஞ்சினம் தப்பு மேகொலாம்.

எங்களைக் கானில்விட் டிரவியேகவெண், திங்களைப் போனெடும் திகிரியோச்சினீர்; சங்களை பயில்வள நாடன்றண்டினுல், உங்களைக் களப்பலி யூட்டும் நாளையே,

இரவல ரிளையவ ரேத்து நாவலர், விரவிய தூதுவர் விருத்தர் வேதியர், அரிவையர் வெஞ்சம ரஞ்சு வோர் பெரும், குரவரென் றிவர்களைக் கோறல் பாவமே,

இருமருங்கிலும் சாமரையிரட்டச்சந்திரனைப் போன்ற ஒரு வெண்கொற்றக் குடையானது நிழலைச் செய்ய, இவ்வுலகை நின்னதாகக்கொண்டு, ஒன்னலர் வணங்க வாழ்கின்ற நீ, போர் முனையைக்காண்டலும் தோற்றேடுதல் தகுமோ! உன்பெருந் துணைவரோடுன்னை ஓர் இறைப்போதளவில் என்பெருங் கணைக்கு உணவாக்க வல்லன்யான். ஆனல் மடங்கலெழுதிய பதாகையை யுடைய என் தமையனது (வீமன்) பெரும் வஞ்சினம் தவறிப்போமே! எம்மைக் கானுறையவனுப்பிச் சதிரவன் மறைதலும், கலையினன் மேலெழுந்து விளங்குமாப்போற் பெரிய ஆஞ்ஞா சக்கரத்தைச் செலுத்திப் பூமியை ஆளுவை. சங்குகள் அலைகளில் வாழும் வளநாட்டையுடைய என் தமையனது (வீமன்) கதையால் உங்களை நாளைக்கொன்று களத்திற் பலியாயிடுவன். இரப்பவர், பாலர், புகழ்பாடுங்கவிஞர், தூதர், முதியோர், அந்தணர், அரிவையர், போருக்கஞ்சுவோர், உயர்ந்த ஐம்பெருங் குரவராமிவர்களைக் கோறல் மிகவும் பாவம். இப்போ நீயும் போர்க்கஞ்சியோடுவை. ஆதலின் உன்னைக் கோறல் பாவமென்று விடுத்தனன் அறிகுவை.

கன்னன்:—அரிச்சுன! எமது அரசனேடு நீ பொருதல் புகழேயன்று. என்னேடும் பொருத வருதவை பார்ப்போம்.

அரிச்:—மின்னெடு மின்மினி வெகுளுமாப்போல் வந்தனை. "வெந்தறுகண் வேழத்தை வேரிக் கமலத்தின் தந்துவினற்கட்டல்" போன்றது நின்செயல், என்னேடும் மாறுபட்டடத் துணிந்தனையாயின் இதோ நினக்கெதிரே தேரைச் செலுத்துவன்.

(தேரைக் கன்னனுக்கெதிரா செலுத்தினன். குதிரைகள் குமிறியார்த்தன. பாகரும் உடன்று கூவினர். வீரரிருவரும் வில்வளைத்தனர். கன்னன் உடலெங்கும் சோரிகக்க வலியிழந்தோடினன்,)

"தேருமொன் றொருவனே தேரிலாளுமிங், கியாருமஞ் சுதிரென விழ்ந்துரைத்த நீ, போருடைந் தோடுதல் போதுமோ? நறும், தாருடன் பொலிதரு தாம மார்பனே!

சொல்லலா மிருந்துழிச் சொன்ன சொற்படி, வெல்லலா மென்பது விதிக்குங் கூடுமோ! மல்லலா ளியைப்பல வளைந்து கொள்ளினும், கொல்லலா யிருக்குமோ குஞ்ச ரங்களால்!"

நறுந்தாருடன் பொலிதரு தாம மார்பனே! தேரொன்று, தேரில் வீரனே ஏகனுயிருக்கின்றுன், எதற்காக அஞ்சுவீரென்று இகழ்ந்துரைத்த நீ, இப்போ போரிற்றேற்றேடுதல் தகைமைத்தாமோ! இருந்தவிடத்தில் இருந்தபடி ஓர் நிகழ்ச்சியில் வெல்லுவேனென்று வாய்ப்பறை அறைதல் இயலும். ஆனற் கூறியபடி வெல்லுதல் நான்முகன்றனக்கும் இயல்புடைத்தாமோ! வலிமையையுடையவோர் அரிமாவைப்பல களிறுகள் சேர்ந்தெதிர்த்தாலும், அக்களிறுகளாலரிமாவைக்கோறல் முடியுமா!

அரிச்:—(குருவாகிய துரோணரையும் பாட்டனாகிய வீட்டுமரையும் பரவிச் சிலபாணங்களை அன்னார் பதங்களில் விழும்படி விட்டனன். துரோணர் உளமகிழ்ந்து அவனுக்கெதிரே தேரைச் செலுத்தினர். அவரின் திருவடி வணக்கஞ் செய்து அந்தணரரசே! நந்திருவருளாற் காட்டைவிட்டு நீங்கி உயிரோடு நாட்டில் வந்து சேர்ந்தனம். மற்றும்,

"யாதுமொன் றறியாவென்னை யிவனலா திலையென்றிந்த, மேதினி மதிக்குமாறு வின்முதற் படைகள் யாவும், தீதறத் தந்தவுண்மைத் தெய்வம் நீயென்றுற் பஞ்ச, பாதகம் தன்னிலொன்றுன் பதயுகம் பிழைப்பதையா!

மன்னெடு சூழநின்ற மாசுண முயர்த்த கோவை, மின்னெடு முருமேறென்ன வெகுண்டுயிர் கவர்வதல்லால், நின்னெடும் கிருபனேடும் நின்மகனேடும்மூந்தை, தன்னெடும் புரியேன் வெம்போர், தக்கதோ! சாதம்பாவம்."

சுவாமீ! ஏதொன்று மறியாத வென்னைப் போரில் இவனைத்தவிர வல்லார் பிறரில்லை என்றுலகத்தவர் மதிக்கும்படி வின்முதலிய படைக்கல வித்தையை மாசறக்கற்பித்த கண்கண்ட தெய்வம் தேவரீராயின், நும்மிரண்டு திருவடிகட்கும் துரோகம் செய்வது ஐம்பெரும் பாதகங்களில் ஒன்றல்லவா! அரசரோடு சேனைகள் சூழநின்ற அரவக்கொடியை உயர்த்திய துரியோதனனை மின்னெடுங் கூடிய இடியேற்றைப்போற் கோபித்துக்கோறலேயன்றி நும்மொடும், கிருபாசாரியரோடும், நுஞ்சுதன் அசுவத்தாமனேடும், எமது பாட்டனர் வீட்டுமரோடும் வெஞ்சமர் விளைக்க மாட்டேன். அன்றி இவரொடும் பொருதல் தகுதியாமோ! நிச்சயமான பாவமேயன்றே!

துரோணர்:— பகை முனையைப் பொருட்படுத்தாத வீர! காந்தாரி மைந்தனின் செஞ்சோற்றுக்கடனை நாம் தீர்த்தல் வேண்டும். புலவரின் றெவ்வர் நிவாதகவசர் காலகேயரை வேறல் செய்த, நின் கடும் போர்த்திறத்தை யான் காணும்படி நின் சாபத்தை வளைத்துப் பொருதுவாயாக. (இருவரும் வில் வளைத்தனர். குருவை முன் விற்பிரயோகம் செய்யவிட்டுப் பார்த்தன் பின்னேவினன். துரோணர் முதுகிட்டனர். அசுவத்தாமன் எதிர்த்து மின்னெனப் பின்வாங்கினன். பின் துற்சாதனுதியோர் தூரத்தப்பட்டனர். வீட்டுமரும் எதிர்த்துப் பின்வாங்கினர். துரியோதனன் சென்று மகுட பங்கம் செய்யப்பெற்று முதுகிட்டோடினன். உத்தரன் உவகைக் கூத்தாடினன்.)

துரியோ:—(வீட்டுமரை விளித்து) உமக்கெதிரில் வேத்தவைக்கண்ணன்று நாம் கூறிய காலம் செல்லாமுன் இவன் தோன்றினன் என்பதிலெட்டுணையும் ஐயமின்று. ஆதலின் புல்லிய கானிலின்னமும் போகப்புகறி.

வீட்டுமர்:—செந்நெற் பயிர்கள் கன்னலைப்போற் காட்டக் கன்னற் சோலை கமுகுபோற் காட்டும் கங்கை நீர் நாட! சாந்திரமான வருடத்தால் நென்னலே பாண்டவரின் அஞ்ஞாத வாசகாலம் பூரணமாயிற்று.

(துரியோதனுதியர் தோல்வியுற்றுத் திரும்பினர்.) [காட்சி முடிகிறது.]

**The Jaffna Timber Depot & Workshops**

யாழ்ப்பாண

மரக்காலையும் மரத்தொழில் நிலையமும்

ஆஸ்பத்திரி ரோட், பெரியகடை, யாழ்ப்பாணம்.

கிளை நிலையம் :- புதிய மரக்காலை, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.

உள்நாட்டுக் கைத்தொழிலையே ஆதரியுங்கள்

வித்தியாசாலைகளுக்கும் வீடுகளுக்குமுரிய மரத் தளபாடங்கள் தற்காலத்திற்கேற்ற சிறந்த புதிய மாதிரிகளில் திறமைவாய்ந்த தொழிலாளரைக்கொண்டு செய்விக்கப்பெற்று விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

கதவு நிலைகள், யன்னல்கள் முதலியன செய்வதிற் பிரசித்திபெற்றவர்கள்

எல்லா ஓடர்களும் கூடிய கெதியில் கவனிக்கப்படும்.

விலை சகாயம்! சிறந்த வேலை!

இலங்கையிலுள்ள பலவகையான மரங்களும் எங்களிடம் விற்பனைக்கு இருக்கின்றன.

விடு கட்டுவதற்கும் தளபாடங்கள் செய்வதற்கும் வேண்டிய அளவுகளில் எல்லாவிதமான மரங்களும் இங்கே பெற்றுக்கொள்ளலாம்.

ஒருமுறை வந்து பரீட்சித்துப்பார்த்துத் திருப்தியடையுங்கள்!

தந்தி:- "FURNISH", Jaffna.

A. P. செல்லையா
*Managing Proprietor*

(96) 15-3-36

# கொய்யாத்தோட்டத்தில் வாள்வெட்டு

(நமது நிருபர்)

யாழ்ப்பாணம் 2.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் டிஸ்திறிக் நீதிபதி திரு. C. குமாரசுவாமி அவர்கள் முன்பாகச் சென்ற கார்த்திகைமாதம் 5-ந் திகதியளவில் சுண்டிக்குளியைச்சேர்ந்த கொய்யாத்தோட்ட வாசியாகிய சின்னர் வேலுப்பிள்ளை என்பவரை வாளால் வெட்டிப் பாரதூரமான காயத்தை உண்டாக்கியதாக அவ்வூர் இராசகண்ணி பொன்னுத்துரைமீது தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்காளி சார்பாக முடிக்குரிய நியாயவாதி திரு. S. கனகசபை விவாதித்தார். எதிரி தானுகவே சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்தார்.

முதலாவதாகக் காயமடைந்தவராகிய சின்னர் வேலுப்பிள்ளையை விசாரணைசெய்யப்பட்டபோது அவர் கூறியவற்றின் சாராம்சம் வருமாறு:-

"சம்பவம் நடைபெற்றவன்று இரவு எட்டரைமணியளவில் நான் அயல்வீட்டிலிருந்து எனது வீட்டை நோக்கி வந்துகொண்டிருக்கையில் எனது பிள்ளைகள் இட்ட சத்தத்தைக் கேள்வியுற்று வீட்டுக்கு ஓடினேன். அங்கு போனதும் விஷயம் என்னவெனக் கேட்க, அவர்கள் 'பொன்னுத்துரை வேலியை முறித்துவிட்டுப் போகிறுன்" என்றதும் நான் வெளியே வந்தேன். அப்போது பொன்னுத்துரை (எதிரி) யைக் கண்டு "ஏன் வேலியை முறித்து விட்டுப் போகிறுய்" என்று கேட்க, அவன் தூஷணமாகப் பேசிவிட்டுத் தனது வலதுகையை ஓங்கினுன். உடனே நான் எனது வலதுகையை உயர்த்திப்பிடித்தேன். அப்போதுதான் 1-ம் வெட்டு வீழ்ந்தது. உடனேயே வாளால் வெட்டியதாக மட்டுப்படுத்தினேன். பின்னரும் வெட்டினுன். அவ்வெட்டு இடது முழங்கையில் பட்டது. அத்தருணத்தில் சத்தமிட்டேன், திரும்பிப்பார்த்தபோது கோணையாவும் செபஸ்தியாம்பிள்ளையும் நின்றதைக் கண்டேன். அவர்களையும் அழைத்துக்கொண்டு நேராக விதானை வீட்டிற்குச்சென்று முறையிட்டேன். அவர் எம்மைக் கூட்டிக்கொண்டு பொலிஸ் ஸ்டேசனுக்குச் சென்றுர். அங்கும் எனது வாக்குமூலம் எடுக்கப்பட்டதன்மேல் ஆஸ்பத்திரிக்கு அனுப்பினுர்கள். அங்கு 36 நாட்கள் வரையிருந்தேன்."

சாட்சியை எதிரி குறுக்கு விசாரணை செய்ததின்மேல் யாக்கோ செபஸ்தியாம்பிள்ளையை விசாரணைசெய்கையில் அவர் கூறியவற்றின் சாராம்சம் வருமாறு:-

"அன்றையதினம் இரவு எட்டேகால்மணியளவில் நான் எனதுதோட்டத்திற்குச்சென்று திரும்பிவரும்போது காயமடைந்தவரது வீட்டுக்குச் சமீபமாக ஒழுங்கையில் எதிரி காயமடைந்தவரது கழுத்துக்கு இலக்கு வைத்து வாளால் ஓங்கினுர். உடனே காயமடைந்தவர் கையால் தட்டினுர். பின்னரும் ஓர்முறை ஓங்க அவர் இடதுகையைக்கொடுத்தார். அப்போது "பொன்னுத்துரை வெட்டுகிறுன் கையறுந்துபோச்சு" எனக் குளறினுர். நானும் கோணையாவும் சற்றுத் தூரமாகவே நின்று பார்த்துக்கொண்டுநின்றேம். பயமிகுதியினுல் எதிரியையாவது வாளையாவது பிடிக்கவில்லை. பின்னர் நானும் கோணையாவும் காயமடைந்தவருமாக விதானைவீட்டுக்குப்போய் முறையிட அவர் எம்மையும் அழைத்துக்கொண்டு பொலிஸ் ஸ்டேசனுக்குச் சென்றுர். அங்கும் எமது வாக்குமூலங்கள் பதியப்பட்டன.

பின்னர் சிவகுரு கோணையாவும், கொழும்புத்துறைப்பகுதிப் பொலிஸ் விதானை திரு. K. திருஞானசம்பந்தரும், பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டர் திரு. J. W. அற்றிக்கலையும் விசாரணை செய்யப்பட்டார்கள். இத்துடன் வழக்காளிபக்க விசாரணை முடிந்தது.

யாழ்ப்பாணம் 3

இன்றையதினம் கோடு கூடியதும் நியாயவாதி M. A. மாசிலாமணி அவர்கள் நேற்றையதினம் சுப்ரீம் கோட்டிலிருந்தமையால் இங்கு வரமுடியவில்லையெனக் கூறி எதிரிக்காக ஏற்பட்டார்.

எதிரி சாட்சியாக விசாரணை செய்யப்படுகையில் சம்பவம் நடைபெற்றவன்று சாயங்காலம் 6 மணியளவில் கோணையாவையும் தந்தையான நட்டாமுட்டி சிவகுருவையும் பேசியதாகவும் அதனுலேயே இவர்கள் இவ்வாறு கூறுவதாகவும் பொருள்படச் சாட்சியங் கூறினுர்.

நீதிபதி வழக்கைத் தள்ளுபடி செய்து எதிரியை விடுதலை செய்தார்.

# கள்ளுவெறியில் காரோட்டம்

## உள்ளேயிருந்தவர் விழுந்திறந்தமை

(நமது நிருபர்)

யாழ்ப்பாணம் 2

யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் பொலிஸ் நீதிபதி திரு V. S. ஜெயவிக்கிரம அவர்கள் முன்பாக புன்னலைக்கட்டுவன் வாசியாகிய காசி செல்லையா என்பவர்மீது சென்ற 21-1-36ந் திகதியன்று X 2514ம் நம்பர்க்காரை அசாக்கிரதையாகவும், கவலையீனமாகவும், கெதியாகவும் செலுத்தித் தமையனுகிய காசிவைரமுத்து என்பவரது மரணத்தை வருவித்ததாகத் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்காளிசார்பாக சப்-இன்ஸ்பெக்டர் A. I. வைமனும் எதிரியின் சார்பாக நியாயதுரந்தரர் சாம். ஏ. சபாபதியும் ஏற்பட்டார்கள்.

அப்போது கந்தையா சின்னத்துரை என்பவர் கூறிய சாட்சியத்தின் சாராம்சம் வருமாறு:—

"அன்றையதினம் நானும் ஊரெழுவிலிருந்து இந்தக்காறிலேறிப் பேனேன். ஊரெழுவிலிருந்து கார் புத்தூருக்குப் போனது. அங்குள்ள தவறணைக்கருகே கார்நிறுத்தப்பட்டதும் இருவர் உட்சென்று கள்ளுவாங்கிவந்தார்கள். என்னைத்தவிர யாவரும்அதாவதுஎதிரியும் பருகினுர்கள். எவ்வளவுக்குக் கள்ளுவாங்கினுர்கள் என்பது எனக்குத்தெரியாது. காரின் முன் ஆசனத்தில் 3பேரும் பின் ஆசனத்தில் 3 பேருமாக இருந்தோம். பின்னர் புன்னலைக்கட்டுவனுக்கு போய் அங்கிருந்து அச்சுவேலிக்குச் சென்றேம். அங்கு எதிரியினது தமையனுகிய காலகதியடைந்த வைரமுத்துவையும் அழைத்துக் கொண்டு வந்தார். பின்னரும் கார்புறப்பட்டுச் சென்று சந்தியடியில்நின்றது. நானும் சின்னத்துரையும் இறங்கி பைசிக்கிள் விசாரணைபண்ண எதிரியும் தமையனும் இறங்கி எங்கேயோ போனுர்கள். திரும்பிவரும்போது எதிரி 1 போத்தல் மண்எண்ணையுடன் வந்தார். ஆனுல் அவர்கள் கள்ளுக்குடித்தார்களோ என்பது எனக்குத்தெரியாது. பின்னரும் புத்தூருக்குச் சென்றேம். சம்பவம் நடைபெற்ற இடத்துக்குக்கிட்டக் கார் சிறிது வேகமாகப்போனது. அப்போது எதிரேயிருந்தும் "கோர்ன்" சப்திக்காது ஓர்கார்வந்தது. வளைவானறேட்டிலே இருகார்களும் விலத்தின. அப்போது கார்கள் மோதுண்டிருக்குமென மிகவும்பயந்தேன். ஆனுல சாரதி ஒரேவெட்டு வெட்டினுர். கார்கானுக்குள் இறங்கிக் கற்களுக்கு மேலாக ஓடிக் கள்ளிப்பற்றையுடன் மோதுண்டது. அந்தசமயத்தில் காரின்கதவும் தானுகத்திறபட காலகதியடைந்த வைரமுத்துவும் கீழேவிழ்ந்தார். அத்துடன் காரின் ஓர்சில்லின் ரயரும் காற்றுப் போய்விட்டது. உடனே எதிரியும் கணபதிப்பிள்ளையுமாக அவரைத்தூக்கி ஓரிடத்தில் தரையிலே வளர்த்திவிட்டு காருக்குவேறேர் ரயரைமாட்டினுர்கள். அதன்மேல காலகதியடைந்தவரை ஏற்றிக்கொண்டு புன்னலைக்கட்டுவனுக்கு வந்தோம். காலகதியடைந்தவர் தன்னைத்தனது சகோதரி வீட்டில்விடும்படி சொன்னமையால் அங்குபோனும். அவரங்கில்லை. பின்னர் எதிரி ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்வதாகக் கூறிக் காரைச் செலுத்தினுர். நான்சந்தியில் இறங்கிவிட்டேன. அதன் பின்னர் என்ன நடைபெற்றதெனத் தெரியாது. பிற்பாடு இறந்துபோய் விட்டதாகக் கேள்விப்பட்டேன்.

நீதிபதி இவ்வளவில் வழக்கை வருகிற 16ந் திகதிக்கெனத் தவணையிட்டார்.

### வித்தியாகர்த்தர் நியமனம்

**திரு. L. Mc. D. றேபிசன் அவர்கள்**

இலங்கைப் புதிய வித்தியாகர்த்தாக திரு. L. Mc. D. றேபிசன் அவர்களை நியமனஞ் செய்திருப்பதாக குடியேற்ற நாட்டு மந்திரியாரிடமிருந்து ஓர் செய்தி கல்வி நிர்வாக சபைகளுக்குக் கிடைத்திருக்கிறது. இவர் இப்பதவிக்கு அநேகமுறை பதில் கடமை பார்த்திருக்கிறுர்.

### அரசாங்கசபை

இலங்கை அரசாங்கசபை சென்ற மார்ச்சுமீ 31உ கூடி சில நிர்ணயங்களுக்கு அறிவித்தல் கொடுத்தபின் வரும் மே மீ 12ந் தேதி 2-30 மணி வரைக்கும் விடுதலை பெற்றிருக்கிறது சில நாட்களுக்கு நிர்வாக சபைக் கூட்டம் மாத்திரம் நடைபெறுமாம்.


## வெளிவந்துவிட்டது!

திரு. வே. சிவக்கொழுந்து அவர்கள் இயற்றிய

புதிய
**தமிழ் எழாந்தரக் கணிதம்**

ஜே. எஸ். ஸி., எஸ். எஸ். ஸி. வகுப்புகளுக்கும் உபயோகிக்கத்தக்கது.

கண்ணைக்கவரும் அழகியபதிப்பு! கருத்தைக்கவரும் உயரிய விளக்கம்!

இதுபோன்ற ஒரு கணிதநூல் தமிழில் இதுவரையில் வெளிவந்ததேயில்லை.

பிரதி விலை ரூபா 1-00

புதிய
**தமிழ் அக்ஷர கணிதம்**

[3-ம் பதிப்பு]

வித்தியாசாலைகளினுபயோகத்துக்குரியதென 13-8-32-ல் வித்தியாகர்த்தரின் அங்கீகாரம்பெற்றது

பிரதி விலை சதம் 80

சகல புஸ்தக வியாபாரிகளிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

*Publishers :-*

வட லங்கா புத்தகசாலை, பருத்தித்துறை (Point Pedro)


பற்றற்றேமென்பவரது பொய்யொழுக்கம் பின்பு என்செய்தோமென்செய்தோமென் றிரங்கும்படிதுன்பங்களைத்தரும்.

Registered as a Newspaper. 16 Pages

# "The EeLAKESARI"

THE LEADING NATIONALIST TAMIL WEEKLY OF CEYLON

LARGEST CIRCULATION GUARANTEED — BEST MEDIUM FOR ADVERTISEMENT

Vol. 6 } Chunnakam, Jaffna, 5th April 1936, Sunday. { No. 38

அகில இலங்கை

## ஆதாய சமுதாயம்

மாதமொன்றுக்கு ரூபாய் 2 வீதம் 100 மாசங்களுக்குச் செலுத்தி ரூபாய் 275 பெறமுன் வாருங்கள்.

கமம், வியாபாரம் ஆதிய வற்றுக்கு முதல்பெற விரும்பினுல் மேற்படி சமுதாயத்தில் வந்து ஏலவே சேர்ந்து கொள்ளுங்கள். வேலையில்லாத் திண்டாட்டத்தை யொழிக்க எமது சமுதாயத்தை யாதரியுங்கள்.

எம் தேசப்பணத்தை எம் தேச சமுதாயங்களில் செலுத்தி செல்வப்பேற்றை யடைய முன்வாருங்கள். வருடமொன்றுக்கு ரூபாய் 24 செலுத்தி அங்கத்துவம் பெறுவோருக்கு இலகுவான முறையில் இறுக்கக் கூடிய கடன்கள் குறைந்த வட்டிக்குக் கொடுக்கின்றேம்.

உயர்ந்த வட்டி விகிதத்தில் தவணைவைப்பு, நடைவைப்பு, சம்பாத்திய வைப்புகளுக்கு பணம் ஏற்றுக் கொள்வோம். அங்கத்துவம் பெற விரைந்து வாருங்கள். தாமதமடைந்து மனம் வருந்தாதீர்கள். வேண்டிய விபரங்கட்கு கீழ்க் கண்ட விலாசத்துக்கு எழுதி அறிக.

*Manager*

**LANKA BENEFIT CO.,**

Vannarponnai

(175) 5-8-34.

## திருநெல்வேலி ஒற்றுமைநிதி

(வரைவுளது)

**அதிகாரம்பெற்ற மூலதனம் ரூ. 5,00,000**

ஒரு பங்கு 25 சதமாக எண்பது மாதங்கள் செலுத்தி

**ரூ. 25ம் ஆதாயமும் பெறலாம்.**

தனிகத்தொழிலும் உணவுப்பொருள் வியாபாரமும்
திருநெல்வேலியில் இலாபகரமாய் நடக்கின்றது.

வேண்டிய இடங்களில்
கிளை ஸ்தாபனங்கள் திறக்கப்பெறும்

தேசீயகருமங்களை வளர்ப்பதால்மாத்திரம் சுயேச்சை பெறமுடியும்
ஆதலால்
முதலைவளர்த்து, வேலையளித்து, கைத்தொழிலை உயிர்ப்பிக்கும்

**நோக்கமுடைய இந்நிதியை ஆதரியுங்கள்.**

இலகுவானமுறையில் இறுக்கக்கூடிய கடன்கள்கொடுக்கிறேம்
உயர்ந்த வட்டிவிகிதத்தில், தவணைக்கும் நிபந்தமாயும்
சம்பாத்தியத்திலும், கடைக்கணக்கிலும்
பணம் ஏற்றுக்கொள்ளுவோம்.

**பங்குகளுக்கு முந்துங்கள்**

கைராட்டினத்தில் நூற்ற நூலும், கைத்தொழில் பொருட்களும்
சந்தாவுக்கு ஏற்றுக்கோள்ளப்படும்.

வ. சோமசுந்தரம், காரியாதிகாரி

(30) 18-11-34—11-35.

விலை நிதானம்! நயம் சரக்கு!

## எங்கே?

யாழ்ப்பாணம் பெரியகடை
கேங்காசத்திரத்திற்கு மேற்குப்பக்கமாய் இருக்கும்

**மு. குமாரசாமிப்பிள்ளை கடையில்**

நெல், அரிசி முதலிய தானியவகைகளும்,
கயிற்றுவகைகளும், நூல், வாளியும்
பலவிதமான சாய்ப்புச்சாமான்களும்
விலை நிதானமாயும் நயம் சரக்காயும் கிடைக்கும்.


கொழும்பு - வெள்ளவத்தை 2, 4, 6, 8, 10, 20-ம்
நம்பர் நூல் தொகையாகவும் சில்லறையாகவும்
யாழ்ப்பாணம் இரகுநாதையர் பஞ்சாங்கம்
தொகையாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

மு. குமாரசாமிப்பிள்ளை,
பெரியகடை, யாழ்ப்பாணம்.

(22) 19-2-34

## பவுண்மார்க் ஓடுகள்

இப்பொழுதும் விசேடமாக மதிக்கப்படுவதும் பவுண்மார்க் ஓடுகள் இவைகளே.



இலங்கை இந்தியா முதலிய கீழைத்தேசங்களில் அனலுக்கும் குளிருக்கும் நலனுக்கும் பேலனுக்கும் பாவனைக்கும் மாதிரிக்கும் ஏற்புடைத்தாய், அழகும் அழுத்தமும் படிவும் மலிவும் மிருதுவும் மேன்மையுமுள்ளதேனப் பரீட்சித்த பலர் கண்ட சிறப்பும் தீர்க்கமுமுள்ள ஓடுகள் இவைகளே.

பவுண்மார்க் ஓடுகளெனச் சொல்லி மற்றைய ஓடுகளைக் காட்டும் போதும் சில பவுண்மார்க் ஓடுகளை இடையிடையே குறிப்பாக வைத்திருந்து எடுத்துக் காட்டித் தமது ஓடுகளை விற்பவரிடமும் கவனமாயிருங்கள். பவுண்மார்க் ஓடுகளின் ஏசண்டுகள் நாங்களே.

இங்ஙனம்

**சி. வீரகத்திப்பிள்ளை அன்டு சன்ஸ்**

(இவை விற்குமிடங்கள்)

யாழ்ப்பாணம் { பெரியகடை, பறங்கித்தெரு }
பருத்தித்துறை ....
வல்வெட்டித்துறை
காங்கேயன்துறை
} சி. வீரகத்திப்பிள்ளை அன் சன்ஸ்

காரைநகர் .... .... சி. க. ஆறுமுகம்பிள்ளை
ஊர்காவற்றுறை .... பி. ம. தம்பிஐயா அன் சன்ஸ்

(103) 23-9-34.

## Sri Lanka Book Depot

## ஸ்ரீ லங்கா புத்தகசாலை

**வண்ணார்பண்ணை**

ஐயன்மீர்!

யாழ்ப்பாணம் – வண்ணார்பண்ணை, கதிரேசன் கோவிலுக்கு வடக்குப்பக்கமாக்விருக்கும் ஸ்ரீ லங்கா புத்தகசாலையில்

பள்ளிக்கூடங்களுக்குத் தேவையான தமிழ், இங்கிலீஷ் புத்தகங்களும், ஆசிரிய, பாலபண்டித, பண்டித வகுப்புகளுக்குரிய இலக்கிய, இலக்கண, இதிகாச, புராண நூல்களும், வேறு இலங்கை இந்திய பதிப்புகளும்

பென்சில், பேனு முதலியனவும், கோப்பி (Ex. Copy) கணக்குப்புஸ்தகங்கள், அச்சுக்கூடங்களுக்குத் தேவையான எல்லாவகையான கடதாசிகளும் சகாயமான விலைக்கு

தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

வியாபாரிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் தக்க கழிவு கொடுக்கப்படும்

ஒருமுறை பரீட்சித்துப்பாருங்கள்

அதிபர், ஸ்ரீலங்கா புத்தகசாலை,
வண்ணார்பண்ணை.

(36) 6-10-35

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்–மயிலிட்டிதெற்கு "திருமகள் நிலைய" த்திலிருக்கும் நா. போன்னையா என்பவரால், சுன்னுகம் "தலையாட்டி"யி லுள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1936-ம்ஞு ஏப்பிரல் மீ 5-ந் உ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.